# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 10 செவ்வாய்க்கிழமை (27.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 305


# ஐ.நா. செயலர் - ஜனாதிபதி சந்திப்பில் இரு தரப்பும் காரசாரமான விவாதம்

கொழும்பு, செப். 27

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நியூ யோர்க்கில் நடைபெற்ற சந்திப்பின் போது பரஸ்பரக் குற்றஞ்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. ஓராண்டுக்கு முன்னர் தனக்கு வாக்குறுதியளிக்கப்பட்டபடி, மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகமான உள்நாட்டு விசாரணை ஒன்றை மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்தவில்லை என்பதை பான் கீ-மூன் அந்தச் சந்திப்பில் நினைவுபடுத்தினார். பதிலுக்கு இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழு ஐ.நா. செயலருக்கு ஆலோசனை வழங்கவே நியமிக்கப்பட்டது என்று கூறப்பட்டபோதும், அந்த வாக்குறுதி மீறப்பட்டுவிட்டதாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டி உள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ-மூனுக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு கடும் வாதப்பிரதிவாதங்களையும், குறுக்குவிசாரணைகள், குற்றச்சாட்டுகள் நிறைந்ததுமாகவே இருந்தது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இரு தரப்புக்களுமே இத்தகைய ஒரு நிலையை எதிர்ப்பார்த்துத் தயார்ப்படுத்தல்களுடனேயே சந்திப்பில் கலந்துகொண்டன.

ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ-மூன், ஜனாதிபதியிடம் அவசரகாலச்சட்டம் தொடர்பாக கேள்வி எழுப்பினார்.

பக் 27

# ஐ.நாவுடன் பேச வெட்கமில்லை: மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, செப். 27

அர்த்தமுள்ள வகையில் ஐ.நாவுடன் பேசுவதற்கு இலங்கை அரசு ஒருபோதும் வெட்கப்படவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க்கில் தெரிவித்தார்.

''நியூயோர்க்கிற்கான இந்தப் பயணம் குறித்து பெரிதும் மகிழ்கிறேன். இது மிகப் பயனுள்ள வகையில் அமைந்திருந்தது. எமது சந்திப்புக்கள் மூலமாக உண்மையான நிலைவரத்தை அடுத்தவருக்குப் புரிய வைக்க முடிந்தது'' என்று, ஓய்வாக இருந்த ஒரு பொழுதில் ஜனாதிபதி அமெரிக்காவின் 'டெய்லி எவ்.ரி.' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது இந்தப் பயணத்தின் போது, நியூயோர்க்கில் வைத்து ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன், அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா, இந்தியா, ஈரான், பாலஸ்தீனம், கட்டார், கொலம்பியா, சல்வேனியா, நைஜீரியா, உகண்டா, நேபாளம், கிர்கிஸ்தான் ஆகிய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பிரிவுத் துணைச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக் மற்றும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா ஆகியோர் மரியாதை நிமித்தம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர்.

அமெரிக்காவின் பிரபல பத்திரிகைகளான 'வோல் ஸ்ரீட் ஜேர்னல்' மற்றும் 'தி எக்கனமிஸ்ட் டைம்ஸ்' ஆகியன ஜனாதிபதியை நேர்காணல் செய்துள்ளன.

இதேவேளை, அமெரிக்க நீதிமன்றம் ஒன்று ஜனாதிபதிக்கு அழைப்பாணை அனுப்பி இருந்த போதும் அவரது பயணத் திட்டத்தில் மாற்றம் ஏதுமில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)



07 கிணற்றினுள் உணவுப் பொருள்கள்



10 கூலி வேலை செய்தே அம்மா படிப்பித்தார்



14 தமிழர் தலைவிதியை தீர்மானிக்குமா?



24 வேலணை ஐயனார் அணி

## ஆற்றல் அற்றவர் ஜனாதிபதி மஹிந்த: ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 27

நாட்டின் எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்கும் ஆற்றல் ஜனாதிபதியிடம் இல்லையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மாத்தளைப் பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே

பக் 27

## கோஷ்டி மோதலில் வவுனியாவில் ஒருவர் சாவு

வவுனியா, செப். 27

வவுனியா, ஓயார் சின்னக்குளத்தில் இரு குழுக்களுக்கிடையில் நேற்று இடம்பெற்ற பயங்கர மோதலில் ஒருவர் உயிரிழந்தார். 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

யோகாநந்தன் கமல்ராஜ் (வயது 40)

பக் 27

# ஜே.வி.பி. உடைவு 'றோ'வின் சதி!

## கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பரபரப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்ரெம்பர் 27

ஜனத்தா விமுக்திப் பெரமுனவில் (ஜே.வி.பி.) ஏற்பட்டுள்ள உட்கட்சிப் பிரச்சினைகளுக்கு இந்தியாவின் உளவுத்துறையான 'றோ' (Research and Analysis Wing) பிரதான காரணம் என்று பரபரப்புக் குற்றஞ்சாட்டு ஒன்றைத் தெரிவித்திருக்கிறார் அந்தக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

ஜே.வி.பி. கட்சியின் கொள்கைப் போக்கில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அதிருப்தியாளர்கள் குழு ஒன்று தோன்றி உள்ளது. அவர்கள் கட்சித் தலைமையைக் கைப்பற்ற முயன்று வருகிறார்கள். அது சாத்தியப்படாத பட்சத்தில் பிரிந்து சென்று புதிய கட்சி ஒன்றை உருவாக்கவும் முயற்சிசெய்து வருகிறார்கள். இது குறித்துத் கருத்துத் தெரிவித்த கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர், 'றோ'வின் கைங்கரியமே கட்சியில் அதிருப்தியாளர்கள் தோன்றக் காரணம் என்றார்.

தனது பெயரை வெளியிடக்கூடாது என்ற நிபந்தனையுடன் பேசிய அவர் தெரிவித்ததாவது:-

''ஜே.வி.பியை உடைப்பதற்கான இந்தச்

பக் 27

### தலைமையை கைப்பற்றுவோம்: மாற்றுக்குழு நம்பிக்கை

கட்சியின் தலைமைத்துவத்தைத் தாம் இந்த வாரம் முற்றாகக் கைப்பற்றி விடுவோம் என்று ஜே.வி.பியின் மாற்றுக் குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன என்று மாற்றுக் குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறினார். ஜே.வி.பியின் தலைமையகம் மற்றும் முக்கியமான அமைப்புகளின் நிறைவேற்று

பக் 27

### கிணற்றில் விளையும் அரிசி



வலி.வடக்கில் கிணறு ஒன்றினுள் இருந்து மூடை மூடையாக அரிசி மற்றும் பலசரக்குப் பொருள்கள் எடுக்கப்பட்டன. விரிவான செய்தி 7ஆம் பக்கத்தில். (86)

# ஈழத் தமிழர்கள் 37பேர் கேரளாவில் திடீர் கைது

சென்னை, செப்.27

சந்தேகத்துக்குரிய நடமாட்டம் காரணமாக எர்ணாகுளம் மாவட்டம் கொத்தமங்கலத்தில் 37 இலங்கைத் தமிழர்களைப் பிடித்து கேரள பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

உளவுத்துறை அளித்த தகவலின் அடிப்படையில் 26 ஆண்கள், 7 பெண்கள் மற்றும் 4 குழந்தைகள் அடங்கிய குழுவினர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழகத்தில் பல்வேறு அகதிகள் முகாம்களில் தங்கியிருந்த அவர்கள் கொத்தமங்கலத்துக்கு

பக் 27

# வீரவில படைமுகாம் ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறியது

கொழும்பு, செப். 27

அம்பாந்தோட்டை வீரவில இராணுவ முகாமில் நேற்று மாலை இடம்பெற்ற வெடிவிபத்துச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியசாலைக்குள் இந்த வெடிவிபத்து நேற்றுமாலை ஏற்பட்டதாக திஸ்ஸ மஹாராம பொலிஸார் தெரிவித்தனர். வீரவில இராணுவ முகாம், வீரவில விமானப்படை முகாமுக்கு அருகில் அமைந்துள்ளது. சம்பவத்தில் காயமடைந்த சிப்பாய் அதிர்ச்சிக்குள்ளான நிலையில் இருக்கிறார் என்று திஸ்ஸமஹாராம வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# சட்டத்தரணிகள் போராட்டத்தின் எதிரொலி; 7 பொலிஸார் நீதிமன்றில்

யாழ்ப்பாணம், செப். 27

வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வாவின் விசேட பணிப்பின்பேரில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 7 பேர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்துச் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்து இழுத்துச் சென்றவர்கள் இவர்களே என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சட்டத்தரணிகள் நடத்திய போராட்டத்தின் எதிரொலியாக இந்த 7 பொலிஸாரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட உள்ளனர்.


யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்  தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா இவர்களை

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் தெளிவாக காணப்படும்.

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
புரட்டாதி 26 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,734.60↑
மிலங்கா(MPI) 6,023.93↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,425.90Mn
பங்குகளின் அளவு(No.) 88.80Mn
வியாபாரம்(No.) 18,148
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
கரிச்சந்திரா 2400.00
கலாமது 2999.00
எச்.வி.ஏ பூட் 58.00
செலான் மேச்சன்(x) 0.90
செஸ் அக்குரோ 6.60
குறைவு(Top 5 losers) - விலை Rs.
பேறுவல இன் 101.00
கெஸ்அனேஸ் 365.10
செலிங்கோ இன்சூரன் 712.50
பிறின் கெயா 39.00
காகோ போ(b)ட் 120.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

வலி. வடக்கில் அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில்

# 1,100 குடும்பங்கள் மீளக்குடியமர்வு; அமைக்கப்பட்ட வீடுகள் 250 மட்டுமே

யாழ்ப்பாணம், செப்.27

வலி. வடக்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஆயிரத்து 100 குடும்பங்கள் வரை மீளக் குடியமர்ந்துள்ள போதிலும் 250 வீடுகளே வீட்டுத் திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வலி. வடக்கின் பெரும்பாலான பகுதிகளில் கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் மீளக்குடியமர்வு இடம்பெற்று வருகின்றது. இதனடிப்படையில் விடுபட்ட பகுதிகளில் மீளக் குடியமர்வதற்கு 4 ஆயிரத்து 700 குடும்பங்கள் வரையில் பதிவு செய்துள்ளன.

இருப்பினும் ஆயிரத்து நூறு குடும்பங்கள் வரையிலேயே மீளக் குடியமர்ந்துள்ளனர். இவர்களுக்கு யு.என்.டி.பி. யின் நிதியுதவியில் 50 நிரந்தர வீடுகளும், யு.என்.எச்.சி. ஆர் நிதியுதவியில் 50 வரை நிரந்தர வீடுகளும், நோர்வே அகதிகள் பேரவையினால் 150 வரை நிரந்தர வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும் இந்தியன் வீடமைப்புத் திட்டத்தில் 440 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் 126 வீடுகள் புனரமைத்துக் கொடுக்கப்பட வுள்ளன.

இதுவரை விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் 4 ஆயிரத்து 700 குடும்பங்கள் வரையில் மீளக் குடியமர்வுப் பதிவு செய்துள்ள போதும் 690 வீடுகள் வரையிலேயே அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. அத்துடன் விடுவிக்கப்படாத கிராம சேவகர் பிரிவுகளில் மீளக் குடியமர்வதற்கு, 7 ஆயிரம் குடும்பங்கள் வரை விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)

## வல்லிபுர ஆழ்வார் கொடியேற்றத்தில் திரளான பக்தர்கள்

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் கொடியேற்றம் பெருந்திரளான பக்தர்களின் பக்திக் கோஷங்களுக்கு மத்தியில் நேற்றுப் பகல் 11.55 மணிக்கு நடைபெற்றது.

வல்லிபுரக் கோயில் பெருந் திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு பெரியாழ்வார் ஆச்சிரம மடம், லக்சுமி நாராயணாமடம், பரந்தாமன்மடம் ஆகியவற்றில் நேற்று முதல் தினமும் அன்னதானம் நடைபெற்று வருகிறது.

கோவில் சுற்றாடலில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக சுகாதாரப் பரிசோதகரின் மேற்பார்வையில் பருத்தித்துறை பிரதேச சபையைச் சேர்ந்த தொழிலாளர்கள் தினமும் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-236)

## மதுபான விற்பனை நிலையங்கள் மீது திடீர் பாய்ச்சல்

யாழ். மாவட்டத்திலுள்ள மதுபான விற்பனை நிலையங்கள் மீது கொழும்பிலிருந்து வந்த விசேட பரிசோதனைக் குழுவினர் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர். பல மதுபான விற்பனை நிலையங்களில்விற்பனைவிலைக்கு அதிகமாக விற்பனை செய்தமை, கடைக்குள் வைத்து குடிப்பதற்கு மதுபானம் விற்றமை போன்றவற்றில் ஈடுபட்ட மதுபான நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## குடாநாட்டு மருத்துவர்களுக்கு தீவகத்தில் கடற்படை விருந்து

### வேகப்படகில் கடல் சுற்றுலாவும் நடந்தது

யாழ்ப்பாணம்.செப்.27

யாழ்.மாவட்டத்திலுள்ள மருத்துவர்களை அழைத்து மண்டைதீவில் நட்பு ரீதியான விருந்து வழங்கி மகிழ்வித்துள்ளனர் கடற்படையினர்.யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் மற்றும் தீவகப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் இந்த விருந்தில் கலந்துகொண்டனர்.சில மருத்துவர்கள் தமது குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணிக்கு குறிகட்டுவான் துறை முகத்திலிருந்து 'வடதாரகை' படகு மூலம் வைத்தியர்கள் நெடுந்தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு கடற்படையினரின் வாகனங்கள் மூலம் நெடுந்தீவுப் பிரதேசங்களைச் சுற்றிக்காட்டினர். பின்னர் நெடுந்தீவில் கடற்படையினர் நடத்தி வரும் ஆடைத் தொழிற்சாலையையும் மருத்துவர்கள் பார்வையிட்டனர். கடற்படையினர் மக்களுக்காக அமைத்து வரும் வீடுகளையும் சுற்றிக்காட்டினர். மருத்துவர்களுடன் நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளும் முகமாக இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டதாக கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாலை 4 மணியளவில் மண்டைதீவுக்கு அழைத்து வரப்பட்ட மருத்தவர்களுக்கு அங்கு அமைந்துள்ள கடற்படை முகாமில் விருந்துபசாரம் வழங்கப்பட்டது.3 மணிநேரம் நடந்த இந்த விருந்தில் மதுவும் தாராளமாகப் பரிமாறப்பட்டது. அதன் பின்பு கடற்படையினர் அதிவேகப் படகுகள் மூலம் யாழ்ப்பாணக் கரையோரப் பிரதேசங்களை மருத்துவர்களுக்குச் சுட்டிக்காட்டினர். இந்தச் சுற்றுலாவில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் உட்பட சிங்கள மருத்துவர்களும் தமிழ் மருத்துவர்களும் கலந்துகொண்டுள்ளனர். யாழ்.மாவட்டத்தில் இவ்வாறானதொரு நிகழ்வு இதுவரை காலமும் நடைபெறவில்லை என்று கடற்படை அதிகாரி பெருமிதத்துடன் கூறினார். (உ-4-15)

## பிரகாசமிக்க மின்குமிழ் பொருத்தியதால் நெல்லியடி பஸ் நிலையம் ஒளிமயம்

நெல்லியடி பஸ்நிலையத்தில் அதிக பிரகாசம் கொண்ட மின்குமிழ் ஒன்றை கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை துணைத் தவிசாளர் இ. சாந்தசொரூபன் தனது சொந்தச் செலவில் பொருத்தியுள்ளார்.

மின்குமிழ்கள் இன்றி நெல்லியடி பஸ் நிலையப் பகுதி ஒரே இருட்டாக கடந்த காலங்களில் காணப்பட்டது. இதனால் பயணிகள் மற்றும் பொதுமக்கள் இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் பஸ்நிலையப் பகுதியில் நடமாட பெரிதும் சிரமப்பட்டு வந்தனர்.

இதனையடுத்து, துணைத் தவிசாளர் தனது சொந்தச் செலவில் மின் குமிழ் ஒன்றைப் பொருத்தி அந்தப் பகுதியில் வெளிச்சத்தை ஏற்படுத்தியுள்ளார். சாந்த சொரூபனின் முன்மாதிரியை ஏனையோரும் பின்பற்றினால், எமது பிரதேசம் ஒளிவீசும் என்று சமூக ஆர்வலர் ஒருவர் கூறினார். (ஒ-236)

## சிறு குற்றங்கள்

பொது இடங்களில் மதுபோதையில் இருந்த தும்பளை மற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்த இரண்டு பேர் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

பருத்தித்துறைப் பொலிஸார் இவர்களை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் இரண்டாயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ஒ-4)

* * *

வாகனத்தில் ஆபத்தான முறையில் பொருள்களை ஏற்றிச் சென்ற மட்டக்களப்பு, ஏறாவூரைச் சேர்ந்த நபர் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று மூவாயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இவ்வாறு வாகனம் செலுத்திச் சென்ற சாரதிக்கு எதிராக பருத்தித்துறை பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதன்போதே நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பிரஸ்தாப நபருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதத் தொகையைச் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஒ-4)

* * *

வாகனப் பதிவின்றியும், காப்புறுதிப் பத்திரமின்றியும் வாகனம் செலுத்திச் சென்ற சுழிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

பருத்தித்துறைப் பொலிஸாரால் பிரஸ்தாப நபருக்கு எதிராக நீதிமன்றால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கை விசாரித்த நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மேற்படி அபராதத்தை விதித்தார். (ஒ-4)

* * *

ஆபத்தான முறையில் வீதியில் வாகனம் செலுத்திச் சென்ற பருத்தித்துறையைச் சேர்ந்த நபர் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று மூவாயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

பொலிஸார் அவருக்கெதிராக வழக்குப் பதிவு செய்து பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தினர். வழக்கை விசாரித்த நிதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் பிரஸ்தாப நபருக்கு மூவாயிரம் ரூபாவை அபராதமாக விதித்துத் தீர்ப்பளித்தார். (ஒ-4)

* * *

அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்ற பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவருக்கு பருத்தித்துறை நீதிவான் 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சாதாரண சிறைத் தண்டனை விதித்தார்.

கைது செய்யப்பட்ட பிரஸ்தாப நபரை பருத்தித்துறை நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப் படுத்தினர். விசாரணையை மேற்கொண்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மேற்படி தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். (ஒ-4)

# நிகழ்வுகள்

## தமிழ் விழா

யாழ்ப்பாணம், செப்.27

யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ் விழா இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரியின் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத் தலைவர் அ. புவனகாந் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக கோப்பாய் அசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-10)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.27

நல்லூர் கோட்டக் கல்வி அதிபர்களுக்கான விசேட கூட்டம் இன்று மதியம் 12 மணிக்கு யாழ். கலட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்களைக் கலந்துகொள்ளுமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராசா அறிவித்துள்ளார். (ஒ-10-311)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், செப்.27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நவராத்திரிவிழா - 2011 எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் அடுத்தமாதம் 6ஆம் திகதி வியாழக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையூட்டிய ரூ. 32 லட்சம் பெறுமதிமிக்க புகையிலைத் தூள் சிக்கியது வேலணையில்

## பதுக்கி வைத்திருந்தவருக்கு 5 லட்சம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், செப். 27

இந்தியாவில் இருந்து கடத்தி வந்து வேலணையிலுள்ள வீடொன்றினுள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 32 இலட்சம் ரூபா பெறுமதி மிக்க 288 கிலோ கிராம் போதையூட்டப்பட்ட புகையி லைத் தூள் பைக் கற்றுக்கள் நேற்றுக் கைப்பற்றப்பட்டன. வீட்டு உரிமையாளரும் கைது செய்யப்பட்டார்.

யாழ். மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து அங்குசென்ற திணைக்களப் பொறுப்பதிகாரி என். கிருபாகரன் தலைமையில் கோப்ரல் எஸ். யாதவன், மதுவரி அலுவலர்களான என். யோகலிங்கம், எஸ்.ஆர். புவனேந்திரன், ரி. தேவமயூரன் ஆகியோரே இந்த அதிரடிப் பாய்ச்சலை மேற்கொண்டனர்.



புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய உடல் நலத்துக்குக் கேடான இந்த புகையிலைத் தூள் (போதைப்பொருள்) இலங்கையில் தடைசெய்யப்பட்டுள் எது என்று கிருபாகரன் தெரிவித்தார்.

இந்த போதைதரும் புகையிலைத் தூளை பதுக்கி வைத்திருந்த வேலணை கிழக்கைச் சேர்ந்த சேனாதிராசா பத்மநாதன் என்ற நபரை மதுவரித் திணைக்களத்தினர் கைது செய்து ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தினர் . கைப் பற்றப்பட்ட புகையிலை பைகளும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா இந்த வழக்கை விசாரணை செய்தார். சந்தேக நபர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதனால் 5 இலட்சம் ரூபா அபராதம் செலுத்துமாறும் அபராதம் செலுத்தத் தவறின் இரண்டு வருட சாதாரண சிறைத் தண்டனையும், பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

கைப்பற்றப்பட்ட புகையிலைப் பைகளை அழிக்கும் படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

(ஒ-4-86-313)

## ஐந்து சந்தித் திருட்டு: இரு நபர்கள் கைது

யாழ்ப்பாணம், செப்.27

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் வீடொன்றினுள் புகுந்து அங்கிருந்தவர்களை மயக்கி நகைகள், கைத்தொலைபேசி, பணம் என்பவற்றைத் திருடிச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் இருவரை யாழ். குற்றவியல் பிரிவுப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இவர்களுள் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவர் எனவும் மற்றையவர் ஏற்கனவே குற்றச் செயலில் ஈடுபட்டு விளக்கமறியலில் உள்ளவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா கோவிற்குளம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரை நேற்று யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். அவரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (எ-4)

# யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து இரும்பு திருடியோர் சிக்கினர்

யாழ். போதனா வைத்தியசாலையில் கட்டடப்பணிக்கென வைக்கப்பட்டிருந்த இரும்புக் கம்பிகளை ஓட்டோ ஒன்றில் திருடிச் சென்றவர்கள் என்று கூறப்படும் இருவரை யாழ் பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது. தென்பகுதியைச் சேர்ந்த ஒருவரும் அவருக்கு உதவிய யாழ்ப்பாண ஆட்டோ சாரதியுமே கைதாகினர்.

யாழ். நீதிமன்றில் இருவரும் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர். இருவரையும் எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். வைத்தியசாலையின் பருத்தித்துறை வீதிப் பக்கமுள்ள வாயிலூடாக கம்பிகளை ஓட்டோவில் ஏற்றிக் கொண்டு இரவு வேளை இருவரும் வெளியேற முயன்றுள்ளனர்.கடமையில் நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் இருவரையும் விசாரித்தபோது அவருடன் முரண்பட்டு தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். உடனடியாக பாதுகாப்பு உத்தியோகத்தர் பொலிஸாருக்கு அறிவித்தார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இருவரையும் கைது செய்தனர். (எ-4-14)

# சாவகச்சேரி நவீன சந்தை விறாந்தை வர்த்தகர்களுக்கு சொந்தமாகி விட்டதா?

## வாகனங்கள் தரிப்பிலும் ஒழுங்கில்லை

யாழ்ப்பாணம், செப். 27

சாவகச்சேரி நவீன சந்தை விறாந்தை கடைக்காரர்கள் பொருள்கள் வைப்பதற் காகவா? அல்லது பொது மக்களுக்காகவா? என்று மக்கள் வினா எழுப்பியுள்ளனர்.

பொது மக்களின் பாவனைக்கென விடப்பட்ட விறாந்தையில் வர்த்தகர்களின் பொருள்கள் நிறைத்து வைத்துள்ளதுடன் தமது சைக்கிள்களையும் நிறுத்தி வைத்துள்ளனர்.இதனால் விறாந்தையைப் பயன்படுத்த முடியாமல் பொது மக்கள் வீதியூடாக நடந்து செல்கின்றனர்.

மேலும் சாவகச்சேரி சந்தியிலிருந்து வைத்தியசாலை வரையான ஏ-9 வீதியில் வர்த்தக நிலையங்களுடன் நிதி நிறுவனங்களும் காணப்படுகின்றன. தினமும் பெருமளவு வாகனங்கள் இந்தப் பகுதியில் இருமருங்கிலும் காணப்படுகின்றன.

ஏ-9 வீதியில் காலை வேளையில் நிதி நிறுவனங்களுக்கும் வர்த்தக நிலையங்களுக்கும் செல்கின்றனர். ஏ-9 வீதியில் பெருமளவு வாகனங்களும் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன.

பொது மக்கள் நடமாடும் பகல் வேளையில் வாகனங்கள் ஒரு பக்கத்தில் மட்டும் நிறுத்துவதற்கும் நவீன சந்தை முன்பாக சைக்கிள் மற்றும் வீதியோரத்தின் நிறுத்தும் மோட்டார் சைக்கி என்பவற்றை உரிய பாதுகாப்பு நிலையங்களில் நிறுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா எனவும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ஒ)

# யாழ்.-கொழும்பு தனியார் பஸ்கள் இனியும் வெள்ளவத்தையில் பயணிகளை ஏற்றும்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். - கொழும்பு இடையே பயணிகள் சேவையில் ஈடுபட்டு வரும் தனியார் பஸ்கள் மறு அறிவித்தல் வரை வெள்ளவத்தையில் நின்று பயணிகளை ஏற்றுவதற்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்கவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவித்தார். பஸ் உரிமையாளர்களில் ஒருவரும் நேற்றையக் கூட்டத்தில் கலந்து கொண்டவருமான சதீஸ்வரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.- கொழும்பு தனியார் பஸ் உரிமையாளர்களின் சார்பில் ஐவர் கலந்துகொண்டோம்.

அங்குவைத்து மறுஅறிவித்தல்வரை யாழ். - கொழும்பு தனியார் பஸ்கள் அனைத்தும் வெள்ளவத்தையில் வைத்துப் பணிகளை ஏற்றுவதற்கான அனுமதியை கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க வழங்கினார்.

வெள்ளவத்தையில் மகேஸ்வரன் இந்துக் கல்லூரி அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட காணியில் பஸ்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றுவதற்கு அனுமதிக்க வேண்டும் என பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிபெற வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அதுவரை தற்போது பயணிகளை ஏற்றும் இடத்தில் நின்றே சேவையில் ஈடுபடுமாறும் அறிவுறுத்தினார்.

அத்துடன் வழி அனுமதிப் பத்திரம் இல்லாமல் சேவையில் ஈடுபடும் பஸ்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. வழி அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்களில் பயணம் செய்வதை பயணிகள் தவிர்க்க வேண்டும் என்றும் அவ்வாறு அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்களில் பயணிப்பதனால் இடைநடுவில் இறங்கி நிற்கவேண்டிய நிலை ஏற்படும் எனவும் பொலிஸாரினால் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் வெள்ளவத்தையில் வழி அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த அனுமதிக்கக் கூடாது எனவும் கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது - என்றார்.

([illegible])

# யாழ். மாநகர சபை உறுப்பினர் அடாவடியை கண்டித்து பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். மாநகர சபை ஆளுங் கட்சி உறுப்பினர் அ.ம. மங்களநேசனின் அடாவடித்தனமான செயலைக் கண்டித்து பணியாளர்கள் நேற்று சபை வளாகத்தில் 4 மணி நேரப் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

வேலைத்தளப் பகுதியில், வாகனப் பகுதி, நீர்சேவைப் பகுதி ஆகியனவற்றைச் சேர்ந்த யாழ். மாநகர சபையின் 150 பணியாளர்கள் இந்தப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு தமது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

சபையின் நீர்வேலைப் பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள பொறியியலாளர் ஹெண்டர்ச்ன என்பவரை அலுவலகத்தில் வைத்து மங்களநேசன் தாக்க முயன்றார் என்று குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது என்று ஊழியர்கள் கூறுகின்றனர்.

அன்றைய தினம் காலை நிறைமதுபோதையில் தகாத வார்த்தைகளில் திட்டித் தீர்த்தவாறு ஆவேசமாக பொறியியலாளரது அறைக்குள் புகுந்து அவரைத் தாக்குவதற்குப் பாய்ந்து [illegible] போது அங்கு நின்ற பெண் பணியாளர் ஒருவரையும் தமது கையால் இழுத்து வீழ்த்தியுள்ளார் மங்களநேசன்.

இவ்வாறு சபையின் ஆளுங் கட்சி உறுப்பினர் நடந்து கொண்டதைக் கண்டித்தே ஊழியர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

குருநகர்ப் பகுதியில் உள்ள வடிகாலை மூடி 6 அடி அகலத்துக்கு பாதை அமைப்பதற்கு யாழ். மாநகர சபை அனுமதி வழங்கியிருந்தது. எனினும் அங்கு 12 அடி அகலத்துக்கு பாதை அமைப்பதுக்கான வேலைகள் இடம்பெற்றது. இந்த விடயம் தொடர்பாக விசாரிப்பதற்காக தனது வீட்டுக்கு வருமாறு மங்களநேசன் அந்தப் பொறியியலாளரை கேட்டுள்ளார்.

அலுவலக வேலைகள் தொடர்பானவை அலுவலகத்தில் வைத்து மட்டுமே கதைக்க முடியும். வீட்டுக்கு வந்து பதிலளிக்க முடியாது எனக் கூறி பொறியியலாளர் மறுத்து விட்டார்.

ஆளும் கட்சி உறுப்பினரும் சுகாதாரக் குழுக்களின் தலைவருமான நான் வருமாறு கூறியும் பொறியியலாளர் கேட்கவில்லை என்பதே மங்களநேசனின் சீற்றத்துக்குக் காரணம்.

அதனை அடுத்தே கடந்த வெள்ளிக்கிழமை அலுவலகத்தில் வைத்து மங்களநேசன் பொறியியலாளரை தாக்க முயன்றுள்ளார்.

இதேவேளை யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆளும் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரின் அலென்ரின் ஆகியோர் பணிப் புறக்கணிப்பை நிறுத்துமாறும் பிரச்சினைக்கு ஒரு சில தினங்களில் தீர்வு காண்பதாகவும் கேட்டுக்கொண்டனர். அதனைத் தொடர்ந்து பணிப் புறக்கணிப்பு கைவிடப்பட்டது.

மங்களநேசன் இதற்கு முன்னரும் சபையின் வாகனச் சாரதியைத் தாக்கியுள்ளார். சபைக்கு சொந்தமான வாகனத்தை தனது வீட்டுக்கு எடுத்து வருவதற்கு தாமதம் ஏற்பட்டதன் காரணமாகவே அதன் சாரதியை மங்களநேசன் தாக்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க அலுவலக நேரத்தில் மங்களநேசன் மது போதையுடன் சிகரெட் புகைத்தவாறு நடமாடி வருவதாகவும் பெண் பணியாளர்களுடன் அநாகரிகமாக நடந்து கொள்வதாகவும் பணியாளர்கள் பலரும் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் பதிவு முறைப்பாட்டுக்காலம் தேர்தல் திணைக்களத்தால் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.27

2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு பதிவு முறைப்பாட்டுக்காலமாக எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் திகதி முதல் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.க. கருணாநிதி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புப் பதிவுகள் கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது பதிவுகள் நிறைவடைந்து கிராம சேவகர்களிடம் இருந்து 'பி,சி' படிவங்கள் பெறும் நடவடிக்கைகள் 90 வீதம் வரை முடிவடைந்துள்ளன.

இதனடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தப்படவுள்ளது. கிராம சேவகர் பிரிவுகள், பிரதேச செயலர் பிரிவுகள், பிரதேச சபைகள், தபால் நிலையங்கள் என்பனவற்றில் காட்சிக்கு வைக்கப்படும்.

இதன் போது 2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் இருந்து நீக்கப்பட்டவர்கள் பெயர்ப்பட்டியல், புதிதாக இணைக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் என்பனவும் காட்சிக்கு வைக்கப்படும்.

பெயர்களைப் பதிவு செய்யாதவர்கள், கடந்த வருடம் வாக்காளர் இடாப்பில் பெயர்ப்பதிவு செய்யாதவர்கள் மற்றும்இந்த முறை வாக்கெடுப்பின் போது தவறவிடப்பட்டவர்கள் உரிமைக் கோரிக்கை விண்ணப்பப் படிவத்தை கிராம சேவையாளரிடமோ அல்லது மாவட்ட செயலகத்திலோ பெற்றுக் கொள்ள முடியும். அதனை நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக கிராம சேவையாளர்களிடம் கையளிக்க வேண்டும்.

மேலும் வெளிநாடுகளில் உள்ளவர்கள் கிராம சேவையாளர்களிடம் உள்ள விசேட படிவத்தைப் பெற்று நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்க வேண்டும் என்றார்.

கடந்த வருடம் வாக்காளர் இடாப்பில் இருந்து 3 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-15)




யாழ்ப்பாணம், செப்.27

வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிசேக வழிபாடுகளுடன் ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும் (ம- 313)

* * *

யாழ்ப்பாணம், செப்.27

தொல்புரம், வழக்கம்பரை சிவபூமி முதியோர் இல்லத்தில் நாளை புதன்கிழமை முதல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆறாம் திகதி வியாழக்கிழமை வரை இடம்பெறும் நவராத்திரி பூசையில் விசேட நிகழ்வுகள் தினமும் நடைபெறவுள்ளன. (ம- 36)

* * *

யாழ்ப்பாணம், செப்.27

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தின் புரட்டாதி சனி அபிஷேகம் கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து பிரதி சனிக்கிழமைகளில் காலை நவக்கிரக ஹோமத்தில் விசேட சனீஸ்வர சாந்தி வழிபாடுகள் நடைபெறும். (ம- 135)

* * *

யாழ்ப்பாணம், செப்.27

அளவெட்டி மேற்கு நாகவரத நாராயணர் ஆலயத்தின் நவராத்திரிப் பூசைகள் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி தினமும் மாலை 5 மணிக்கு சிறப்புப் பூசைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் சிறப்பு சமய சொற்பொழிவுகளும், நவராத்திரிப் பாடல்களும் இடம்பெறும். (ம- 160)

* * *

யாழ்ப்பாணம், செப்.27

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை புதன்கிழமை நவராத்திரிப் பூசைகள் இடம்பெறவுள்ளன. காலை 8 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று மாலை 5 மணிக்கு கொலுப் பூசை இடம்பெறும். (ம)

உ

ஓம் சக்தி

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

**சைவசமய அருள்நெறி மன்றம் - வலி.கிழக்கு**

**நவராத்திரி விழாவை முன்னிட்டு நடத்தும் சகல கலாவல்லி மாலை மனனப்போட்டி - 2011**

இப்போட்டியில் பாடசாலையில் கல்வி பயிலும் 2-3-4-5 ஆம் தரங்களைச் சேர்ந்த சைவசமய மாணவர்கள் அனைவரும் பங்குபற்றலாம்.

**விண்ணப்பப் பத்திரங்கள் பெறுமிடம்:**
*வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய், (நேரிலோ, தபால்மூலமோ பெற்றுக்கொள்ளலாம்)*

**விண்ணப்ப முடிவு திகதி:**
*30.09.2011 வெள்ளிக்கிழமை.*

**போட்டி நடைபெறும் இடம்:**
*வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய்.*

I) 2-3 ஆம் தரங்கள் - 01.10.2011 சனிக்கிழமை, காலை 9 மணி முதல் 11 மணி வரை நடைபெறும்.
II) 4-5 ஆம் தரங்கள் - 02.10.2011 ஞாயிற்றுக்கிழமை, காலை 9 மணி முதல் 11 மணி வரை நடைபெறும்.

சைவ சமய அருள்நெறி மன்றம்,
வலி.கிழக்கு, கோப்பாய்.

## மரண அறிவித்தல்

### பிறின்ஸ் பிலிப் மரிய கொறற்றி லக்ஷினி (லக்ஷி)

பண்டதரிப்பைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பிறின்ஸ் பிலிப் மரிய கொறற்றி லக்ஷினி (லக்ஷி) 23.09.2011 வெள்ளிக்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் பிறின்ஸ் பிலிப் - கிறேஸ் யூலியான (சாந்தினி) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், கியூறி மதுஷாவின் (நீர்கொழும்பு விஜேரட்ண மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி) அன்புச் சகோதரியும், றாணி (நீர்கொழும்பு), மெற்றலீன் (நீர்கொழும்பு) காலஞ்சென்ற அஞ்சலீன் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற அலன் மற்றும் போல் (ஜேர்மனி) ஆகியோரின் பெறாமகளும் சரோஜா (கனடா), ராணி (கனடா), றஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகளும், ரதன், சுபேஸ்கா ஆகியோரின் தந்தை மோகன்ராஜ் அவர்களின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (28.09.2011) புதன்கிழமை நல்லூரில் உள்ள இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு மு.ப 9 மணிக்கு பண்டத்தரிப்பு சென்.மேரீஸ் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பண்டத்தரிப்பிலுள்ள சென்.மேரீஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
C.A.மோகன்ராஜ் (மாமா)-*மேலதிக அரசாங்க அதிபர், முல்லைத்தீவு,*
மோ.ஜக்குலின் (மாமி)

இல.08, செல்லர் லேன்,
செம்மணி றோட், நல்லூர்.

## உலக நாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், புடைவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL

- மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு)
- கடல் உணவுகள், மருந்து பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
- வெளி நாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர் திருமுருகன்கொம்நெற்

கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
650/= ரூபாவிலிருந்து
நிபந்தனைகளிற்குட்பட்டது
Hot line :-0212227835

Head office.
259, K.K.S.Road, Jaffna.
* No.18, main Road, Nelliyadi.
* No.05, Thirunagar, Main Road, Kilinochchi.
* No.46, Adiyapatham Veethy, Thirunelvely.
* TCN Express
2B, Nelsen place, Colombo 06.




## தேவை
Sub Contractors

முல்லைத்தீவில் Concreate Road போடுவதற்கு Sub Contractors தேவை. ABC, Metal, Cement, Gravel, மணல் வழங்கக் கூடியவர்களும் தேவை.

தொடர்பு:
Nimovi civil Engineering,
No-55/1, W.A. De Silva Mawatha,
Colombo-6.
2585932 / 0776275843
E-mail-Civil@nimovi.com

## திசை காட்டி
(முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்)

குறைந்த கட்டணத்தில் UK, Australia விசா ஆலோசனை
சட்டத்தரணிகளால் இலவச சட்ட ஆலோசனை
இலங்கையிலேயே மிகக் குறைந்த கட்டணத்தில்
IELTS - 10,000/= மட்டும்
A1 - 10,000/= மட்டும்
B1 - 10,000/= மட்டும்
B2 - 10,000/= மட்டும்
Spoken English - 2000/- மட்டும்

*வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு இலவசம் 10 மணி - 5 மணி வரை*

தேவை: Clerk (பெண்) தேவை

நேரில் வரவும்
57, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி (Expo முன்பாக)
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கிளி/ஊற்றுப்புலம் அ.த.க.வித்தியாலயம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011**



*மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.*



செல்வன் மு.பலராம்
புள்ளி - 176
மாவட்ட நிலை - 06

செல்வன் சூ.டிலைக்ஷன் பாஸ்குவாலே
புள்ளி - 168
மாவட்ட நிலை - 19

கமக்கார அமைப்பு, ஊற்றுப்புலம், கிளிநொச்சி.

**வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்**
**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம், யாழ்ப்பாணம்.**

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அலுவலகங்களுக்கு வாடகை அடிப்படையில் வான் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரலை இல.40, றக்கா லேன், சுண்டிக்குளியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரங்களைப் பெற்று 05.10.2011 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னராக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எந்திரி. செ.மோகனதேவன்
தலைவர், பெறுகைக் குழு, கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்,
இல.40, றக்கா [illegible]
தொலைபேசி இலக்கம்: 021-2228091 / 021-2220625

**மீசாலை கிழக்கு கறுக்காயடி காட்டுவளவு கந்தசுவாமி கோவில் கட்டட நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

**முதலாம் பரிசு இல.:** 2033
அனுசரணை அபிஷா ரெக்ஸ், சாவகச்சேரி
**இரண்டாம் பரிசு இல.:** 1837
அனுசரணை முருகன் களஞ்சியம்
**மூன்றாம் பரிசு இல.:** 1192
அனுசரணை சி.பி. நெற்கபே, புத்தூர்ச் சந்தி

**பத்து ஆறுதல் பரிசுகள் பெறும் இலக்கங்கள் வருமாறு:**
1018, 1953, 0221, 1957, 2291, 2764, 2261, 1352, 2628, 2822

***பரிசில்களை எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஆலயப் பொருளாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.***

அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்புக் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பான் கீ - மூனின் வற்புறுத்தலில் நம்பகத் தன்மை உண்டா?

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத் தொடரில் பங்குப்பற்றச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ - மூனைச் சந்தித்துப் பேசிய போது, இலங்கை அரசு, நம்பகத்தன்மை உள்ளதாகப் பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தி உள்ளார் மூன்.

அத்தோடு இலங்கையில் கடந்த காலத்தில் மோதல் நடைபெறுவதற்குக் காணரமாக இருந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உகந்த அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் எமது நாட்டின் ஜனாதிபதியிடம் அழுத்திக் கூறியிருக்கிறார்.

இலங்கையின் இன்றைய வேகும் விடயங்கள், - இல்லை இல்லை - பெரும் விவகாரங்கள் இரண்டு குறித்து, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கருத்தில் எடுத்து நாட்டின் தலைவரிடம் நேருக்கு நேர் வலியுறுத்தி, இடித்துக் கூறியிருப்பது, இதுவரை இருந்ததைவிட மிகவும் வித்தியாசயமான ஒரு காட்சியை உண்டாக்கி உள்ளது.

இலங்கை அரசு மீதான போர்க்குற்றச் சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து உலகளாவிய ரீதியில் எழுந்துள்ள எதிர்ப்பலைகளைத் தணித்துவிடுவதற்கான நிலைப்பாடுகளுக்கு மூன், பின்னரங்கில் ஆதரவாக, சார்பு நிலையைக் கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் உலகளாவிய ரீதியில் பரவலாக எழுந்திருந்தன.

விசாரணை அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும் அது பக்கச்சார்பற்றதாகவும், உரிய இலக்கும் நோக்கும் கொண்டதாகவும் இருக்க வேண்டும்; நடந்தவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற சர்வதேசத்தின் கோரிக்கையை இலங்கை அரசு மதிக்க வேண்டும்; அங்கீகரிக்க வேண்டும் - என்று ஆரம்பத்தில், (போர் முடிவுக்கு வந்த குறுகிய காலத்தில், 2009 ஜூன் மாதத்தில்) இறுக்கமாக வலியுறுத்தும் தொனியில் கருத்து வெளியிட்ட ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன்-

காலப் போக்கில் இலங்கைப் போர்க்குற்றங்கள் விடயத்தில் அடக்கி வாசிக்க முயல்கிறார் என்று சர்வதேச தரப்புகளிடம் இருந்து விமர்சனங்களை, கண்டனங்களை எதிர்நோக்கவும் நேர்ந்தது என்பதும் இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளக் கூடியதாகும்.

போர் நடைபெற்றுச் சின்னாபின்னமான வன்னிப் பிரதேசத்தையும், மெனிக் பாம் போன்ற போரின் பின்னரான சித்திரவதைக் கூடங்களையும், ஆகாய வழியாக விமானத்தில் நோட்டம் விட்ட பின்னர், நியூயோர்க் சென்ற பான் கீ-மூன் மஹிந்தாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியபோது உயிர் அழிவுகளுக்கும் சேதங்களுக்கும் பொறுப்புக் கூறவேண்டும் என்று இலங்கை ஜனாதிபதியிடம் கேட்டிருந்தார் எனத் தகவல்கள் கசிந்தன. எனினும் நீண்ட காலமாக - இரண்டரை வருடங்களாக இலங்கை அரச தரப்பு அதில் அசட்டையாக இருந்தது.

அது குறித்து பான் கீ-மூன் கண்டுகொள்ளாமல் காலம் கடந்த நிலையிலேயே தமக்கு ஆலோசனை வழங்குவதற்கென இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபர் தருஸ்மன் தலைமையில் மூவர் அடங்கிய நிபுணர் குழுவை நியமித்திருந்தார்.

போர் உக்கிரமடைந்த காலத்தில், வன்னிப் பிரதேசத்தில் மனிதநேயப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஐ.நா. அமைப்புகளை வெளியேற்றும் இலங்கை அரசின் கபட நடவடிக்கைக்குச் சார்பாக பான் கீ - மூன் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது எழுந்தது.

ஆனால் இப்போது, அவரது செயற்பாடுகளில் மாற்றம் தெரிகிறது. ஐ.நாவின் செயலாளர் நாயகமாக இரண்டாவது தடவையாகவும் பதவி கைக்கு வந்ததால், போர்க்குற்ற விசாரணை குறித்து தான் 'கடும்பிடி'யான போக்கைக் கைக்கொள்ள வேண்டும் என்று நினைத்தோ என்னவோ-

இலங்கை ஜனாதிபதியை ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தின் பக்கவாட்டில் நேருக்கு நேர் சந்தித்த போது, நம்பகத் தன்மையாகப் பொறுப்புக் கூற வேண்டும் என்று பான் கீ- மூன் சற்றுக்காத்திரமாக வலியுறுத்தி இருக்கிறார் என்று கொள்ளமுடிகிறது.

தருஸ்மன் அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தமக்கு அறிவிக்காமலே அனுப்பியது தொடர்பாக 'ஆகா ஓகோ' என்று பெரும் அமர்க்களம் போட்ட இலங்கை அரசின் நிலைப்பாட்டுக்கு மத்தியில்-

இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகச் சொல்லப்படும் சம்பவங்கள் தொடர்பாக 'நம்பகமான பொறுப்புக் கூறும் உள்நாட்டு நடவடிக்கைகள் மிக அவசியம்' என்று பான் கீ-மூன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச நீதியாளர்களையும் உள்ளடக்கிய உள்நாட்டு விசாரணைக்குழு அவசியம் என்று அமெரிக்கா, இந்தியா மற்றும் சர்வதேச நாடுகள் வலியுறுத்தும் வேளையில், பான் கீ - மூன் அதனைத் திசை திருப்ப முயல்கிறாரோ என்ற ஐயுறவு ஒரு பக்கம் எழுகின்ற போதிலும் செயலாளர் நாயகம் நேரில் கூறியிருப்பது சற்று ''முன்னேற்றம்'' என்று கருதலாம்.

இன்னொரு புறத்தில் -

இலங்கை அரசு மீது நடத்தப்படும் போர்க்குற்ற விசாரணைக்கு, ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகமும் அழைக்கப்பட வேண்டும் என்று பிரபல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தலைவருக்கு அவசர வேண்டுகோள் விடுத்ததன் பிரதிபலிப்பாகவும் இலங்கை ஜனாதிபதிக்கான பான் கீ - மூனின் ''புத்திமதிகளை'' க் கருதலாம்.

இச் சந்தர்ப்பத்தில் -

வெளிநாட்டுத் தலையீட்டைத் தடுக்க வேண்டுமானால், தமிழ் மக்களின் பிரச்சினையை உகந்த முறையில் இலங்கை அரசு தீர்க்க வேண்டும் என்றும் , இலங்கை அரசு, அந்நாட்டில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையை நியாயபூர்வமாகத் தீர்த்து வைத்திருப்பின் வெளிநாடுகள் அந்த நாட்டின் விவகாரத்தில் ஏன் தலையிடுகின்றன என்றும் - இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விமர்சிக்கும் நிலையும் வந்துவிட்டது!

இந்தியா மட்டுமன்றி, சர்வதேச நாடுகள் இனப்பிரச்சினைக்கு நியாமான தீர்வுகாண வேண்டும் என்று வலியுறுத்தி வரினும் அதில் ஆர்வமும் அக்கறையும் உள்ளதாகக் காட்டிக்கொண்டாலும், தீர்வு ஒன்றைக் காண்பதற்கான இதய சுத்தியான விருப்பமோ நடவடிக்கையோ இலங்கை அரசிடமிருந்து இன்னும் தென்படவில்லை. கிராம வழக்கில் கூறுவதானால் "எல்லாம் 'போசைக்கை''க்குத் தான்.

எத்தனை காலத்துக்குத் தான் ஏமாற்ற முடியும்?

போர்க்குற்ற விசாரணை, இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு என்ற இரண்டையும் புறமொதுக்கிவிட்டு அரசும், ஜனாதிபதியும் இன்னும் நீண்ட காலத்துக்கு 'புலுமாசு' காட்டமுடியாது. எதற்கும் ஓர் எல்லை உண்டு, முடிவும் உண்டு. உண்மையும் நீதியும் உறங்கமாட்டா. இலங்கையின் ஆட்சியாளர் கூட்டம் அதனை உணர்ந்து கொள்ளக்கூடாதா?

# வடக்கில் தனியார் மருத்துவக் கல்லூரி நிறுவப்படவேண்டியது காலத்தின் தேவை

## மருத்துவர் ஜமுனாநந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.27

தென்னிலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரி அமைக்க சுகாதார அமைச்சு அங்கீகரிக்கும் நிலையில் வடபகுதியிலும் தனியார் மருத்துவக் கல்லூரி நிறுவப்படவேண்டும்.

இது காலத்தின் தேவை என்று மருத்துவர் சி.ஜமுனாநந்தா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சுமார் 200 இற்கு மேற்பட்ட யாழ்ப்பாண மாணவர்கள் ரஷ்சியக் குடியரசு, நேபாளம், சீனா, செக்கோ செலவோக்கியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் அதிகபணம் செலுத்தி மருத்துவக் கல்வியை தொடர்கின்றனர்.

இவர்களுக்கு பெற்றோர் இடும் முதலீடு யாழ்ப்பாணச் சமூகத்தில் அமைந்தால் எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு உதவும்.

அரச மருத்துவக் கல்லூரியில் கற்பவர்கள் தமது மேற்படிப்பின் நிமித்தம் வடகிழக்கு பகுதியை விலத்தி தென்பகுதியிலும் மேலைநாடுகளிலுமே தொழில் வாய்ப்பை பெறுகின்றனர்.

இங்கு தொழில் என்பதற்கும் கடமை என்பதற்கும் சிறு வேறுபாடு உள்ளது. குறிப்பாக தீவுப் பகுதி, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களில் பெரிய வெற்றிடங்கள் உள்ளன.

யாழ்.மாவட்டதிலும் குறைந்தது 600 வைத்தியர்களின் சேவை பிரதேச மட்டத்தில் தேவை. தனியார் மருத்துவக்கல்லூரியில் கற்ற பலர் இக்கட்டான சூழலிலும் இங்கு சேவை செய்கின்றனர்.எனவே தனியார் மருத்துவக் கல்லூரியைக் கொள்கை ரீதியில் எதிர்த்தல் தவறானது ஆகும்.

வாழிடத்தில் எமது இருப்பை உறுதி செய்ய மாறிவரும் உலகப் பொருளாதார ஒழுங்கில் எமக்கு ஏற்ற உத்திகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அதிஷ்டவசமாக இலங்கையின் தென்பகுதியில் தனியார் மருத்துவக் கல்லூரி அங்கீகாரம் கிடைக்கும் போது நாங்களும் அதற்கான வழிவகைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (ம)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் 21 வருடங்களின் பின் நவராத்திரி

யாழ்ப்பாணம், செப்.27

21 வருடங்களின் பின்னர் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் துர்க்கை அம்மன் கோயிலில் நவராத்திரி விழா நடைபெறவுள்ளது. நாளை புதன்கிழமை முதல் நவராத்திரி விழா ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆறாம் திகதி வியாழக்கிழமை வரை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இடம்பெறும் விழாக்காலத்தில் தினமும் காலை 6 மணிக்கு உதயகால பூசையும், முற்பகல் 10 மணிக்கு காலை சந்தி பூசையும், நண்பகல் 12 மணிக்கு உச்சிகால பூசையும், பிற்பகல் 2 மணிக்கு மகாலட்சுமி விசேட அபிஷேகமும், பிற்பகல் 2.30 மணிக்கு சாயரட்ச பூசையுடன் விசேட பூசையும், மாலை 3 மணிக்கு சகஸ்ர நாமார்ச்சனையும், மாலை 3.45 மணிக்கு திருவருட் பிரசாதம் வழங்குதலும் இடம்பெறும்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆறாம் திகதி அதிகாலை 5 மணிக்கு உஷக்காலப் பூசையும் தொடர்ந்து பாலர்களுக்கு ஏடு துவக்குதல் நிகழ்வும் இடம்பெறும்.ஆலயத்தின் பிரதமகுரு மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தின சபாபதிக்குருக்கள் கிரியை கால வழிபாடுகளை நிகழ்த்துவார்.

அத்துடன் ஆலயத்தில் இடம்பெற்று வரும் திருநாள்களில் நவராத்திரி உபயம், திருவெம்பாவை உபயம், தை மாத இலட்சார்ச்சனை உபயம் என்பவற்றை நடத்தும் அடியவர்களை ஆதீனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஆலயப்பிரதமகுருக்கள் அறிவித்துள்ளார்.

# அனைத்துப் பாடசாலைகளிலும் 14 ஆம் திகதி கல்வித்தர தினம்

பருத்தித்துறை,செப்.27

தேசிய கல்வித்தர தினம் நாடு முழுவதும் எதிர்வரும் 14 ஆம் திகதி பாடசாலைகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சு பாடசாலைகளில் இந்தத் தினம் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்து நடத்துமாறு கேட்டுள்ளது. பாடசாலைகளை உயர்ந்த தரமுடைய நிறுவனங்களாக ஆக்க வேண்டியதன் நிமிர்த்தம் பாடசாலைக் கல்வியின் பண்புத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் அதற்கமைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் விழிப்பூட்டுவதற்காகவும் இந்தத் தினத்தை பாடசாலைகளில் அனுஷ்டிப்பது அவசியமானதாகக் கருதப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''தரமான சமுதாயத்திற்கு தரமான கல்வி'' என்றதொனிப்பொருளில்இந்தத் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இத்தொனிப்பொருளில் அன்றைய தினம் பாடசாலையில் காலை ஆராதனையில் உரைகளை நிகழ்த்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடத்திட்டமிடல்,பாடக்குறிப்பு என்பன தயாரிப்பது தொடர்பாக கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதி அதிபர் அல்லது சிரேஸ்ட ஆசிரியர் மூலம் ஆசிரியர்களுக்கு அறிவூட்டும் பிரயோகளரீதியான வேலைத்திட்டத்தை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (த-190)

# வேங்கடேசப் பெருமாளுக்கு இன்று கொடியேற்றம்

'ஈழத்துத் திருப்பதி' என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ் தானத்தில் இன்று கொடியேற்றம். உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல காத்தற் கடவுளான ஸ்ரீ மகா விஷ்ணுவானவர் தம்மை வழிபடுகின்ற அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் நீக்கும் பொருட்டு எழுந்தருளி வரதராஜப் பொருமாள் என்ற நாமத்துடன் வீற்றிருக்கின்ற புனித புண்ணிய க்ஷேத்திரந் தான் இந்தப் பெருமாள் கோயில்.

மஹோற்சவத்தில் 9 ஆம் நாள் தேர்திருவிழாவாகும். ஐயன் ஸ்ரீ மகாவிஷ்ணுப் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவி சமேதராக அழகிய சித்திரத்தேரில் அலங்காரத் திருமாலாக ஆரோகணித்துவருகின்ற ஆனந்த அற்புதத் திருக்காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும். மறுதினம் தீர்த்தோற்சவம் அருள் மயமானது. மஹோற்சவத்தின் பத்தாம் நாள் அருளலாகிய தீர்த்தத் திருவிழா ஆலய தெற்கு வீதியிலே ஸ்ரீரெங்கநாதர் கோபுர வாசலிலே அமைந்துள்ள அற்புதத் தீர்த்த வாரி புஷ்கரணிக் கேணியிலே நடைபெறுகின்ற வேளையில் அடியார்கள் ஒன்று கூடி ஆனந்த மயமான நீராடலுடனே வழிபாடாற்றுவது உள்ளத்தைத் தொடும். தீர்த்தோற்சவத்தின் மறுதினம் திருக்கல்யாண உற்சவம் மிகக் கோலாகலமாக நடைபெறும்.

- சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சி தொடர்பான வாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றது 'சாணக்கியன்'

## வெளியீட்டு விழாவில் விரிவுரையாளர் லலீசன்

யாழ்ப்பாணம், செப்.27

தமிழரசுக்கட்சி தொடரவேண்டுமா? தொடரக் கூடாதா? என்ற வாதப் பிரதி வாதங்களுக்கு முற்றப்புள்ளி வைக்கக் கூடிய வகையில் 'சாணக்கியன்' என்ற நூல் அழகிய நிறுவுதலைக் கொடுத்துள்ளது.

ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றைப் புரிந்து கொள்வதற்காக இளந்தலைமுறை யினர் அவசியம் படிக்க வேண்டிய நூல் சாணக்கியன்.

இவ்வாறு விரிவுரையாளர் எஸ்.லலீசன் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கம் நூற்றாண்டு விழா நினைவுப் பேருரையும் 'சாணக்கியன்' நூல் வெளியீடும் கடந்த சனிக்கிழமை நீர்வேலி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இடம் பெற்றது.

சுமார் ஐந்நூறுக்கும் அதிகமான பொது மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் 'சாணக்கியன்' நூலுக்கான வெளியீட்டுரை நிகழ்த்தும் போதே எஸ்.லலீசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தனக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த பெருந்தகைகளால்தான் தமிழர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய நிலையில் தமிழரசுக் கட்சியை நிலை நிறுத்த வேண்டிய தேவை அரசியல் ஞானமுள்ளவர்களுக்கு இருக்கிறது. வீட்டுச் சின்னம் தேவை தானா? தேவையில்லையா?, தமிழரசுக் கட்சி தொடர வேண்டுமா? தொட்ரக் கூடாதா? போன்ற வாதப் பிரதிவாதங்களுக்கு எல்லாம் முற்றுப் புள்ளி வைக்கக் கூடியதாக 'சாணக்கியன்' என்ற நூல் அழகாக ஒரு நிறுவலைக் கொடுத்துள்ளது.

இந்த நூலை, இளம் தலைமுறையினர் அவசியம் படிக்க வேண்டும். ஏன் என்றால் இன்று இருக்கக் கூடிய இளம் பிராயத்தினர் பலர் ஆயுத போராட்ட காலத்தில் வளர்ந்தவர்கள். அதனால் இந்த ஆயுதப் போராட்டம் எப்படி முகிழ்ந்தது என்பதை இளம் தலை முறையினர் நிச்சயம் அறியவேண்டும். இவர்கள் ஈழத்தமிழர்களின் அரசியல் வரலாற்றைப் புரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

பொதுவாகவே தமிழர்களது அரசியல் வரலாற்றைப் பற்றிப் பேசுபவர்கள் பெரும் குறையை முன்வைப்பார்கள். தமிழர் அன்றும் சரி இன்றும் சரி தமது வரலாற்றை நிரூபிக்கவில்லை, அந்த வரலாற்றை பதிந்து வைத்திருக்கவில்லை என்பதே அந்தப் பெருங்குறையாகும். அந்தக் குறையை இந்த 'சாணக்கியன்' என்ற நூல் பூர்த்தி செய்யும் என்று நம்பலாம்.

தமிழினம் என்ற உணர்வைப் பெறுவதற்கு - அந்த உரிமையைப் பெறுவதற்கு இந்த நூல் நிச்சயம் வழி செய்யும்.

தந்தை செல்வாவின் வலது கரமாக செயற்பட்ட சாணக்கியன் கோப்பாய் கோமான் வன்னிய சிங்கம், தான் வாழ்ந்த காலத்தில் சாதித்தார். அது இன்று வரலாறு ஆகிவிட்டது. அவரது பதிவு எமக்கு மிகவும் அவசியமானது. நூல் ஆசிரியர் கதிர் பாலசுந்தரத்தின் பணி சிறப்பானது-என்றார். (த-14)

# இளைஞர் சேவைகள் மன்றத்தினர் மாத்தறைக்கு நட்புறவுப் பயணம்

யாழ்ப்பாணம்,செப்.27

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் நட்புறவுப் பாலச் செயற்பாட்டின் கீழ் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 45 இளைஞர்கள் அண்மையில் மாத்தறை மாவட்டத்துக்குச் சுற்றுலா சென்றனர்.

இளைஞர் சேவைகள் அதிகாரி சி.சண்முகவடிவேல் தலைமையில் 'பனந்தோப்பு முதல் தென்னந்தோப்பு வரை' என்னும் பெயரில் இந்த நட்புறவுப் பாலப் பயணம் அமைந்தது.

மாத்தறை மாவட்டத்தின் வெலிகம பிரதேச செயலர் பிரிவில் உள்ள ரணவதுரகம என்னும் விவசாயக் கிராமத்தில் உள்ள வீடுகளில் 5 தினங்களை இந்த இளைஞர்கள் கழித்தனர்.

இவர்களுக்கான வரவேற்பு வெலிகம பிரதேச சபைக் கட்டடத்தில் நடைபெற்றது.

இதில் பிரதேச சபைத் தலைவர், மாகாண இளைஞர் விவகார அமைச்சர், இளைஞர் சேவைகள் அமைச்சின் செயலாளர், வெலிப்பிட்டிய இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

5 ஆம் நாள் பிரியாவிடை நிகழ்வுக்கு இளைஞர் அலுவல்கள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இளைஞர் நட்புறவுப் பாலத்தில் கலந்து கொண்ட 45 இளைஞர்களும் 3 சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (த-121)



பொதுமக்களுடைய நன்மை கருதி சுன்னாகம் பொலிஸாரினால் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் நடமாடும் சேவை ஒன்று நடத்தப்பட்டது. இந்த நடமாடும் சேவையின்போது பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாகப் போக்குவரத்துப் பொலிஸார் விளக்கமளிக்கின்றனர். (த)

# 'பனங்கூடல்' சஞ்சிகை விரைவில்

நாவற்குழி, செப்.27

பனைஅபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளை மக்களிடம் கொண்டு செல்லப் பனங் கூடல் எனும் மாதாந்தச் சஞ்சிகை வெளியிடப்படவுள்ளதாகச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

பனை வளம் பற்றிய அறிவுகளை மக்களுக்கு வழங்க பொருத்தமான தகவல்களை இந்தச் சஞ்சிகை வழங்கும்.

சபையின் செயற்பாடுகள் குறித்துக் கற்பகச்சோலை எனும் பெயரிலான இணையத்தளம் ஏற்கனவே அறிமுகப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-121)

# கைதடி விக்னேஸ்வராவின் மாணவர் கல்விச் சுற்றுலா

நாவற்குழி, செப்.27

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களும், அதிபர், ஆசிரியர்களும் உயர்மட்டக் கல்விச் செயற்பாட்டுக்கான கல்விச் சுற்றுலாவைக் கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை மேற்கொண்டனர்.

பாடசாலை அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில் தரம் 8,9,10,11 மாணவர்களும் பாட ஆசிரியர்களும் உள்ளடக்கிய குழுவினரே இதில் பங்குபற்றினார்கள்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், கீரிமலை புனித தீர்த்தக் கேணி, நகுலேஸ்வரம், காரைநகர் கசூரினா கடற்கரை, யாழ்ப்பாணக் கோட்டை, சுப்பிரமணியம் பூங்கா, யமுனா ஏரி, நல்லூர் மந்திரிமனை ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

இவற்றின் முக்கியத்துவங்கள், வரலாற்றுச் சிறப்புக்கள் பற்றி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கூற, குறிப்புக்களை எடுத்துக் கொண்டனர்.

இந்தக் கல்விச் சுற்றுலாவுக்கான அனுமதியையும் ஒரு பகுதி நிதியையும் தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களம் வழங்கியிருந்தது. (த-121)

# கடையில் திருட்டு முயற்சி முறியடிப்பு

நவாலியில் நேற்று முன்தினம் 25 ஆம் திகதி வர்த்தக நிலையமொன்றை உடைத்து திருட முயன்ற முயற்சி பொதுமக்களின் ஒத்துழைப்பால் முறியடிக்கப்பட்டுள்ளது.

நவாலி அரசடியிலுள்ள சிவசக்தி என்னும் பல்பொருள் வர்த்தக நிலையத்தை நேற்று முன்தினம் ஞாயிறு இரவு 10 மணியளவில் திருடர்கள் உடைத்துக் கொண்டிருந்தபோது சத்தம் கேட்ட அயலவர்கள் கூக் குரலிட்டதை அடுத்து அங்கு இளைஞர்கள் ஒன்று கூடி தேடுதல் நடத்தினர்.எனினும் திருடர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

மறுநாள் நேற்று கடை உரிமையாளர் கடையினைத் திறந்து அங்கு பொருத்தப்பட்டிருந்த கமராவை பார்த்தபோது இடம்பெற்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-100)

# போர் ஓய்ந்தும் மக்கள் இன்னும் அச்சத்தில்; அக்கிரமங்களை ஒழிப்போம் வாருங்கள்

## அழைக்கிறார் பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா

யாழ்ப்பாணம், செப்.27

யுத்தம் முடிவடைந்து சமாதான சுழல் வந்தபோதும் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. அவர்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். கிறீஸ் மனிதன், மர்ம மனிதன் என்ற பீதியும், கொலை, கொள்ளைகள், ஆள்கடத்தல்கள் என்று மாறி மாறி அச்சுறுத்தல்கள் நடைபெற்றவண்ணமுள்ளன.

இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸாரால் மட்டும் முடியாது. இதற்குப் பொதுமக்களாகிய நீங்களும் எங்களுடன் கைகோர்த்து ஒன்றாகச் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா.

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று ஜே/80 பெரியகடை கிராமசேவகர் பிரிவுகளுக்கென ஏற்பாடாகி இருந்தது. இந்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் தலைமை வகித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் பொலிஸ் அதிகாரி.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராம மட்டங்களில் இளைஞர்களைத் திரட்டி அவர்களின் பாதுகாப்பு, கிராமங்களின் அபிவிருத்தி என்பவற்றை எந்தவி அரசியல் கலப்புமின்றிச் செயற்படுத்த வேண்டும். மக்களின் முன்னேற்றத்துக்காக, கிராமங்களின் அபிவிருத்திக்காகத் திணைக்களங்களும், பொலிஸாரும், பொதுமக்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

அனைவருக்கும் சமமான நீதி, சமமான சட்டம் [illegible] எவ்வித பாகுபாடுமின்றி [illegible]கவும் அரசியல் செல்வாக்குக்கு இடம்கொடுக்காமலும் மக்களுக்காக மட்டுமே செயற்படவுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் தான் தற்போது அதிகளவிலான குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தக் குற்றச் செயல்கள் யாவும் பிற இடங்களில் இருந்து வருபவர்களாலேயே ஏற்படுகின்றன. அவர்கள் தான் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

பொலிஸாருடன் மக்கள் இணைந்து செயற்பட வேண்டும். உங்களுக்காகவே தமிழ்ப் பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் நியமிக்கப்படவுள்ளனர். சிங்களப் பொலிஸாரும் தமிழ் மொழியை ஆர்வமாகக் கற்று வருகின்றனர்.

[illegible]துக்கு வந்து முறைப்பாடு செய்யத் தேவையில்லை.

கிராமங்களில் ஏதாவது குற்றச் செயல்கள் நடந்தாலோ அல்லது மரணச் சடங்கு, திருமணங்கள் போன்ற நிகழ்வுகள் நடத்தினால் தொலைபேசி மூலம் முறைப்பாடுகளைச் செய்வதோடு, நிகழ்வுகளிலும் தேவையானவற்றைச் செய்யவுள்ளோம். 0213211157, 0718111504 ஆகிய தொலைபேசி மூலம் எவரும் தமிழிலேயே தொடர்பு கொள்ள முடியும்.

கிராமங்களில் உள்ள குளங்கள், கால்வாய்கள், மின்சார மின்மை போன்றவற்றைச் சீர்ப்படுத்தவும் மற்றும் உங்கள் பிள்ளைகளின் தொழில் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கத் தயாராகி வருகின்றோம்.

மேலும் இந்தக் கிராம சேவகர் பிரிவில் உள்ள 25 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும். அவற்றை வைத்து இலகுவாக தங்களுடைய தேவைகளையும், ஏனையோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும்.

பொலிஸார் - பொதுமக்கள் நல்லுறவுக்காகக் குழு ஒன்று அமைக்கப்படும். அதன் தலைவராக எஸ்.நடராஜா, அதன் செயலாளராக ஜே/80 கிராம சேவகர் பிரிவு கிராம சேவகர் எஸ்.ஆர்.சிவானந்தன், உப தலைவராக மாதர் சங்கத் தைச் சேர்ந்த திருமதி வரதராஜா சசிரேகா ஆகியோரைத் தெரிவு செய்துள்ளோம் எனவும் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், இந்து மதத் தலைவர்கள், பௌத்த மதத் தலைவர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள் போன்றோர் கலந்து கொண்டனர். (ஒ-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் கனியவளச் சுரண்டலை தடுத்து நிறுத்த நடவடிக்கை அவசியம்

## பிரதேச சபையிடம் மக்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப்.27

வலிவடக்கில் இடம்பெற்று வரும் கனியவளச் சுரண்டலைத் தடுத்து நிறுத்துவதற்குப் பிரதேச சபை உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அந்தப் பகுதியைச் சேர்ந்த த.பரமேஸ்வரன் தெரிவிக்கையில்:

வலி.வடக்குப் பிரதேச சபை தனது எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் சபையின் அனுமதியின்றி யாரும் கட்டடங்களைக் கட்டக்கூடாது எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத் தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியதே. இதேவேளை வலி.வடக்குப் பிரதேச சபை நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்கள் ஒன்றிரண்டை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.


வலி.வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நடைபெறும் கனியவளச் சுரண்டல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மாவைகலட்டிப் பிரதேசத்தில் நடைபெறும் கல் அகழ்வைத் தடுத்து நிறுத்துவதற்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் கீரிமலை அந்தியேட்டி மடத்துக்கும் மாரியம்மன் கோயிலுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகிறது. இதனையும் தடுப்பதற்கு வலி.வடக்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கீரிமலையில் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள போதும் கீரிமலை மயானம் அமைந்துள்ள பிரதேசம் இன்னமும் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இந்தப் பிரதேசவாசிகள் யாராவது காலமானால் காலமானவரின் சடலத்தை எடுத்துச் சென்று கீரிமலை மயானத்தில் தகனம் செய்வதற்கோ, புதைப்பதற்கோ படையினரின் அனுமதியைப் பெறுவதற்குப் பிரதேச சபை முயற்சிக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட விடயங்களில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு சபை உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு இருக்க முடியாது-என்று தெரிவித்தார்.

# இடிந்து விழும் மதில்கள்



வலி.வடக்கு,செப்.27

காங்கேசன்துறை வீதி அகலிப்புக்காக இடிக்கப்பட்ட மதில்கள் மீளக் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன. நிறுவனம் ஒன்றின் ஊழியர்களினால் கட்டப்படும் இந்த மதில்கள் உரிய தரத்தைக் கொண்டுள்ளனவா என்ற கேள்வி பொதுமக்களிடையே எழுந்துள்ளது.

அண்மைக் காலத்தில் இணுவிலில் இருந்து மல்லாகம் வரை மதில் கட்டும் பணிகளை குறிப்பிட்ட நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இந்த மதில்கள் உரிய தரத்தைக் கொண்டிராததுடன் உரிய முறையில் கம்பிகள் வைத்துக் கட்டப்படவில்லையெனவும் பொது மக்கள் குறிப்பிடுகின்றார்கள்.

ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரின் வீட்டின் மதில் உடைக்கப்பட்டு புதிய மதில் அமைக்கப்பட்டது.

அந்த மதில் இடிந்து வீழ்ந்துள்ளதையே படத்தில் காண்கிறீர்கள். இதே போன்று ஏற்கனவே மல்லாகம் பகுதியில் கட்டப்பட்ட மதிலும் உடைந்து வீழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ''மனிதம் தேடி'' கவிதைத்தொகுப்பும் இறுவெட்டு வெளியீடும் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்குக் கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா,ஓய்வு பெற்ற விரிவுரையாளர் கே.தர்மராஜா ஆகியோரும் கலந்துகொள்வார்.

முதல் பிரதியை ஜனசக்தி காப்புறுதி நிறுவனப் பிராந்தியப் பயிற்றுவிப்பாளர் ரி.எஸ். சோமலோசன் பெற்றுக் கொள்வர்.

நயப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் நிகழ்த்துவார்.

# 250 மூடை உலர் உணவுப் பொருள்கள் மாவிட்டபுரத்தில் கிணற்றிலிருந்து மீட்பு


வலி.வடக்கு, செப்.27

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்கள் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மாவிட்டபுரம் தெற்கு அரசடி வீதியில் உள்ள வீடொன்றின் கிணற்றில் இருந்து பழுதடைந்த நிலையில் 250 மூடை உலர் உணவுப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மாவிட்டபுரம் தெற்கு ஜே/231 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வீடொன்றின் கிணற்றிலிருந்தே இந்த உலர் உணவு மூடைகள் மீட்கப்பட்டுள்ளன.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

வலி.வடக்கில் மாவிட்டபுரத்தில் அரசடி வீதியில் உள்ள தனியார் வீடொன்றின் கிணற்றினை வீட்டுக்காரர் துப்புரவு செய்ய முயன்றுள்ளார். இதன் போது கிணற்றில் உணவு மூடைகள் இருந்தமை தெரிய வந்துள்ளது.





நேற்றுமுன்தினம் இந்த மூடைகள் கிணற்றில் இருந்து மீட்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு நேற்று நிறைவடைந்துள்ளது. இதில் சில உரைப்பைகளில் உலக உணவுத் திட்டத்தின் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. இந்த மூடைகளில் அரிசி, கடலை, பருப்பு, பயறு, கோப்பி, மிளகு, நெஸ்பிறே போன்ற உலர் உணவுப் பொருள்கள் அடங்கியிருந்தன.

இவை அனைத்தும் சில மாதங்களுக்கு முன்னர் கிணற்றுக்குள் போடப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இரண்டு வாரங்களுக்கு முன்னர் குறித்த வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் உள்ள மற்றுமொரு தனியார் வீட்டுக் கிணற்றிலிருந்தும் 150 மூடை உலர் உணவுப் பொருள்கள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-15-86)

# வலி.வடக்குப் பாதுகாப்பு வலயத்தில் பொது மக்களின் வீடுகள் தரைமட்டம்

## புல்டோசரின் உதவியுடன் இடித்தழிப்பு

யாழ்ப்பாணம், செப்.27

இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள வலி.வடக்குப் பகுதியில் பொது மக்களின் வீடுகள் இடித்துத் தரைமட்டமாக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பச்சை நிறமான புல்டோசரைப் பயன்படுத்தி அங்குள்ள வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிக்கப்பட்டு வருவதாக அதனை நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

காங்கேசன்துறை சந்தியிலுள்ள பழைய பொலிஸ் நிலையக் கட்டடத்தைச் சூழவுள்ள பகுதிகள் மற்றும் கீரிமலைக்குச் செல்லும் வீதியோரமாக உள்ள பொது மக்களின் வீடுகளே இவ்வாறு இடித்துத் தரைமட்டமாக்கப்படுவதாகத் தெரியவருகின்றது.

கடந்த சில தினங்களாக புல்டோசரின் உதவியுடன் ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகள் இவ்வாறு இடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அத்துடன், பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளும் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத இந்தப் பகுதிகளில் இராணுவத்தினரின் ஏற்பாட்டிலேயே இந்த வீடுகள், கட்டடங்கள் இடிக்கப்பட்டு வருவதாகவும், இது பொது மக்களிடையே பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்தப் பகுதிகளில் இருந்து 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்தனர். அதன் பின்னர் இன்று வரை அங்கு மக்கள் மீளக்குடியமரவில்லை. அந்தப் பகுதி தொடர்ந்தும் படையினரின் கட்டுப்பாட்டில் உயர் பாதுகாப்பு வலயமாகவே இருந்து வருகின்றது.

அந்தப் பகுதியில் உள்ள கடற்படை முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் ஹோட்டல்கள், விருந்தினர் விடுதி எனப் பல்வேறு புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறான கட்டடங்களை அமைப்பதற்கே வீடுகள் இடிக்கப்படுவதாக மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்துப் பலாலி இராணுவத் தலைமையக ஊடகப் பிரிவு இணைப்பாளர் மேஜர் மல்லவாராய்ச்சியுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவ்வாறான சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என அவர் தெரிவித்தார். (த-14)

# கல்வி, கலாசாரம், விளையாட்டுத் துறைகளிலும் அபிவிருத்தி அவசியம்

## வலி.தென்மேற்குக் பிரதேச சபைக் கூட்டத்தில் தலைவர்

சண்டிலிப்பாய், செப்.27

பிரதேசத்தின் அபிவிருத்தியில் மட்டுமல்ல கல்வி, கலாசாரம், விளையாட்டு உட்படப் பாரம்பரிய பண்பாடுகளையும் அபிவிருத்தி செய்து பேணிப் பாதுகாக்க வேண்டும். அப்பொழுதுதான் எமது பிரதேசம் பல துறைகளிலும் வளர்ச்சியடைய முடியும்.

இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேசசபைத்தலைவர் அ.ஜெயநேசன் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

மக்களின் தேவைகளை இனங்கண்டு முன்னுரிமை அடிப்படையில் எமது சேவை அமையும் போதுதான் மக்கள் மனதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும். எமது பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளையும் விரைவாக நிறைவேற்றுவதுடன் அவர்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கும் வழி காட்ட வேண்டும்.

வருமானத்தைக் கருத்தில் கொண்டு சட்ட வரையறைக்குள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். சனசமூக நிலையங்களையும், முன் பள்ளிகளையும் சிறப்பாக இயங்க வைப்பதுடன் விளையாட்டுத் துறையையும் ஊக்கிவைக்க வேண்டும் - என்றார். (த-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் முஸ்லிம்களை மீள் குடியேற்றுவதற்காக அமைச்சுப் பதவியைத் தியாகம் செய்யவும் தயார்

## ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

கொழும்பு, செப் 27

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள முஸ்லிம்களை அவர்களது தாயகத்தில் மீள்குடியேற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தடுக்கும் செயற்பாடுகளில் சில அதிகாரிகள் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர்.

இந்தச் சவால்களை முறியடிக்க அமைச்சுப் பதவி தடையாக இருக்குமெனில் அதனைத் தியாகம் செய்துவிட்டு மக்களோடு நின்று போராடி அதனை பெறுவதற்கு என்றும் தயாராக இருக்கின்றேன்.

- இவ்வாறு கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

புத்தளம் வேப்பமடு அர்ரஹ்மா முஸ்லிம் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில்:

வடக்கிலிருந்து பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு, 21 வருடங்களாகின்றன.

கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட நிலைதான், எமது மண்ணுக்கு மீண்டும் நாம் சென்று வாழ முடியாத சூழல், ஆனால் இன்று அந்த நிலை மாறியுள்ளது.

இருந்த போதும் அன்று முஸ்லிம்கள் எவ்வாறு வெளியேற்றப்பட்டார்களோ, அதனை விட மிகவும் பயங்கரமான முறையில் சில அதிகாரிகள் முஸ்லிம்களை இன்று வஞ்சிக்கின்றனர். அது குறித்து ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்கும், நாடாளுமன்றத்திலும் தெரிவித்துள்ளேன்.

எந்த சமூகத்துக்கும் அநியாயம் செய்யாத வடமாகாண முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக சில சக்திகள் செயற்படுவது அங்கீகரிக்கப்பட முடியாது. வடமாகாண முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும் அதற்காக உதவி செய்யுங்கள் என்று நாம் சர்வதேசத்திடம் கேட்டால், அப்படி இடம்பெயர்ந்த மக்கள் இருக்கின்றார்களா என்று தான் கேட்கின்றனர், அந்த அளவுக்கு முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் மழுங்கடிக்கப்பட்டு, மறைக்கப்பட்டுள்ளன.

இது இந்தச் சமூகத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. கற்றல், மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட சகல துறைகளிலும் பெரியளவிலான பின்னடைவை கொண்டுள்ளது. இதனைக் கட்டியெழுப்புவதற்கு பல வருடங்கள் தேவையாகவுள்ளது.

எமக்கு மக்கள் தந்துள்ள பதவிகளைக் கொண்டு அந்த மக்களது உரிமைகளையும் பெற்றுக் கொடுக்க முடியுவில்லை என்றால் அதனை தூக்கி வீசிவிட்டு, இடம் பெயர்க்கப்பட்ட ஒரு லட்சம் முஸ்லிம்களையும் ஒன்று திரட்டிப் போராடி அதனைப் பெறுவதற்கு தயாராகவுள்ளேன்.

யுத்தத்தால் வெளியேறியவர்கள் அவர்களுக்கும் வீட்டுத் திட்டங்களை கட்டித்தாருங்கள் என்று சில அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கேட்டால், அதற்கு வேறு காரணங்களைக் காட்டி அதனை தட்டிக் கழிக்கின்ற நிலையே தற்போது காணப்படுகின்றது.

இந்த நிலையினை புரிந்து கொண்டு வடமாகாண முஸ்லிம்கள் தமது தாயக மண்ணில் மீள்குடியேறுவதற்கு தடையாக இருப்பவர்கள், அதனை விடுத்து பாதிக்கப்பட்ட இந்த சமூகத்தின் கௌரவமான மீள்குடியேற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் - என்றார் அவர். (வ)



சிறுப்பிட்டி மத்தி வலசைப்புலம் ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்தில் கும்பங்களை குருக்கள் வீதி உலாவாக எடுத்து வருகின்றனர். (வ-11)

# சிமெந்து மாதிரி தரப் பரிசோதனை: அடுத்த மாதமளவில் அறிக்கை

## நுகர்வோர் சேவைகள் அதிகார சபை

கொழும்பு, செப் 27

உள்நாட்டு சந்தையிலுள்ள சிமெந்தின் மாதிரிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தரப் பரிசோதனையின் அறிக்கையை அடுத்த மாதமளவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்தையில் விற்பனை செய்யப்படும் சிமெந்துகளின் தரத்தை பரிசோதனை செய்வதற்காக அவற்றின் மாதிரிகள் வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் சேவைகள் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சந்தையிலிருந்து பெறப்பட்ட சிமெந்து மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நாடு மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனம் தொடர்பில் தகவல்கள் வெளியிட முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

சிமெந்து மாதிரிகள் அனுப் பி வைக்கப்பட்ட நிறுவனம் பரிசோதனைகளுக்காக 28 நாள் கால அவகாசம் கோரியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் பிரகாரம் அடுத்த மாதம் முற்பகுதியில் சிமெந்தின் தரம் தொடர்பான அறிக்கை தமக்குக் கிடைக்கும் என்று அறவிக்கப்பட்டுள்ளது.


DIPLOMA COURSES

அனிமேஷன்




Web Development
Cartoon Animation
Video Production
Graphic Design
Adobe Applications
Desktop Publishing
3D Studio Max

CSC-ASIAN
COMPUTER EDUCATION

யாழ்.நகர்- 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677
நெல்லியடி - கொடிகாமம் வீதி, 021 2262399
சாவகச்சேரி- 230, கண்டி வீதி, 021-2270267


# குற்றங்களுடன் தொடர்புடைய புலி உறுப்பினர்கள் சுவிஸில் தஞ்சம்

## திவயின வெளியிடும் தகவல்

கொழும்பு, செப்.27

பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய 100 இற்கும் மேற்பட்ட புலி உறுப்பினர்கள் சுவிற்ஸர்லாந்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய 100 இற்கும் மேற்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் சுவிற்ஸர்லாந்தில் தஞ்சமடைந்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகையில் வெளிவந்தசெய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகளுடன் குறித்த நபர்களுக்குத் தொடர்பு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இது தொடர்பில் சுவிற்ஸர்லாந்து சட்ட மா அதிபர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

பிறவுன்பெர்க் மற்றும் சூரிச் ஆகிய நகரங்களில் மேற்குறித்த புலி உறுப்பினர் கள் செறிந்து வாழ்வதாக எதிர் தமிழ்த் தரப்புக்கள் தகவல் வழங்கியுள்ளன.

இவர்களில் பலர் வேறு நாடுகளின் ஊடாக சுவிற்ஸர்லாந்திற்குள் பிரவேசித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, சுவிற்ஸர்லாந்துக்கான இலங்கைப் பிரதித் தூதர் ஜகத் டயஸிற்கு எதிராக அந்த நாட்டு சட்ட மா அதிபர் திணைக்களம் நட வடிக்கை எடுக்க உள்ள தாக அண் மையில் செய் திகள் வெளியாகி யிருந்தமை குறிப்பிடத் தக்கது. (வ)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன்
ச.சதுர்ஷகன்
158 புள்ளிகள்
கிளி/ பிரமந்தனாறு ம.வி





செல்வன்
இ. லக்ஷகன்
158 புள்ளிகள்
மு/ ஒட்டுசுட்டான் ஆறுமுகம் தமிழ் வித்தி.

இவர்கள் இருவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் மேன்மேலும் கல்வியிலும் பலதுறைகளிலும் சிறந்து விளங்க மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அம்மப்பா, அம்மம்மா (வேலு- தெய்வானை)
சித்தப்பா-சித்தி (சுரேந்திரன் - உதயகுமாரி)
சித்தப்பா- சித்தி (ஜெகதீஸ்- வசந்தகுமாரி)


# காணிப் பயன்பாட்டுக் குழுக்கூட்டம்

நாவற்குழி, செப்.27

வலி.கிழக்குப் பிரதேச மட்ட காணிப் பயன் பாட்டுக்குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்குப் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் மேற்படி செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (வ-121)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி சுதாகரன் கௌசலாதேவி
தம்பதியரின் செல்வப் புதல்வி
ஜதுர்சிகா
கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை மாணவி
2011ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரிட்சையில் 175 புள்ளிகளைப் பெற்று பாடசாலையின் முதன்மை மாணவியாகச் சித்தியடைந்தமையையிட்டு ஜதுர்சிகாவை மனதார வாழ்த்துவதுடன் இவருக்கு கல்வியறிவூட்டிய ஆசிரியர்கள் மற்றும் அதிபர் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.
வாழ்த்துவோர்
அப்பா, அம்மா, தங்கை-சாம்பவி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி கருணாமூர்த்தி - சுதா
தம்பதியரின் செல்வப் புதல்வன்
க.சங்கீத்
(மு/ ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலை)
அவர்கள் 2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவரை வழி நடத்திய பாடசாலை முதல்வர் இ.பூபதி அவர்களுக்கும் கல்வியறிவு வழங்கிய வகுப்பாசிரியர் சோ.திருக்குமரன் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அம்மப்பா - க.சோமசுந்தரம் (ஓய்வு பெற்ற தபால் ஊழியர்), பெரியப்பா - வே.இரவீந்திரகுமார், பெரியம்மா - இ.லதா, அண்ணா - நிஷாந்த், அக்கா - நிவிஷனா, தங்கை - டாளி, அம்மம்மா - சோ.சிவபாக்கியம், நிதா அன்ரா குடும்பம் (சுவிஸ்), பெரியம்மா - குடும்பம், மாமாமார், கோபினா அக்கா குடும்பம், மாமிமார், பூட்டியம்மா - சிதம்பரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை அரசியல் உதை பந்தாக பயன்படுத்தி வருகின்றது மேற்குலகம்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் காட்டம்

கொழும்பு, செப் 27

மேற்குலக நாடுகள் இலங்கையை அரசியல் உதை பந்தாகப் பயன்படுத்துகின்றன என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன், ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய மேற்குலக நாடுகள் இலங்கையின் மீது தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யுத்தத்திலிருந்து மீள்வதற்கு அரசு முயற்சித்துவரும் சந்தர்ப்பத்தில் மேற்குலக நாடுகள் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டுவருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் படையினர் பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தவில்லை. எவ்வா றெனினும், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகின்றது. எவரெனினும், யுத்தக் குற்றச்செயல்கள் அல்லது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக இலங்கை நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும்.

பிரிட்டன் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப் படம் உள்ளிட்ட சகல குற்றச்சாட்டுக்கள் குறித்தும் விசாரணை நடத்தப்படும்.

விசாரணைகளை நடத்துவதற்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண் டும். தற்போதைக்கு சர்வதேச சமூகம் இந்த விவகாரத்தில் தலையீடு செய்யக் கூடாது.

தமிழ் அரசியல் கட்சிகளுடனான பேச்சுகளை முடிவுறுத்துவது தொடர்பில் காலக்கெடு விதிக்க முடியாது.

இதேவேளை, எதிர்வரும் 2012ஆம் ஆண்டில் வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும். நூற்றுக்கணக்கான விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கடுமையான குற்றச் செயல்களுடன் ஈடுபட்ட விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இவ்வாறு தண்டிக்கப்பட உள்ளனர் - என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.



இதன்படி சுமார் இரண்டாயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (வ)

## ராணுவ ஒழுக்கத்தில் கவனம் செலுத்துங்கள்

ஐ.நா.அமைதிகாக்கும் படைக்காக ஹெய்ட்டியில் பணிபுரியும் இலங்கை ராணுவ வீரர்கள் நன்னடத்தையில் நாட்டுக்காக நற்பெயரைப் பெற்றுக்கொடுத்திருப்பதாக சுட்டிக்காட்டிய ராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய லெபனானில் உள்ள இலங்கை ராணுவத்தினரும் அதேபோன்று ஒழுக்கம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு லெபனான் சென்றுள்ள அவர் அங்கு பணிபுரியும் இலங்கை ராணுவ வீரர்களை நேற்று முன்தினம் சந்தித்து உரையாடியபோதே இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார். லெபனானிலுள்ள இலங்கை வீரர்களின் நலன் மற்றும் அவர்களுக்குரிய பணி குறித்து ராணுவத் தளபதி விரிவாகக் கலந்துரையாடியதாக ராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



முன்னாள் பிரதமர் எஸ்.டப்ளியூ.ஆர்.டி.பண்டார நாயக்காவின் 52ஆவது சிரார்த்த தினம் நேற்று திங்கட்கிழமை ஹொரகொல்லையிலுள்ள சமாதியில் நினைவு கூரப்பட்டது. அவர்களின் புதல்விகளான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, சுனேத்ரா பண்டாரநாயக்க ஆகிய இருவரும் சமாதியில் மலரஞ்சலி செலுத்துகின்றனர்.

# உணர்ச்சிவசப்பட்டு எடுக்கும் அரசியல் முடிவு மூலம் தமிழரை அந்தகாரத்தில் விட்டு விடக்கூடாது

## மனோ கணேசனுக்கு முஸம்மில் அறிவுரை

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் உணர்ச்சிவசப்பட்டு பொறுப்பற்ற முறையில் நடந்து, தலைநகரத்தில் தமிழ்ப்பேசும் மக்களை அரசியல் அந்தகாரத்தில் விட்டு விடக்கூடாது.

இவ்வாறு தெரிவித்தார் நடைபெறவுள்ள கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் ஏ.ஜே.எம்.முஸம்மில்.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு, வெள்ளவத்தையில் தமிழ்ப் பிரஜைகளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்திக்கும் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முஸம்மில் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்:

மிக முக்கியமான காலகட்டத்தில் கொழும்பில் இந்தத் தேர்தல் நடைபெறுகின்றது. இந்தத் தேர்தலில் ஐக்கியத் தேசியக் கட்சி அல்லாத பிற கட்சிகளுக்கு விழும் வாக்குகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பேரின வாத நிர்வாகத்தைக் கொழும்பு மாநகர சபைக்கும் விரிவுபடுத்தவே உதவும் என்பதை சிறுபான்மை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அத்தகைய நிலைக்குத் துணைபோவது தலைநகரில் சிறுபான்மையினரின் இருப்புக்கே சாவுமணி அடிப்பது போன்றதாகும். இதனைத் தமிழ்ப் பேசும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தத் தேர்தலில் வெறும் உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமல் அரசியல் தீர்க்கதரிசனம், தூரநோக்கு ஆகியவற்றுடன் செயற்படுமாறு மனோ கணேசனை நான் கோருகிறேன். அரசியல் நிலைப்பாட்டைத் திருத்திக் கொள்ள வேண்டும். அடக்குமுறை ஆட்சியாளர்களுக்கு நல்ல பாடம் புகட்ட எம்மோடு தோள் கொடுக்குமாறு அவருக்கும் தமிழ் மக்களும் நாம் அழைப்பு விடுக்கின்றோம். இவ்வாறு முஸம்மில் மேலும் கூறினார்.

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த தடையாக இருக்கக் கூடாது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்துக்கு ஹசனலி 'புத்திமதி'



கொழும்பு, செப்.27

"தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்திற்கு உண்மையான தேசப்பற்று இருக்குமானால், எமது தாய்நாட்டின் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அது தடையாக இருக்கக்கூடாது."

-இவ்வாறு ஐக்கியதேசியக் கட்சியின் சம்மாந்துறைத் தொகுதி அமைப்பாளர் எம்.ஏ. ஹசனலி தெரிவித்துள்ளார்.

"புலிவால்களுக்கும் சர்வதேசத்திற்கும் பயந்து நடந் தால் மக்களின் ஆதரவை அரசு இழப்பது நிச்சயம்" - என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இந்தக்கருத்திற்கு எம். ஏ.ஹசனலி எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் தான் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் கூறுகையில்:

13ஆவது அரசமைப்புத் திருத்தம் எமது நாட்டின் அரசியல் யாப்பின் ஒரு பகுதி என்பதைத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அறியவில்லைப் போல் தோன்றுகிறது. 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என்றும், இதனை நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் விரும்பவில்லை என்றும் கூறி அப்பாவியான நாட்டு மக்கள் மீது பழியைச் சுமத்துவது இந்த நாட்டின் மீது உண்மையான அக்கறை கொண்டவர்களின் கருத்தாக இருக்க முடியாது.

3 தசாப்தங்களுக்கு மேலாக யுத்தம் இடம்பெற்ற எமது நாட்டில் இன்று சமாதானம் தோன்றியுள்ளது. இதனால் சிறுபான்மை இன மக்களான தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விட்டன என்று அர்த்தமல்ல.

சிறுபான்மை மக்களும் இந்த நாட்டின் தேசப்பற்றுள்ள பிரஜைகளே. அவர்களும் சுதந்திரமாக இந்த நாட்டில் சமத்துவமான அரசியல் உரிமைகளுடன் வாழ வேண்டும். உண்மையான தேசப்பற்று, இந்த நாட்டின் மீதும், மக்கள் மீதும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்திற்கு இருக்குமானால், எமது தாய் நாட்டின் அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த இயக்கம் தடையாக இருக்கக்கூடாது என்றுள்ளது. (வ)

# கொழும்புக்கு ஒளி கொடுப்பதற்கு முன் ஐ.தே.க. அலுவலகத்துக்கு ஒளி வேண்டும்

கொழும்பை அபிவிருத்தி செய்ய கம்பீரமான திட்டங்களை திட்டமிடும் முன்பு ஐக்கிய தேசிய கட்சி தமது கட்சியின் தலைமை காரியாலயமான சிறி கொத்தாவுக்கு மின்சாரத்தை மீளப்பெற வழிசெய்ய வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷமன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:

அண்மையில் சிறிகொத்தாவுக்கான மின்சாரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, கொழும்பை அபிவிருத்தி செய்ய முன்னர் கட்சியின் தலைமைக் காரியாலயத்தினை சரிவரப் பராமரிக்கவும், ஊழியர்களுக்கு சரிவர ஊதியத்தினை வழங்கவும் நடவடிக்கை களை ஐக்கிய தேசிய கட்சி முதலில் முன்னெடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஐக்கிய தேசிய கட்சி தகுதி வாய்ந்த மேஜர்வேட்பாளரை போட்டியிடச் செய்யின் வெற்றிபெற வாய்ப்பிருந்த போதும் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தன்னால் கட்டுப்படுத்த கூடியவர்களையே தேர்தலில் போட்டியிட வைத்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (வ)

# குற்றச் செயல்களுடன் தொடர்பு: 199 பேர் கைது

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாகச் சந்தேகத்தின் பேரில் 199 பேர் கடந்தசிலதினங்களில் பொலிஸா ரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பு மற்றும் மத்திய கொழும்புப் பகுதியில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற் கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமை யக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. திருட்டுச் சம்பவங்கள் கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப் பொருள்கள் வைத் திருந்த மற்றும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் உட் பட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பி விளக்குடன் வாழும் கிராம மக்கள் தரமான முறையில் அமையாத வீதிகள்

## கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆளுநருக்கு மனு

முல்லைத்தீவு, செப்.27

கடந்த ஆண்டு மார்ச் மாதம் மீளக்குடியமர்த்தப்பட்ட ஒட்டு சுட்டான் பிரதேசத்தில் ஒட்டு சுட்டான் தவிர்ந்த ஏனைய கிராமங்களில் வசிக்கும் மக்கள் குப்பி விளக்குகளுடன் காலத்தைக் கழிக்கின்றனர்.

இதனால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைவதுடன் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளனர்.

இவ்வாறு கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.தனபாலசிங்கம் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பிவைத்த மனுவில் தெரிவித்துள்ளார்.

கற்சிலைமடு, முத்துஐயன்கட்டு, கனகரத்தினபுரம், பேராறு, தட்டையர்மலை, பண்டாரவன்னி, கருவேலன்கண்டல், கூழாமுறிப்பு, புளியங்குளம் ஆகிய கிராமங்களுக்கான மின் விநியோக வேலைகள் இதுவரையில் நடைபெறவில்லை.

இது தொடர்பாக உதவி அரச அதிபர், அரச அதிபர், மின்சார சபை என்பவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்திய போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை.

இன்று, நாளை என இழுத்தடிப்புச் செய்யாது மிக விரைவாக மக்கள் பயன்பெறும் வகையிலும் மாணவச் செல்வங்கள் தமது கல்வியைச் சிரமமின்றி தொடரவும் மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.

மேலும் வீதிகளின் புனரமைப்பு வேலைகளுக்கென வட பகுதிக்கு அனுப்பப்படுகின்ற பணத்தை ஒப்பந்தகாரர்கள் சுருட்டிக் கொண்டு செல்கின்றனர்.

வீதிகள் எதுவும் தரமான முறையில் அமைக்கப்படுவதில்லை. 10 நாள்களுக்குள் அவ்வீதிகள் பழுதாகி விடுகின்றன.

இதனால் மக்கள் பிரயாணம் செய்ய முடியாதுள்ளது. மேலும் இதனால் பாதிக்கப்படுவது மக்களே. இதனை எவரும் கண்டு கொள்வதில்லை.

கிராம அபிவிருத்தியில் எமது பங்களிப்பும் நிறைய உண்டு. உள்ளூர் அமைப்புகள் ஊடாக இந்த வேலைகளைச் செயற்படுத்தி உள்ளூர் ஒப்பந்தகாரர்களைக் கொண்டு செய்து முடிக்கும் போது நாம் பொறுப்பாக வேலைகளைக் கவனித்து நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் வேறு மாவட்ட ஒப்பந்தகாரர்கள் ஏனோ, தானோ என்ற ரீதியில் வேலைகளைச் செய்து முடித்துச் செல்கின்றனர்.

கொடிய யுத்தமொன்றுக்கு முகம் கொடுத்து மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் எந்தவித அபிவிருத்தியையும் காணாத நிலையிலேயே வாழ்கின்றனர்.

ஆகவே இந்த மக்களுக்குப் பயன்படும் வகையில் வேலைத் திட்டங்கள் இடம்பெறவேண்டும் என்றும் இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-601)

# மிகவும் கஷ்டப்பட்ட நிலையிலும் கூட கூலிவேலை செய்து அம்மா படிப்பித்தார்

## கிளிநொச்சியில் முதலிடம்பெற்ற டர்சன் கூறுகிறார்



கிளிநொச்சி, செப்.27

அம்மாவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி எதிர்காலத்தில் ஒரு வைத்தியர் ஆகி சமூகத்துக்குச் சேவையாற்ற வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். இவ்வாறு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 190 புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற மாணவன் சத்தியசீலன் டர்சன் தெரிவித்தார்.

கிளிநொச்சி புனித பற்றிமா றோ.க. வித்தியாலயத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றிச் சாதனை புரிந்த இந்த மாணவன் மேலும் கூறுகையில்:

அம்மாதான் எனக்கு எல்லாமே. மிகவும் கஷ்டப்பட்டுத்தான் படித்தேன். என்னையும் தங்கச்சியையும் அம்மாதான் கூலி வேலை செய்து மிகவும் கஷ்டத்துடன் வளர்த்து வருகின்றார்.

நான் பரீட்சையில் நல்ல பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டதற்கு எனது அம்மா வும் எனக்குக் கற்பித்த ஆசிரியர்களுமே காரணமானவர்கள். எனது குடும்ப நிலை காரணமாக என்னால் வெளியிடங்களில் கற்க முடியவில்லை. பாடசாலையிலும் வீட்டிலும் படித்தே இந்தப் பெறுபேற்றை எய்தினேன்.

எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக உருவாகி எம்மைப் போன்ற பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்குச் சேவை செய்வதே எனது முக்கிய இலட்சியமாக உள்ளது- என்றார். (க-6)

# முதிரை மரங்களை ஏற்றிய லொறி பொலிஸாரிடம் வசமாகச் சிக்கியது

முள்ளியவளை, செப்.27

முள்ளியவளையில் பல லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரங்களைச் சட்ட விரோதமான முறையில் ஏற்றி வந்த வாகனம் பொலிஸாரிடம் வசமாகச் சிக்கியுள்ளது.

முள்ளியவளை நீலகண்டபுரம் பகுதியிலிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை ஏற்றிக் கொண்டு வந்த லொறியொன்று இயந்திரம் பழுதாகிய நிலையில் மாமூலைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் அவ்விடத்துக்கு விரைந்து வந்த முல்லைத்தீவுக் குற்றத் தடுப்புப் பொலிஸார் லொறியைச் சோதனையிட்டனர்.

அப்போது முதிரை மரக்குற்றிகள் அனுமதியின்றி எடுத்து வரப்பட்டிருந்தமை அவர்களால் கண்டு பிடிக்கப்பட்டது.

மரத்தைக் கடத்தி வந்தவர்கள் சில லட்சங்களைத் தருவதாகப் பொலிஸாரிடம் பேரம் பேசிய போதும் அது பயன்தரவில்லையெனச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர்.

தற்போது மரங்கள் ஏற்றப்பட்ட லொறி பொலிஸாரால் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (க)

## அருள் தரும் ஆசி....



பொருத்தமான நிகழ்வு: புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு ஆசி வழங்கும் விழா அண்மையில் ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்தில் நடைபெற்ற போது பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு ஆசி வழங்குகின்றனர். (க)

# திருமுறிகண்டியில் மணல் கொள்ளை

திருமுறிகண்டிப் பகுதியில் வீடுகட்டுவதற்கான மணல்பெறுவதில் மிகுந்த சிரமத்தை அடைவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். திருமுறிகண்டிப் பகுதியில் 66 வீட்டுத் திட்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த வீட்டுத் திட்டத்துக்கான மணலைப் பெறுவதில் மக்கள் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

இந்தக் கிராமத்தில் உள்ள 18 ஆம் போர் என்று அழைக்கப்படுகின்ற கிராமத்தில் தேவையான மணல்வளம் உள்ளது. அதனை எடுப்பதில் சிரமங்கள் இருக்கின்றன. ஆனால் மேலிட உத்தரவு என்று கூறிக் கொண்டு தென்பகுதியைச் சேர்ந்த ஒருவர் மணல் வியாபாரம் செய்து வருகிறார். இவர் அனுராதபுரத்திலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் வரும் டிப்பர்களை மறித்து அனுமதி என்று கூறிக் கொண்டு வியாபாரம் செய்து வருகின்றார். (க-601)

# கோட்டைகட்டியகுளம் பாடசாலை மாணவர்களுக்கு கனடா வாழவைப்போர் அமைப்பால் உதவிகள்

முல்லைத்தீவு கோட்டைகட்டிய குளம் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள் போன்றன கனடா வாழ வைப்போர் அமைப்பின் உதவித் திட்டத்தின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஊடாக வழங்கப்பட்டன.

கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் கற்றல் உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள் போன்றவற்றை வழங்கும் நிகழ்வானது கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை ஆசிரியர் வே. திவாகர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் செயலாளர் பொன்காந்தன் மேற்படி உபகரணங்களையும் பயிற்சிப் புத்தகங்களையும் வழங்கி வைத்தார்.

மேற்படி நிகழ்வுக்குக் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்களான மா. சுகந்தன், சு.தயாபரன் ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளரான வே. வேளமாலிகிதன் மற்றும் பாடசாலை அதிபர் இ.தங்கராசா, ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

இந்த நிகழ்வில் சிறப்புரை ஆற்றிய பொன்காந்தன் வறுமையிலும் செம்மையாக வாழுகின்ற ஓர் இனத்தினுடைய கல்விப் பாரம்பரியங்களைக் கட்டிக்காக்கின்ற பணி மகத்தானது என்றார். (க-426)

# கோம்பாவிலில் மீள்குடியமர்வு என்ற போர்வையில் மக்களை நிர்ப்பந்தமாகத் தங்க வைக்க ஏற்பாடு

முல்லைத்தீவு, செப்.27

கோம்பாவில் கிராமத்தில் மீள்குடியமர்வு என்னும் போர்வையில் மக்களைத் தங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

வவுனியா மெனிக்பாம் முகாமில் தங்கியுள்ள மக்களைக் கோம்பாவில் கிராமத்தில் மீள்குடியமர்வு செய்யவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ள நிலையில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

மெனிக்பாம் முகாமில் தங்கியுள்ள மக்கள் சுய விருப்பிலேயே கோம்பாவிலில் குடியமர்வதாகக் காண்பிப்பதில் பலதரப்புக்களும் ஈடுபட்டுள்ள நிலையில் அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டே கோம்பாவில் கிராமத்தில் குடியமர்த்தப்படுவதாக முல்லைதீவு மாவட்டத்தின் சமூகப் பிரமுகர்கள் பலரும் தெரிவிக்கின்றனர்.

அகதிகள் நலனில் அக்கறையுடன் செயற்பட வேண்டிய ஐ.நா உதவி அமைப்புக்களின் அதிகாரிகள் கூட இந்த நடவடிக்கைகளில் இணைந்து கொண்டுள்ளமை வேதனையளிப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனார்.

வன்னியில் இறுதிப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், வலைஞர் மடம், ஆனந்தபுரம், அம்பலவன் பொக்கணை மற்றும் புதுக்குடியிருப்பின் சில பகுதிகள் இன்னமும் மக்களின் மீள் குடியமர்வுக்கு மறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன.

இந்தப் பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்படக் கூடுமென்ற ஐயமும் நிலவுகின்றது.

இதனால் கோம்பாவிலில் குடியமர்வதன் மூலம் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையே ஏற்படும் என்பதை இந்த மக்கள் உணர்ந்துள்ளனர்.

ஐ.நா. உதவி அமைப்புக்கள் உதவிகளை வழங்குவதாக உறுதி கூறுகின்றன. படையினரும் அதிகாரிகளும் கோம்பாவிலுக்குச் செல்லாது விட்டால் உதவிகளை நிறுத்தப் போவதாகக் கூறுகின்றனர்.

இதனால் மக்கள் என்ன செய்வதென்றே புரியாத நிலையில் குழப்பகரமான நிலையில் உள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மக்கள் இன்னமும் மனஅழுத்தத்திலிருந்து மீளவில்லை

## ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேருக்கு மனோதத்துவ நிபுணர் ஒருவரே - ரொய்ட்டர்

கிளிநொச்சி, செப்.27

போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் மனநிலை பாதிக்கப்பட்ட பலர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று ரொய்ட்டர் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

ரொய்ட்டர் செய்திச்சேவை கிளிநொச்சியில் சேகரித்த தகவல்களின்படி, இரண்டு வருடங்களுக்கு முன்னர் தாம் போரின் போது முகங்கொடுத்த கோரங்களில் இருந்து மக்கள் இன்னும் மீளத்திரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளது.

ரஞ்சனி என்ற பெயரைக் கொண்ட பெண் ஒருவர், போரின் போது தனது தாயின் சடலம் எரியுண்டதையும், தமது சகோதரி இரத்தம் தோய்ந்த நிலையில் வீழ்ந்து கிடந்ததையும், உறவினர்கள் கண்முன்னே கொல்லப்பட்டதையும் நினைவுகூருவதை ரொய்ட்டர் சுட்டிக்காட்டியுள்ளது.

இத்தனை சம்பங்களையும் நேரில்கண்ட தானும் இறந்திருக்கவேண்டும் என்று ரஞ்சனி கூறிய கருத்தை ரொய்ட்டர் கிளிநொச்சி மக்களின் எதிர்கால வாழ்வின் சந்தேகத்துக்கு உதாரணமாகக் காட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நிதியின் கீழ் கிளிநொச்சியில் பணியாற்றும் தன்னார்வத் தொண்டர் ஒருவர், இலங்கை அரசு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்றபோதும் மக்கள் வாழ்வியல் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மாவட்டத்தில் தற்கொலை சம்பவங்களும், துர்நடத்தைகளும் அதிகரித்து வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிலர் தம் மன அழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்காக விலைகுறைந்த மது பானங்களை வாங்கி வீதியோரங்களில் வைத்தே அருந்துகின்றனர் என்றும் ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிலர் தமது மன அழுத்தங்களுக்காக ஆலோசனை பெற்றுக்கொள்கின்றனர்.

கிளிநொச்சி அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன், உளவியல் மனோதத்துவ நிபுணர்கள் உரிய எண்ணிக்கையில் இருந்தால் தமது மாவட்டத்தில் மன அழுத்தம் ஒரு பிரச்சினையாக இருக்காது எனக் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேருக்கு ஒரேயொரு மனோதத்துவ நிபுணர் மாத்திரமே பணியில் இருப்பதையும் றூபவதி கேதீஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார். (வ)

# பூநகரிப் பிரதேசத்தின் அபிவிருத்தியானது உறுப்பினர்கள் அனைவரதும் கடமையாகும்

## பதவியேற்பு வைபவத்தில் பிரதேச சபைத் தவிசாளர்

பூநகரி,செப்.27

யுத்தம் காரணமாக சூனியப் பிரதேசமாகக் காட்சியளிக்கும் பூநகரிப் பிரதேசத்தைச் சகல துறைகளிலும் அபிவிருத்தி செய்ய வேண்டியது உறுப்பினர்கள் அனைவரினதும் கடமையாகும். எனவே கட்சி வேறுபாடு இன்றி எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆளும் கட்சி உறுப்பினர்களும் இணைந்து மக்களின் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட வேண்டும்.

இவ்வாறு பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் எஸ். சிறிஸ்கந்தராசா பதவியேற்பு வைபவத்தில் பேசும் போது கூறினார்.

பூநகரிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் தவிசாளர் தொடர்ந்து பேசும் போது,

எமது பிரதேச சபைக்கு ஜனநாயக ரீதியில் உறுப்பினர் கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். பலம் வாய்ந்த எதிர்க் கட்சி உறுப்பினர்களும் சபை யில் அங்கம் வகிக்கின்றார்கள். பல வழிகளாலும் எமது பிரதேசம் அழிவடைந்துள்ளது. மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது எமது கடமையா கும். பயணம் செய்ய முடியாத அளவுக்கு வீதிகள் சேதமடைந்துள்ளது. பருவமழைக்கு முன்பு வீதிகளைப் புனரமைக்க வேண்டிய பெரும் பொறுப்பு எம்மிடம் உள்ளது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் கட்சி வேறுபாட்டின்றி நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். கட்சி பேதங்கள் எம்மிடையே தலைதூக்குமாயின் எந்தவித அபிவிருத்தி நடவடிக்கைகளையும் எம்மால் மேற்கொள்ள முடியாது இருக்கும்- என்றார். (க-15)

# அக்கராயன் அரச ஊழியர்களுக்கு தற்காலிக வீடுகளை வழங்க ஏற்பாடு

கிளிநொச்சி அக்கராயன் பகுதி அரச ஊழியர்களுக்கு மாரிகால மழையைக் கருத்திற் கொண்டு தற்காலிக வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி அரச அதிபர், கரைச்சி உதவி அரச அதிபர், அக்கராயன் கிராம அலுவலர் ஆகியோர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். அக்கராயனில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் நிரந்தர வீட்டுத் திட்டங்கள் அரச ஊழியர்களுக்கு மறுக்கப்பட்டு வரும் நிலையில் இந்தியன் வீட்டுத் திட்டத்தில் இவர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படும்.


மாரிகால மழையைக் கருத்திற் கொண்டு தற்காலிக வீடுகள் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்ற அரச அதிபரின் உறுதிமொழியை அடுத்து அக்கராயன் அரச ஊழியர்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் அரச ஊழியர்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படாதென அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் அவர்கள் மிகுந்த கவலை அடைந்தனர். மேலும் யுத்தத்தால் இடம்பெயர்ந்த அரச ஊழியர்களின் வீடுகளையும் குண்டுகள் விட்டுவைக்கவில்லை.

வீடுகள் கூட வழங்கப்படாத நிலையில் தறப்பாலின் கீழ் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு ஏற்பட்டது. பெயருக்கு அரச ஊழியர் என அழைக்கப்பட்டாலும் இவர்களின் வாழ்வு அவலம் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு தொகைச் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு அதிலேயே தமது சகல தேவைகளையும் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் இவர்கள் நிறைவு செய்து வருகின்றனர்.

அரச ஊழியர்களுக்குத் தற்காலிக வீடுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியாகச் செயற்பட்ட அக்கராயன் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், அரச ஊழியர்களின் வேண்டுகோளை ஏற்று வழிகாட்டுதல்களை மேற்கொண்டு வரும் அக்கராயன் கிராம அலுவலர் கு.துஸ்யந்தன் ஆகியோருக்கு அரச ஊழியர்கள் நன்றி தெரிவிக்கின்றனர். (க-410)

## இறையருள் கிட்டும்....



ஆண், பெண் சமத்துவம்: கற்சிலைமடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தேரில் விநாயகப் பெருமான் அமர்ந்திருக்க ஆண்கள் ஒருபுறமும் பெண்கள் ஒரு புறமுமாக வடம் பிடித்து இழுக்கத் தயாராகும் காட்சி. (500)

# அரைகுறை நிலையில் ஒட்டுசுட்டான் கிணறுகள்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்கள் குடிதண்ணீருக்கெனக் கிணறுகளை அவசர அவசரமாகத் தோண்டிய போதிலும் அவற்றைப் பாதுகாப்பாகக் கட்டி முடிக்க முடியாத நிலையில் உள்ளனர். இதற்கான பொருளாதார வசதிகளும் இவர்களிடத்தில் இல்லை. சில கிணறுகள் அரைகுறையாகவும் காணப்படுகின்றன.

இந்தப் பகுதியில் உள்ள மக்களின் மிக முக்கியமான தொழிலாக விவசாயமே உள்ளது. இதனால் உபஉணவுச் செய்கைக்கு முக்கியமானது கிணறு. அதனைக் கட்டுவதற்கு தொண்டு நிறுவனங்களின் உதவிகளையும் இவர்கள் நாடியுள்ளனர். (க-500)

# இரும்பு வியாபாரிகளாக மாறும் வன்னிப் பாடசாலை மாணவர்கள்

அக்கராயன், செப்.27

வன்னிப்பிரதேச மாணவர்கள் இரும்பு வியாபாரிகளாக மாறி வருவதாக பாடசாலை முதல்வர்கள் தெரிவிக்கின்றனர். அண்மையில் திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் நடைபெற்ற துணுக்காய் வலய அதிபர்களுடனான கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு, துணுக்காய், வவுனியா வடக்கு ஆகிய கல்வி வலயங்களின் மாணவர்கள் வன்னியில் நடமாடும் இரும்பு வியாபாரிகளுடன் இணைந்து இரும்பு சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரும்பு சேகரிப்புக்காக மாணவர்கள் மிதிவெடிகள் அபாயம் மிகுந்த பகுதிகளில் நடமாடுவதாகவும் பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர். எறிகணைகளின் வெற்றுக் கோதுகள் மாணவர்களின் பிரதான இரும்பு சேகரிப்புப் பொருளாக உள்ளதன் காரணமாக மிதிவெடிகள் அபாயம் நிறைந்த பகுதிகளிலும் உயிராபத்துகள் நிறைந்த பகுதிகளிலும் இவர்கள் இரும்பு சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் குடும்ப வறுமையைப் பயன்படுத்தும் இரும்பு வியாபாரிகளின் செயல் தொடர்பாக பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இரும்பு சேகரிப்பதால் மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் அபாயமும் தோன்றியுள்ளது. (க-410)

# அடிப்படை வசதிகளின்றி கற்கால மனிதர்கள் போல வாழும் ஒதியமலை, பெரியகுளம் மக்கள்

முல்லைத்தீவு, செப்.27

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்டதும் வவுனியா மாவட்ட எல்லைக் கிராமங்களுமாகிய ஒதியமலை, பெரியகுளம் ஆகியவற்றில் குடியமர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி மிகவும் மோசமான நிலையில் அச்சத்துடன் கற்கால மனிதர்களைப் போன்று வாழ்வதாகத் தெரிய வருகின்றது.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 1984 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து வந்துள்ளனர். தமது சொத்துக்கள் முழுவதையும் இழந்த நிலையில் இவர்கள் உள்ளனர். எஞ்சிய காணிகளும் தற்போது பெரும்பான்மையினர் தங்களின் வசம் வந்துள்ளன. இவர்கள் தமது வயல்களில் விவசாயத்தை மேற்கொள்வதோடு பணப்பயிரான புகையிலை மற்றும் காய்கறி, நிலக்கடலை, உழுந்து, பயறு என்பவற்றையும் சாகுபடி செய்து வந்துள்ளனர். இதனால் நிறைய வருமானமும் இவர்களுக்குக் கிடைத்து வந்தது.

தற்போது ஒதியமலையில் 40 குடும்பங்களும் பெரியகுளத்தில் மொத்தமுள்ள 17 குடும்பங்களில் 9 குடும்பங்களும் மீள்குடியமர்ந்துள்ளன.

ஆனால் 1984 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெயர்ந்ததால் இவர்களது காணிகள் பெரும் காடுகளாக மாறியுள்ளன. இவற்றை வெட்டி அகற்றித் துப்புரவு செய்வதற்கு இவர்களிடம் நிதிவளங்கள் இல்லை. அடிப்படை வசதிகளும் இல்லை.

இவர்கள் மீளக்குடியமர்ந்த இடங்களில் சுகாதார வசதிகளோ, சந்தை வசதிகளோ இல்லை. ஏதாவது பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டுமென்றால் நெடுங்கேணி அல்லது வவுனியா செல்ல வேண்டும். இதற்கான பஸ் சேவைகளும் சீராக இல்லை. காலையில் புறப்பட்டால் பிற்பகல் மூன்று மணிக்கு வந்து சேரும். ஒரேயொரு பஸ்ஸை நம்பியே இருக்க வேண்டும்.

இந்தக் கிராமத்துக்குச் செல்லும் வீதியை ஊடறுத்து இரு ஆறுகள் ஓடுகின்றன. மழைகாலத்தில் பிரயாணம் செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது. ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் கூட இங்கு அமைக்கப்படவில்லை. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களைச் சந்திக்கின்றனர்.

மேலும் வனங்களின் மத்தியில் வாழ்கின்ற இந்த மக்களை மர்ம மனிதர்கள், காட்டு யானைகள் என்ற அச்சமும் தொற்றிக் கொண்டுள்ளது. பகல் வேளைகளில் கூட யானைகள் அட்டகாசம் செய்கின்றன. அண்மையில் கூட மூன்று வீடுகளை யானைகள் அழித்துவிட்டன. இதனால் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த சிலர் இங்குவராது வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே பல ஆண்டுகளாகத் தொடர்ந்து துன்பத்தைத் தவிர வேறொன்றையும் அறியாத இந்த கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து அவர்கள் நிம்மதியாக வாழ்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்பதே பலரதும் வேண்டுகோளாக உள்ளது. (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா ரெலிகொம் அறிமுகப்படுத்தியுள்ள அதிவேக இணையச்சேவை i-Sri Lanka

ஒருங்கிணைக்கப்பட்ட தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்களில் நாட்டில் முன்னணி வகிக்கும் அகன்ற அலை வரிசை மற்றும் உட்கட்டமைப்பு சேவை வழங்குனராக விளங்கும் ஸ்ரீலங்கா ரெலிகொம் இன்று தமது தீவிரமான அதிவேக அகன்ற அலைவரிசை வலையமைப்பினை தேசிய அளவிலான வலையமைப்பு நவீன மயப்படுத்தல் செயற்றிட்டமான "i - Sri Lanka வின்" ஊடாக அறிமுக்கப்படுத்தியது. யாழ்ப்பாணத்தில் SLT பிராந்திய தொலைத்தொடர்பு அலுவலகம் மற்றும் பராமரிப்பு நிலையம் என்பன திறக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய அளவிலான தகவல் தொழில்நுட்ப செயற்றிட்டமாக இது காணப்படுகின்றது.

i - Sri Lanka வலையமைப்பு நவீனமயப்படுத்தல் செயற்றிட்டமானது தற்போதைய செப்புக் கம்பி அடிப்படையிலான பிரவேச வலையமைப்பினை ஃபையர் ஒப்டிக்ஸ் மூலம் புதுப்பித்து நாடெங்கிலும் அகன்ற அலைவரிசை பிரவேசத்தில் புரட்சியினை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக வாடிக்கையாளர் தொடர்ச்சியான தடையற்ற அதிவேக இணையச் சேவையை பெற்றுக்கொள்ள முடியும். செக்கன் ஒன்றுக்கு 20 மெகா பைட்ஸ் (Mbps) மற்றும் அதற்கு மேற்பட்ட வேகத்தில் இணையச் சேவைகளை வாடிக்கையாளர் அனுபவிக்க முடியும்.

இலங்கையர்கள் அனைவரும் பாரபட்சமின்றி உலகத் தரமான தகவல் தொடர்பாடல் மற்றும் பொழுதுபோக்கு சேவைகளுடன் இணைக்கும் நோக்கத்துடன் குரல், தரவு மற்றும் ஒளி மூலமான சேவைகளில் SLT வாடிக்கையாளர்களுக்கு மேலும் பல புதிய மற்றும் தனித்துவமான உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான முன்னோடியாக இந்த வலையமைப்பு நிலை மாற்றம் காணப்படுகின்றது. இந்த நிறுவனத்தின் புதிய வர்த்தகச் சின்னக் குறிச்சொல்லான 'ஒரே தேசம், ஒரே குரல்'' என்பது இலங்கையர்கள் வாழ்வில் உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் SLT ஏற்படுத்தியுள்ள பெறுமதிமிக்க மாற்றத்தின் எதிரொலியாகவுள்ளது.

i - Sri Lanka என்ற செயற்றிட்டத்தின் ஊடாக SLT மெகாலைன் வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த தரத்திலான குரல் தொடர்ச்சியான தடையற்ற அதிவேக இணையம் மற்றும் நாடெங்கிலும் தொலைகாட்சி வசதிகள் என்பவற்றை வழங்குவதற்கான வலையமைப்பை விரிவாக்குவதுடன் மேம்படுத்தும் தனியார் வர்த்தக வலையமைப்பு, பொழுதுபோக்கு, தொலைக்கல்வி, இணையகல்வி இ-சுகாதாரம் மேலும் பலவற்றை அதிவேகத்தில் உயர்ந்த தரத்தில் மற்றும் நம்பகத்தன்மையுடன் பெற்றுக்கொள்வதற்கான சிறந்த தளத்தையும் அது வழங்கும். முழுமையான புதிய பரிமாணத்துடன் காட்சி பொழுது போக்கு சேவையை பரந்த எண்ணிக்கையிலான மக்களுக்கு வழங்குவதன் ஊடாக i-Sri Lanka SLT இன் PEOTV சேவைகளுக்கும் பிரவேசத்தை வழங்குகின்றது. தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித்சியம்பலாப்பிட்டிய இந்த வைபவத்தில் உரையாற்றும்போது ''ஸ்ரீலங்கா ரெலிகொம் i - Sri Lanka திட்டம் மற்றும் முன்னேற்றகரமான தகவல் தொழில்நுட்ப சேவைகள் மூலம் வழங்கிவரும் உயர்தர சேவையானது 2016 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதிகள் மூலம் ஒரு பில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட தொகையை நாடு பெற்றுக்கொள்ள வழிவகுக்கும். இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கிலுள்ள சகல கிராமங்களும் தகவல் தொழில்நுட்ப நிலையங்களை அமைக்கப்படவிருக்கின்றன. இதன்மூலம் முழு நாடும் சர்வதேச சமூகத்துடன் உடனடித் தொடர்புகளை ஏற்படுத்த வழிறக்கும்'' என்று குறிப்பிட்டார்.

i - Srilanka செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தல் மற்றும் யாழ்ப்பாணத்தில் பிராந்திய அலுவலகத்தினையும், பராமரிப்பு நிலையத்தையும் திறந்து வைத்தல் நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றிய SLT இன் பிரதம நிறைவேற்று அதிகாரி கிரெக்யங், நாட்டின் இணையத்தின் தேவையை சுட்டிக்காட்டினார். ''யாழ்ப்பாணத்தில் i - Sri Lanka செயற்றிட்டத்தினை ஆரம்பித்து வைப்பது மிகவும் முக்கியமானது. யாழ்ப்பாணத்துக்கும், நாட்டின் ஏனைய பகுதிக்கும் இடையில் உலகத் தரத்திலான தொலைத் தொடர்புகள் மற்றும் அகன்ற அலைவரிசை சேவைகளை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள இடைவெளியினை இணைக்கும் பாலமாக இது காணப்படும். அகன்ற அலைவரிசை சேவைகள் எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு தகவல் மற்றும் பொழுதுபோக்கு தெரிவுகளை ஒன்றாக்கி தருகின்றன. இந்த செயற்றிட்டத்தின் ஊடாக நாடு முழுவதும் எங்களுடைய வலையமைப்பை நாங்கள் மேம்படுத்துவோம். எங்களுடைய தொனிப்பொருளான 'ஒரே தேசம், ஒரே குரல்' என்பதை நோக்கி நாட்டை விருத்தி செய்வதற்கு வலையமைப்பு நவீனமயப்படுத்தலை முன்னேற்றுவோம்'' எனவும் அவர் குறிப்பிட்டார்.

Sri Lanka Telecom

ஒரே தேசம்.
ஒரே குரல்.

முன்னைப் போன்று செப்பிலான வயர்களை நீண்ட தூரங்களுக்குப் பயன்படுத்தாது ஃபையர் ஒப்டிக்ஸ் மூலம் அதிக தூரத்திற்கு வலையமைப்பு செயற்றிறன் அதிகரித்துள்ளது. உயர்திறன்மிக்க மற்றும் பொருத்தமான ஃபைபர் ஒப்டிக்ஸ் பயன்பாட்டின் மூலமாக செப்புவயர்களின் பயன்பாட்டினை i - Sri Lanka செயற்றிட்டம் கட்டுப்படுத்தியுள்ளது. இவை அனைத்தும் நாடெங்கிலும் பொருத்தப்பட்டுள்ள ஆயிரங்கணக்கான Multi-service Node (MSAN) இனால் இணைக்கப்பட்டுள்ளன. உபாய ரீதியாக அயல் நாடுகளுக்கும் சேவை வழங்கக் கூடியதாக MSAN பொருத்தப்பட்டுள்ளது. இவை அதிவேகமான தடையற்ற அகன்ற அலைவரிசை வலையமைப்பு சேவையை நாடு முழுவதிற்கும் வழங்குகின்றன.

### செலவை கட்டுப்படுத்தல்

ஃபைபர் ஒப்டிக்ஸின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டமையினால் மாத்திரம் வலையமைப்பு செயற்றிட்டம் அதிகரித்துவிடவில்லை. அது செப்புவயர்களின் இணைப்புகளின் நீளத்திலும் குறைப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் குறிப்பிடத்தக்க அளவு வாடிக்கையாளர்களுக்கு நம்பகத் தன்மை அதிகரித்துள்ளதுடன் SLTஇன் பராமரிப்பு மற்றும் இடமாற்ற செலவுகளும் குறைத்துள்ளன. பல வலையமைப்புத் தீர்வுகளை வழங்குவதற்கான ஆற்றல் மற்றும் தனித்த வழியிலான சேவைகள் என்பவற்றுடன் கற்றை அகலத்தை முழுமையாக பயன்படுத்தலானது பயனுறுதிமிக்கதாகவும், செலவு திறன்மிக்கதாகவும் உள்ளது. எனவே, புதுப்பித்தல் செலவானது செலவுதிறன்மிக்கதாக இருப்பதுடன் SLT இற்கு பயன்மிக்கதாகவும் உள்ளது. அது SLT வாடிக்கையாளர்களுக்கும் பயன் தருகின்றது.

### அகன்ற அலைவரிசை வலையமைப்பின் ஊடாக பெறுமதி மிக்க சேவை

இந்த பரவலாக்கப்பட்ட வலையமைப்பினூடாக அதிவேக வலையமைப்பு இணைப்புக்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பதுடன் புதிய சேவைகளின் அறிமுகமானது SLT அனுபவத்தை விஸ்தரிக்கும். அதேவேளை, இதற்கு முன்னர் அனுபவித்திராத உயர்தரமான சேவைகளை வாடிக்கையாளர்களும் அனுபவிப்பர்.

### i-SriLanka செயற்றிட்டம் பற்றி....

SLT வாடிக்கையாளர்களை இணைக்கும் SLT இன் தற்போதைய பொருத்தப்பட்ட வலையமைப்பு சேவைகளை பரவலாக்குவதற்கும், புதுப்பிப்பதற்கும் 2010ஆம் ஆண்டின் இறுதியில் i-SriLanka செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

FTTN மூலம், குறுகிய தூரங்களில் MSAN இனின் உபாய ரீதியான பொருத்தல்கள் மூலம் செப்பு கம்பி வயர்களின் இணைப்பு தூரத்தை குறைத்து நம்பகத் தன்மை, தரம் மற்றும் அகன்ற அலைவரிசை தரவு வேகத்தை அதிகரித்தது. ஃபைபர் வலையமைப்பினை வாடிக்கையாளர்களுக்கு நெருக்கமாக பரவலாக்குவதே செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

செப்புக்கம்பி வயர்களின் நீளம் குறைக்கப்பட்டமை நம்பகத்தன்மையில் மாத்திரம் முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை. அது பராமரிப்பு மற்றும் இடமாற்றல் செலவைக் குறைத்துள்ளது.

இந்த நிகழ்ச்சியின் மூலம் தீவிர அதிவேக அகன்ற அலைவரிசை இணைப்பை, 2 வருடங்களுக்கும் அதிகமாக பொருத்தப்பட்ட வாடிக்கையாளர்களாக உள்ளவர்களுக்கு 20Mbps வரை அதிகரிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. நிறுவனத்தின் அடுத்த தலைமுறை வலையமைப்பு (NGN) நவீன மயப்படுத்தலின் மூலம் இந்த நிகழ்ச்சி முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக மிகவும் முக்கியமாக அனைத்து மெகாலைன் வாடிக்கையாளர்களுக்கும் முதல் முறையாக PeoTV, பல அலைவரிசை தொலைக்காட்சி வலையமைப்பு என்பவற்றையும் வழங்கும்.

# சுற்றுப் பயணிகளின் நலனில் ECO நிறுவனம் அக்கறை



இலங்கை வங்கி, கோப்பாய் அலுவலகம் கிளையாகத் தரம் உயர்த்தப்பட்ட நிகழ்வு கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது. கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், இலங்கை வங்கியின் வடமாகாண கே.ஈ.டி.சுமணசிறீ ஆகியோர் கிளையை நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தனர். (த)

இலங்கை சுற்றுலாத்துறையில் நீங்கா இடம்பிடித்ததுடன் உல்லாசப் பயணிகளுக்குப் பாரிய சேவை யாற்றி வரும் ECO Team நிறுவனம் தனது 11 வது வருட பூர்த் தியை அண்மையில் கொண்டாடியுள்ளது.

பூகோளவியல் ரீதியாக அதிக இயற்கை அழகை கொண்டு விளங்கும் நாடாக இலங்கை விளங்குகின்றது. இலங்கை என்றாலே இயற்கை வளங்களே பலரது ஞாபகத்தில் வருவதை எவராலும் மறுக்க முடியாது.

தமது இனிமையான பொழுதை இயற்கையுடன் கழிப்பதற்காக இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயகுணிகளுக்கு அவர்கள் பார்வையிட வேண்டிய இடங்கள் தொடர்பாகவும் சரியான வழிகாட்டியாகவும் எக்கோ நிறுவனம் முன்னிலை வகிக்கிறது.

சுற்றுலாப் பயணிகளின் மனதைக் கவரும் வகையில் செயற்பட்டு அவர்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் காண்பிப்பது மட்டுமன்றி அவர்கள் தமது உல்லாசப் பயண நாள்களைக் கழிப்பதற்கான சாகச, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதில் எக்கோ நிறுவனம் தலைசிறந்து விளங்குகின்றது.

இவ்வாறு பல்வேறு வகையில் தமது பணிகளை முழுமையாக வழங்கிய ECO நிறுவனம் 2000 ஆம் ஆண்டு முதல் வரலாற்றில் வெற்றிகரமாக வீறுநடை போடு கின்றது. இலங்கையில் யுத்த காலத்திலும் எக்கோ நிறுவனம் தம்மாலான உல்லாசப் பயண வழி காட்டு முறைமைகளை முன்னெடுத்து நான்கு லட்சத்திற்கும் அதிகமானோர் பயன்பெறும் வகையில் அதனை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளது.

பணத்தை மாத்திரம் குறிக்கோளாகக் கொள்ளாது சுற்றுலாப் பயணிகளின் நலன்களையும் அவர்களுக்கு சேவை வழங்குவதையும் உன்னத நோக்கமாகக் கொண்டு எக்கோ நிறுவனத்தினர் செயற்படுவதனால் தான் அவர்கள் கடந்த ஒரு தசாப்த காலமாக இத்துறையில் முத்திரை பதித்து இன்றும் தமது பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்கின்றனர். அரசாங்கம், வனத்துறை மாத்திரமன்றி கிராமப் புறத்தைச் சேர்ந்த பலர் அதிக வருமானம் பெறுவதற்கான வாய்ப்புக்களும் கிடைத்துள்ளன.

# IIT அமைப்பின் மற்றுமொரு வெற்றிவாகை

பொதுசன உறவுகள் நிபுணர், விரிவுரையாளர், மேற்பார்வையாளர், ஆய்வாளர், பயிற்றுவிப்பாளர், பத்திரிகையாளர் ஆகிய பல்வேறு நிலைகளில் செயற்படுவதுடன் நவநாகரிகத் (Fashion); தொழிற்றுறையிலும் ஈடுபாடு காட்டிவரும் பிரசன்னா பத்மநாதன் Informatics Institute of Technology (IIT) யின் பழைய மாணவராவார். 25 வயதான பிரசன்னா IIT நிலையத்தில் பயின்று பிரிட்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் பல்கலைக்கழகத்திடமிருந்து Bsc (Hons) Information Systems with Business Management (முதலாம் தர) பட்டத்தையும் தங்கப் பதக்கத்தையும் பெற்றுள்ளார். அவர் தற்போது இதே பட்டத்திற்காகப் பயிலும் ஏனைய மாணவர்களுக்கு விரிவுரை நிகழ்த்துவதுடன் ஒரு மேற்பார்வையாளர் என்ற முறையில் இறுதியாண்டு மாணவர்களின் ஆய்வுத் திட்டங்களுக்கு வழிகாட்டி வருகிறார்.

நவநாகரிகத்துறை எழுத்தாளர் என்ற வகையிலேயே பிரசன்னா வியாபார உலகில் பிரவேசித்தார். 2008ஆம் ஆண்டில் தெற்காசியாவின் முதலாவது ஒன்லைன் சஞ்சிகையான "Agora" சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் பதவியை வகித்தபோது, அவரே இப் பதவியை வகித்த மிக இளவயதினராக இருந்தார். எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் மத்திய [illegible]வில் நடைபெறவுள்ள Mr. Earth 2011 போட்டிக்கு இலங்கைப் பிரதிநிதியைத் தெரிவு செய்யும் தேசிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். Mr. Earth 2011 போட்டியில் நடுவர்களில் ஒருவராகக் கடமையாற்றுவதற்கும் அவர் அழைக்கப்பட்டுள்ளார். இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இதுபோன்ற சர்வதேசப் போட்டிக்கு நடுவராக அழைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். திரு. பிரசன்னா பத்மநாதன் தற்போது Cameron Pale and Medina (Pvt) Ltd. என்னும் தொடர்பாடல்துறை நிலையத்தில் பொதுசன உறவுகள் [illegible]. IIT வழங்கும் [illegible]டிப்பானது தகவல் தொழில்நுட்பத்தில் மாத்திரம் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கான ஒரு பட்டப் படிப்பு என்று பலர் கருதுகிறார்கள். இது தவறான கருத்தாகும். இப் பட்டப்படிப்பு தகவல் தொழில்நுட்ப அறிவுடன் வியாபார முகாமைத்துவத் திறமைகளையும் பெற்றுக்கொடுக்கின்றது. பாடத்திட்டம் முழுமையான தொழில்நுட்பக் கல்வியின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளபோதிலும், ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திலும் நடைமுறைப் பிரயோகங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இதுவே IIT பட்டப் படிப்பின் வித்தியாசமாகும். நான்கு ஆண்டுகளைக் கொண்ட கற்கை நெறியின் மூன்றாவது ஆண்டில், மாணவர்கள் தொழில் முன்னிலைப் பயிற்சியைப் பெறுகிறார்கள். அவர்கள் தமக்கு விருப்பமான கம்பனியொன்றில் நடைமுறைப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள உதவி வழங்கப்படுகிறது. எனவே, அவர்கள் தாம் கற்றுக் கொண்ட விடயங்களை பல்தேசியக் கம்பனியொன்றில் அல்லது இலங்கையின் பிரபல கம்பனியொன்றில் நடைமுறையாக பிரயோகிக்கும் அனுபவத்தைப் பெறுகிறார்கள். பட்டப்படிப்பை முடித்த பின்னர், அதே கம்பனியில் தொழில் வாய்ப்பைப் பெறும் சந்தர்ப்பமும் அவர்களுக்குக் கிடைக்கின்றது என்று பிரசன்னா கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது குடும்பம் பற்றி மட்டுமே சிந்திக்காமல் மக்கள் நலனிலும் கவனம் செலுத்த வேண்டும்

## ஐ.தே.க. பதுளை மாநகரசபை வேட்பாளர் எம்.நஸீர்

தியத்தலாவை, செப். 27

தமது குடும்பத்தைப் பற்றி சிந்திக்கும் அரசு ஏழை மக்களையும், தோட்ட மக்களையும் பற்றிச் சிந்திக்க வேண்டும். இன்றேல், 1977 ஆம் ஆண்டை விட மோசமான பின்னணியை இன்றைய அரசு சந்திக்க நேரிடும் - என முன்னாள் பதுளை மாநகர சபை உறுப்பினரும், ஐ.தே.கட்சி பதுளை மாநகர வேட்பாளருமான எம்.நஸீர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பதுளை வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில்

இன்று அரசு நாளுக்கு நாள் பொருள்களின் விலையை உயர்த்திச் செல்கின்றது. இதனால் அன்றாடம் கூலி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளர்களும், குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இது தவிர, அரச உத்தியோகம் புரிவோரும் வாழ்க்கைச் செலவை மிகவும் கஷ்டப்பட்டு கொண்டு செல்வதை இன்று கண்கூடாகக் காணமுடிகிறது. அரசிடம் தெளிவான கொள்கை இல்லாத காரணத்தால் நாளுக்கு நாள் விலையேற்றம் உயர்ந்து செல்கின்றது. எனவே, அரசு தனது குடும்பத்தைப் பற்றிச் சிந்திப்பது போன்று கொஞ்சம் பொதுமக்களையும் பற்றிச் சிந்திக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

பதுளை மாநகரைப் பொறுத்தளவில் சிறுபான்மையினர் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். நான் கடந்த 20 வருடங்களாக மாநகரசபை உறுப்பினராக இருந்து எந்த இனபாகுபாடுமின்றி சேவையாற்றியுள்ளேன். இதனால்தான் கடந்த 20 வருடம் இந்தச் சபையூடாக சிறுபான்மை அங்கத்துவத்தைத் தக்கவைத்துள்ளேன்.

இந்த 20 வருட சேவையில் சுமார்.21 முன்பள்ளிகளை மாநகர சபையின் ஒத்துழைப்புடன் உருவாக்கியுள்ளேன். எனக்குக் கிடைக்கும் நிதியைக் கொண்டும், எனக்கு இறைவன் கொடுத்ததை வைத்தும் என்னால் முடிந்த சேவைகளைச் செய்துள்ளேன். மீண்டும் மக்களின் வாக்குகள் கிடைக்கும் இடத்து தொடர்ந்தும் எனது சேவை நீடிக்கும்.

ஐ.தே.கட்சியின் தலைமையை மீறி செயற்பட்ட எவரும் அரசியலில் பிரகாசிக்கவில்லை. உதாரணமாக முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் தலைமையை மீறி செயற்பட்ட அமரர்களான லலித் அத்துலத்முதலி, காமினி திஸாநாயக்க போன்றோருக்கு என்ன நிகழ்ந்தது?

எனவே, ஒரு பொம்மையாக இருந்தாலும் தலைமைக்குக் கட்டுப்பட வேண்டியதை எல்லாச் சமயங்களும் அறிவுறுத்தியுள்ளதை நாம் புரிந்து செயற்படவேண்டும். என்றார். (வ)

அமைச்சர்கள் உறுதி வழங்கியும்

# நட்டஈடு வழங்கவில்லை என்று செங்கல் உற்பத்தியாளர்கள் விசனம்

அட்டாளைச்சேனை, செப்.27

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட செங்கல் உற்பத்தியாளர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படும் என்று அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளால் பல்வேறு தடவைகள் வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ள போதும், இதுவரை தமக்கு எந்தவித மான நட்ட ஈடுகளும் கிடைக்கவில்லை என்று அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாலமுனை செங்கல் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தின் போது இந்தப்பிரதேசத்தின் செங்கல் உற்பத்தியானது முழுவதுமாகப் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி உற்பத்தியாளர்களில் சிலர் மீண்டும் தமது தொழிலை ஆரம்பித்துள்ள போதிலும், வெள்ளத்தினால் தமது தொழிலில் ஏற்பட்ட நட்டத்திலிருந்து தாம் இன்னும் மீளவில்லை என்று செங்கல் உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் நடைபெறும் கட்டட நடவடிக்கைகளுக்குத் தேவையான செங்கற்களில் கணிசமான தொரு தொகைளை உற்பத்தி செய்யும் பிரதேசமாக பாலமுனைக் கிராமம் திகழ்கின்றது.

பாலமுனையிலுள்ள செங்கல் வாடிகளில் முன்னர் நாளொன்றுக்கு சுமார் 50 ஆயிரம் செங்கற்கள் உற்பத்தி செய்யப்பட்டன. எனினும், வெள்ளத்தின் பின்னர் பலர் தமது செங்கல் உற்பத்தித் தொழிலைக் கைவிட்டுள்ளதால்,தற்போது இந்தப் பகுதியில் செங்கல் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.

எனவே, வாக்குறுதி வழங்கியமைக்கிணங்க வெள்ளத்தினால் தமது தொழிலில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நட்ட ஈட்டை வழங்கி வைக்குமாறு அந்தப் பகுதி அமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசியல் வாதிகளிடம் செங்கல் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ)

# காரைதீவு கண்ணகி அம்மன் ஆலய பிரதேசம் புனித பிரதேசமாகப் பிரகடனம்

அம்பாறை, செப். 27

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயப் பிரதேசத்தை புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்துமாறு கோரும் தீர்மானம் ஒன்று காரைதீவுப் பிரதேச சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

காரைதீவுப் பிரதேச சபையின் முதலாவது அமர்வு தவிசாளர் செல்லையா இராசையா தலைமையில் அன்மையில் நடைபெற்றபோது, ஜனாதிபதி மற்றும் கலாசார அமைச்சரைக் கோரும் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தக் கோரும் தீர்மானத்துக்கான பிரேரணையை தவிசாளர் முன்மொழிந்ததுடன் சபையில் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது. இந்தவேளை முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த மண்ணான காரைதீவில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் ஆலயம், வரலாற்றுப் பெருமைமிக்க பழம் பெரும் ஆலயமாகும்.

எனவே இந்த ஆலயம் அமைந்துள்ள பிரதேசம் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப் படவேண்டுமென்பதே பலரதும் எதிர்பார்ப்பாகும். (வ-30)



சுனாமி மாடி வீட்டு தொகுதிகளை பராமரிக்கும் கூட்டு ஆதன முகாமைத்துவ சபைகளின் கல்முனை பிராந்திய மட்டத்திலான சம்மேளனம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்முனை இறைவெளிக்கண்டசுனாமி வீட்டுத்திட்ட கூட்டு ஆதன முகாமைத்துவ சபை அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அமைச்சர் விமல் வீரவன்சவிடம் மாடி வீட்டுத் திட்டங்களில் காணப்படும் தேவைப்பாடுகள் தொடர்பான மகஜர் ஒன்றை கையளிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

# மின்சார சபை வாகனம் மீது தாக்குதல்

மட்டக்களப்பு, செப்.27

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் வைத்து இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான வாகனமொன்று நேற்று முன்தினம் நண்பகல் இனம் தெரியாதோரால் தாக்கப்பட்டதால் வாகனத்தில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் மற்றும் மின்சார சபை உத்தியோகத்தர் ஒருவரும் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை வாழைச்சேனை மின் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்டு வந்தவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் கொழும்பிலிருந்து வந்த இலங்கை மின்சாரசபை புலனாய்வு அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

அந்தவேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக இலங்கை மின்சார சபை வாழைச்சேனை அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அஸ்தமிக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துல்கர் நஹீம்

அம்பாறை,செப்.27

''மக்களை மதிக்காது அந்நியப்பட்டுக்கொண்டு செல்லும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முற்றாக அஸ்தமிக்கும் காலம் வெகு தூரத்திலில்லை இவர்களுக்கு கல்முனை மாநகர சபைத் தேர்தலிலும் மக்கள் பாடம் புகட்டத் தயாராகவுள்ளனர்.

இவ்வாறு கிழக்குமாகாண சபை உறுப்பினரும், மருதமுனை அக்கரை பவுண்டேசன் தலைவருமான எம்.எல். துல்கர் நஹீம் (துலஷான்) தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் பதினோராவது சிரார்த்த தினத்தையொட்டி தேசிய காங்கிரஸ் ஏற்பாடு செய்த நினைவுப்பேருரைக் கூட்டம் மருதமுனை கடற்கரை முற்றவெளியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய காங்கிரஸின் மூத்த பிரதிச் செயலாளர் ஐ.ஏ.ஹமீட் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரும், தேசிய காங்கிரஸின் தேசிய தலைவருமான ஏ.எல்.எம். அதாவுல்லா பிரதம அதிதியாகக்கலந்து கொண்டார்.

மாகாண சபை உறுப்பினர் துல்கர்நஹீம் தொடர்ந்து உரையாற்றுகையில் ''சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறான கொள்கை, இலட்சியங்களுடன் உருவாக்கப்பட்டதோ அந்தப் பாதையை விட்டும் தலைவர் மர்ஹூம் அஷ்ர பின் வழிகாட்டலை விட்டும் விலகிச் சென்று கொண்டிருக்கின்றது.

சுயலாப அரசியல் நோக்கில் கட்சிஇட்டுச் செல்லப் படுவதால் மக்கள் குறிப்பாக கிழக்கு முஸ்லிம்கள் கட்சி மீதும் அதனை பிழையாக வழி நடத்தும் தலைமைத்துவம் மீதும் நம்பிக்கையிழந்து பெரும் வெறுப்புற்ற நிலையிலுள்ளனர்.

இதன் பிரதிபலிப்பாகவே கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்கள் [illegible] தீர்ப்பை வழங்கியிருந்தனர்.

இதே நிலைமை அம்பாறை மாவட்டத்திலுமுள்ளது. தற்பொழுது நடைபெறவிருக்கும் கல்முனை மாநகர சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுக்குத் தக்க பாடத்தைப் புகட்டுவதற்கும் மக்கள் தயாராகவே உள்ளனர்.

மறைந்த நம் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் 2012 ஆம் ஆண்டில் முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயர் நாமம் முடிவுக்கு வருமெனப்பலகூட்டங்களில் முன்பு கூறியிருந்தார்.

அவர் வேறு அர்த்தத்தோடு இதனைக் கூறியிருந்தாலும், அப்பெருமகனின்கூற்று நிரூபணமாகும் வகையில் கட்சி அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.-என்றார். (வ-30)

# ம.ம.மு வேட்பாளர் சுரேஷ் ஐ.தே.கவுடன் இணைவு

பதுளை, செப்.27

மலையக மக்கள் முன்னணியின் பதுளை மாநகரசபை வேட்பாளர் நோபல் சுரேஷ் கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

பதுளை மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து கடந்த வெள்ளிக்கிழமை ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பதுளை வெலேகடை பகுதியில் பிரசாரக் கூட்டமொன்று நடைபெற்றது.

இதன்போதே, நோபல் சுரேஷ் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டதுடன் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து கட்சி அங்கத் துவத்தையும் பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சொந்த வேலையை விட, மற்றவர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். நாளைய சில காரியங்களுக்காக இன்றே முன்னேற்பாடுகள் செய்வீர்கள். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம். தொழில் ரீதியாக விடயம் தெரிந்த சிலரிடம் ஆலோசனை நடத்துவீர்கள். சில வேலைகளைச் செய்ய மறந்து தண்டச் செலவு நேரும்.

**இடபம்:**
முன்கோபம், வேகத்தைக் குறைக்க வேண்டிய நாள். இழுபறியாக இருந்த வேலை ஒன்று, திடீரென முடிவுக்கு வரலாம். வீட்டில் வசதி வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். உறவினர் ஒருவர் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல் கையை விரிப்பீர்கள். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தமடைவீர்கள். வெறுப்பு, விரக்தி உண்டாகும்.

**மிதுனம்:**
எதிர்கால நலனை கருத்தில் கொண்டு செயற்படும் நாள். தடைப்பட்டுக் கொண்டே வந்த ஒரு காரியம் எளிதில் முடிவுக்கு வரும். தொழில் ரீதியான விடயங்களில் அவசரமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும் நாள்.

**கடகம்:**
மன அமைதியைப் பாதிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். பெற்றோர் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கலாம். உதவி பெற்ற சிலரே உங்களை விமர்சனம் செய்யலாம். நீங்கள் செய்த தவறு ஒன்றை மற்றவர்கள் தலையில் சுமத்தி தப்பித்துக் கொள்வீர்கள். சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம்.

**சிங்கம்:**
குடும்ப உறுப்பினர்களின் குணம் அறிந்து நடந்து கொள்வீர்கள். அயலார் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். எடுத்த முடிவுகளில் பின்வாங்காமல் உறுதியாக இருப்பீர்கள். பெரிய மனிதர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே கைக்கு கிடைக்கலாம். புதிய அனுபவம் பெறலாம்.

**கன்னி:**
விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்ப வந்து சேரும் நாள். சில வேலைகளை அவசரப்பட்டுச் செய்து விட்டு பின்னர் வருத்தப்படுவீர்கள். குல தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். உங்களின் திறமைக்கு சவால் விடும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபம் ஒன்றை உங்களின் குடும்ப உறுப்பினர்கள் மீது காட்டுவீர்கள்.

**துலாம்:**
சிக்கலான நபர்களிடமும் தந்திரமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். நீண்ட நாளைய கடன் மிகுதி ஒன்றைத் தீர்க்கும் வாய்ப்பு உருவாகும். தாய் வழியில் ஏற்பட்ட செலவுகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். பயணங்கள் சந்தோஷம், மகிழ்ச்சி தருவதாக அமையும். இதுவரை உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் திடீரென வரலாம். வளம் பெருகும் நாள்.

**விருச்சிகம்:**
கொள்கையில் உறுதியுடன் செயற்படும் நாள். தேக ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். உங்களின் வேலை ஒன்றை சக ஊழியர்கள் மூலம் முடித்துக் கொள்வீர்கள். பழகிய சிலர் மூலம் பணவரவுகளை அல்லது ஆதாயங்களைப் பெறும் வாய்ப்பு உருவாகும்

**தனுசு:**
மனதில் பட்டதை சரியென சொல்வதால் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம். உறவினர்களால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். சில விடயங்களில் அதீத நம்பிக்கை வைத்து மற்றவர்களிடம் சவால் விடும் வகையில் பேசுவீர்கள். உடன் பிறப்புக்கள் விடயத்தில் பொறுமை அவசியம். அரசு காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**மகரம்:**
மதிப்பு, மரியாதையை பாதிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டிய நாள். ஓய்வெடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு, யாராவது வந்து தங்கள் பிரச்சினைகளைச் சொல்லி தொந்தரவு கொடுக்கலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். பயம் உண்டாகும்.

**கும்பம்:**
மற்றவர்கள் என்ன பேசுவார்கள் என்பதைப் பற்றி கவலைப்படாமல் நினைத்ததை செய்யும் நாள். அரசியல்வாதிகள் மகிழ்ச்சியுடன் உற்சாக மாகக் காணப்படுவர். ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க வேண்டும். வெளியூர் பயணங்கள் மூலம் சில வேலை கள் முடியலாம். மனைவி வழி உறவுகள் உதவிகரமாக இருப் பர். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும்.

**மீனம்:**
திடீர் பணவரவுகளைப் பெறும் நாள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். தாய் வழி உறவினர்களால் ஆதாயம் பெறலாம். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். மாற்று மத நண்பர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். சுறுசுறுப்பாகச் செயற்படும் நாள்.

# தொடரப்போ...
# தமிழர் த...
# தலைவித...
# தீர்மானி...

ராஜராஜன்

இலங்கை ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குமிடையில் இறுதியாக இடம்பெற்ற பேச்சின் போது 13 ஆவது அரசியல் சாசனத் திருத்தத்துக்கும் அப்பால் சென்று பேச விரும்புவது தொடர்பான முடிவு எட்டப்பட்டி ருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே 10 சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்ற போதும் அதில் இம்மியளவு முன்னேற்றம் கூட ஏற்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் கடந்த 40 நாள்களாகப் பேச்சு எதுவும் இடம்பெறாதபோதும் திடீரென ஏதோ அதிசயம் நிகழ்ந்தது போன்று இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஆனால் பல விதங்களிலும் நொந்து நூலாக வீழ்ந்து கிடக்கும் தமிழர் தரப்பிலிருந்து இந்த அறிவுப்புத் தொடர்பாக எந்தவித சந்தோச உணர்வலைகளும் எழவில்லை என்பது தான் உண்மை நிலையாகும். இந்தப் பேச்சுக்கள், ஒப்பந்தங்கள் என்பவற்றை எத்தனையோ தடவைகள் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போனவர்கள் இவர்கள். இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தமிழ்த் தலைமைகளும் சிங்களத் தரப்பும் எத்தனையோ பேச்சுக்களைக் கண்டிருக்கின்றன. பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என எத்தனையோ கிழித் தெறியப்பட்ட ஒப்பந்தங்கள். இவையெல்லாம் சாத்தியப்படாத நிலையில்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்கினார்கள். தொடர்ந்து 30 வருடங்களுக்கும் மேலாக ஆயுதப் போராட்டம் அதுவும் அடக்கப்பட்ட நிலையில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இலங்கை அரசும் தமிழர் தரப்பும் வேறு வழியின்றி ஏதோவொரு மறைமுகச் சக்தியின் வற்புறுத்தலின் பேரில் பேச்சு மேசையில் அமர்ந்திருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. ஏனென்றால் இந்தப் பேச்சுக்களால் எதுவுமே நிகழப் போவதில்லை என்பதை இரு தரப்பினருமே உணர்ந்திருப்பர்.

### எல்லாம் இடியப்பச் சிக்கல்

இலங்கையின் இனப்பிரச்சினையானது இவ்வளவு விஸ்வரூபம் எடுப்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. ஏனென்றால் அண்டை நாடான இந்தியாவைப் போன்று ஏராளமான மொழிகளைப் பேசும் மக்கள் இலங்கையில் இல்லை. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையே பெரும்பாலான மக்கள் பேசுகின்றனர். ஏனைய மொழிகளைப் பேசும் மக்களில் மிகக் குறைவான தொகையினரே இங்கு வாழ்கின்றனர். அவர்களும் தாம் சார்ந்த பிரதேசத்திலுள்ள மொழிகளில் பரிச்சயம் உள்ளவர்களாக விளங்குகின்றனர். எனவே பிரதானமான இரு மொழிகளுமே வழக்கத்தில் உள்ளன. இவையிரண்டுக்கும் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து சம உரிமை வழங்கியிருந்தால் எவ்வித பிரச்சினையும் தலை தூக்கியிருக்க முடியாது. ஆனால் ஆளுந்தரப்பினரின் மேலாதிக்க எண்ணத்தினால் எல்லாமே இடியப்பச்சிக்கலாக விடுபடமுடியாத நிலையை எட்டியிருக்கின்றன.

தற்போது இலங்கையிலே ஜனநாயகம் என்ற போர்வையில் எதேச்சாதிகார அரசாட்சியொன்று இயங்கி வருவது அனைவரும் அறிந்த ஒன்று. ஜனநாயகத்தின் பெயரால் தேர்தல் நடத்தப்பட்டு ஆளும் தரப்பினரைத் தெரிவு செய்வது மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கேயொழிய நசுக்குவதற்காகவல்ல. நாடாளுமன்றத்தில் மூன்றிலொரு பெரும்பான்மை இருந்தால் போதும் சகல அதிகாரங்களும் ஆட்சி செய்வோரிடம் குவிந்து விடுகின்றன. அவர்களை எவருமே கட்டுப்படுத்த முடியாது. அவர்கள் வைத்ததுதான் சட்டம். இத்தகையதொரு நிலையே இலங்கையிலே தற்போது நிலவுகின்றது.

### சிறுபான்மையினரை ஒரு பொருட்டாக மதிக்காத அரசு

மேலும் சிங்கள மக்களின் வாக்குப் பலத்தால் ஆட்சிக்கு வந்ததாகக் கூறும் ஜனாதிபதியும் அவரது அரசும் சிறுபான்மை மக்களை ஒரு பொருட்டாக மதிப்பார்களென எண்ணுவது முட்டாள்தனமேயொழிய வேறொன்றுமில்லை.

இந்த நிலையில் சர்வதேசத்தினால் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு வரும் இலங்கையரசு இவற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் ஒரு தந்திரோபாயமாக இந்தப் பேச்சு நாடகத்தை அரங்கேற்றுவதாகவே பெரும்பாலான தமிழ் மக்கள் நம்புகின்றனர். சிங்கள மக்களும் நன்றாகப் பேசிக் களைக்கட்டும் இறுதியில் ஒன்றுமே நடக்கப் போவதில்லையென்ற எண்ணத்தில் உள்ளனர். ஏனென்றால் கடந்தகால வரலாறுகளை அவர்கள் நன்கறிவர்.



இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரதிநிதிக ளாகத் தம்மைக் கூறிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எந்த நம்பிக்கையின் அடிப்படை யில் இந்தப் பேச்சு மேசையில் அமர்ந்திருக்கின்றனர் என்பது புரியாத புதிராகவே உள்ளது. ஏனென்றால் இலங்கையரசுடன் சமமான பலத்தில் இருந்த விடுதலைப்புலிகளின் பேச்சுக்களே தோல்வியில் முடிவடைந்துவிட்டன. இந்த நிலையில் எல்லாமே இழந்து சரணாகதி நிலையிலிருக்கும் இலங்கைத் தமிழரை இலங்கையரசு மதிக்குமா என்பது சந்தேகமே. இதனை ஏற்கனவே சக்திமிக்க ஒருவராக மதிக்கப்படுபவரும், ஜனாதிபதியின் சகோதரருமாகிய கோத்தபாய பகிரங்கமாகவே அறிவித்துவிட்டார். இதுதான் ஜனாதிபதியின் நிலைப்பாடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஏனென்றால் இன்று நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவின் ஆலோசனைப் பிரகாரமே நடைபெறுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகும் பேச்சு

# தரப்பின் ...தியைத் ...சிக்குமா?

"சிங்கள மக்களின் வாக்குப் பலத்தால் ஆட்சிக்கு வந்ததாக் கூறும் ஜனாதிபதியும் அவரது அரசும் சிறுபான்மை மக்களை ஒரு பொருட்டாக மதிப்பார்களென எண்ணுவது முட்டாள்தனமேயொழிய வேறென்றுமில்லை."




என்பது ஒன்றும் மூடுமந்திரமல்ல. மேலும் அரசுடன் இணைந்திருக்கும் ஹெலஉறுமயவின் சம்பிக்க ரணவக்க மற்றும் விமல் வீரவன்ஸ போன்றோர் தமிழர்களுக்கு எந்தவிதமான ஆட்சியதிகாரங்களும் வழங்கக் கூடாது என்பதில் முனைப்பாக உள்ளனர். ஏன் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் முடிவும் அதுதான். அத்துடன் பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவுடனேயே எத்தகைய தீர்வையும் வழங்க முடியுமென அரசுத் தலைமையும் கோடிகாட்டியுள்ளது.

### காலத்தை வீணடிக்கும் செயல்


இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவான வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு ஒரு நீதிமன்றத் தீர்ப்பினால் துண்டாடப்பட்டது. இதைப் போன்றே சுனாமிக் கட்டமைப்பில் விடுதலைப் புலிகளை இணைக்கும் திட்டமும் கைவிடப்பட்டது. சம்பூர் மக்களின் வெளியேற்றத்துக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணையின்றியே. முடித்து வைக்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போதைய பேச்சுக்களால் பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்ற எண்ணமே தலைதூக்கியுள்ளது. வெறுமனே காலத்தைக் கடத்தி வீணாக்கும் ஒரு செயலாகவே தமிழ் மக்கள் இதனை நோக்குகின்றனர். இந்தப் பேச்சுவார்த்தையிலும் தமிழர்கள் ஏமாற்றப் படுவார்களென்ற நம்பிக்கையும் நிலவுகின்றது.

இந்த நிலையில் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் தமிழர் தரப்பினர் விவேகத்துடன் செயற்படும் தருணமிது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே இவர்களின் செயற்பாடுகள் தொடர்பாகச் சில தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனர். இதை மெய்ப்பிப்பது போன்று இவர்கள் நடந்து கொண்டால் வரலாறு ஒரு போதுமே இவர்களை மன்னிக்காது.

எனவே அரசு விரித்து வைத்திருக்கும் வலையில் சிக்காது காய்களை வெகுசாமர்த்தியமாக நகர்த்த வேண்டிய பொறுப்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது.

## தெய்வசிகாமணி



குன்று தோறும் வாழும் குமாரக் கடவுள் மேலான தெய்வம் என்பதை விளக்கும் திருப்பெயர் "தெய்வசிகாமணி" என்ப தாகும்.

தெய்வங்கள் சிகையிலே, அதாவது தலைமீது அலங்காரமாக இருக்கும் மேலான மணியாக முருகப்பெருமான் விளங்குகிறான் என்பதையே, தெய்வசிகாமணி என்ற திரு நாமம் விளக்கி நிற்கிறது.

ஒவ்வொரு மலையிலும் முருகன் நிற்கிறான் என்றால் அவனது காலுக்குக் கீழே உள்ள கல்லை எடுத்து மற்ற தெய்வங்கள் சிலை செய்கிறோம். அப்படிப் பார்த்தாலும் தெய்வங்கள் சிகையில் (தலையில்) மணி போல் விளங்கும் தெய்வசிகாமணியாக முருகன் விளங்குகிறான்.

குருவே சகல தெய்வங்களுக்கும் மேலான மணி ஆகிறார். குருவுக்கு மேலான தெய்வமே இல்லை. முருகன் சிவனுக்கே குருவாக விளங்குவதால் அவர் தெய்வசிகாமணி ஆகிறார். இன்னொரு விஷயம். கௌமார சமயம் என்றால் முருகன் சமயம் என்பது பொதுப் பொருள்- ஆனால் இறைவன் குருவடிவத்தில் வருகிறார் என்பதால், குருவையே இறைவனாகக் கருதும் சமயம் கௌமார சமயம். எனவே குருவே தெய்வசிகாமணி.

இந்தக் குரு மகிமையை விளக்கும் நிகழ்ச்சி கந்த புராணததில் வருகிறது. படைத்தல் தொழில் செய்பவர் பிரம்மா. கலைமகள் அவர் வசம். எனவே படைக்க அவருக்கு முழுத்தகுதி உண்டு. ஆலையில் தொழிலாளி செய்யும் படைப்புக்கும் கலைஞனின் படைப்புக்கும் வித்தியாசம் இருக்கிறது. மோட்டார் பம்ப் வேலையில் தொழிலாளி படைக்கும் மோட்டார் பாகங்கள் ஒரே மாதிரி இருக்கும். ஆனால் அவர் பிள்ளைகள் ஒவ்வொன்று ஒவ்வொரு அழகில் திறமையில் வெவ்வேறு மாதிரி இருக்கும். கிரில், லைட், கண்ணாடி உதிரிப்பாகங்களால் உருவாக்கப்படும் எல்லா அம்பாசிடர் காரும் ஒரே மாதிரி இருக்கும். கண், மூக்கு, காது போன்ற உதிரிப் பாகங்களால் உருவாகும் எல்லா மனிதர்களும் ஒரே மாதிரி இருப்பதில்லை. பிரமனின் படைப்புக் கலை உணர்வுடன் கூடிய படைப்பு. அதனால் தான் அவனைக் கலைமகள் கணவன் என்கின்றோம். அந்தக் கலைஞனுக்கு அகங்காரம் கூடவே கூடாது. அகங் காரம் வந்தால் அது குருவால் தான் போகும். இதை விளக்கு வதே பிரணவ உபதேச நாடகம்.

சிவபெருமானை வணங்கப் போனார். வணங்கப் போகும் சமயம் வாசலில் இருந்த சின்னப்பிள்ளை முருகனைக் கண்டும் காணாமல் போனார். "நாம் பார்த்துப் பிறந்த சின்னப்பிள்ளை தானே" என்ற அலட்சியமோ... அல்லது "பெரியவர் சிவபெருமானே நமக்கு வேண்டியவர்... அப்படி இருக்க இந்தச் சின்னவரை எப்படி வ்ணங்குவது" என்ற எண்ணமோ தெரியவில்லை. முருகனைக் கும்பிடாமல் உள்ளே போனார். முருகனுடைய தம்பி வீரபாகுத்தேவருக்கு மிக வருத்தம். முருகனிடம் முறையிட்டார். "வரும்போது பார்ப்போம்" என்றார் முருகப் பெருமான். இந்த வார்த்தை மிக முக்கியம்.

வரும் பொழுதும் பிரம்மாவின் போக்கில் மாறுதல் இல்லை. வீரபாகு மூலம் வரவழைக்கப்பட்டார். விசாரணை தொடங்கியது. 'தங்கள் தொழில் யாது?' என்ற பொருளில் "ஏதுநீ புரிந்திடும் இயற்கை" என்றார் முருகன். பிரமன் பதிலில் ஒரு அலட்சியம்... குரலில் அகங்காரம்... "தலைவன் ஆணையால் நான் எல்லாவற்றையும் படைப்பவன்" என்றான்.

'நான்' படைப்புத் தொழில் செய்பவன் என்று பேசினாலும் அந்த நான் என்ற சொல்லில் ஆணவநெடி வீசியது. முருகன் சிரித்துக் கொண்டார்.

அந்த வேதத்தை பிரமனிடம் கேட்க விரும்புவதாக விண்ணப்பித்தார். கொஞ்சம் வித்தை தெரிந்தவர்களுக்கு அதுவும் வெளிக்காட்ட வாய்ப்பே இல்லாதவருக்கு கொஞ்ச வாய்ப்புக் கிடைத்து விட்டால் பிறகு என்ன? வேதத்தைச் சொல்லிக் கொடுக்க உரக்கக் குரல் எடுத்தார் பிரம்ம வாத்தியார். "ஓம்" என்று பிரணவத்தைச் சொன்னதும் முருகன் குறுக்கிட்டார். 'இது என்ன?' என்று கேட்டார். அடுத்த விஷயத்தில் பாய்வதில் குறியாக இருந்த பிரம்மா கேள்வியைத் தவிர்த்தார், முருகன் விடவில்லை. பிரம்மாவின் எட்டுக் கண்களும் திகைப்பை வெளியிட விழித்தபடி நின்றார். கச்சியப்பர் திறமை அபாரமானது. பொருள் என்ன என்று கேட்டவன் முருகன் என்று எழுதாமல், ஓம்காரத்தின் பொருள் என்ன என்று ஓம்காரத்தின் பொருளே கேட்டது என்றார். முருகப் பெருமான் முகமே ஓம்காரத்தின் விளக்கமாம். இதனை "முகத்தில் ஒன்றதாய் அவ்வெழுத்து உடையதோர் முருகன்" என்ற வரியால் கந்தபுராண ஆசிரியர் வெளியிட்டார்.

முருகனே அதன் பொருள் என்று ஒப்புக்கொள்ள முடியாதபடி பிரம்மாவின் அகங்காரம் மறைந்து விட்டது. ஆணவம் கண்களை மறைத்ததால் பிரமனால் விளக்க முடியவில்லை.

பிரமன் சிறைப்பட்டார். முருகன் தன்னைக் கும்பிடாததால் பிரமனைச் சிறையிட்டார் என்று பலர் பேசுகிறார்கள். நினைக்கிறார்கள். அதுபிழை! தன்னை வணங்காதவரை முருகன் தண்டிக்க என்ன அரசியல் வாதியா? இந் தக் கதை ஆழமானது.

நம்மைச் சிறையிலிடுவது படைப்பு. உடம்புச் சிறையில் உயிர் பறவையைச் சிறைவைப்பதே பிறப்பு. நமது ஆணவமே நம்மைப் பிறவி என்னும் சிறையில் தள்ளுகிறது என்பதே உண்மைப் பொருள். இந்தச் சிறைவைக்கும் படைப்பை சிறைவைத்த குருநாதன் முருகன். உயிரின் பிறவித் துயர் தீர்ப்பவன் குருநாதன் என்பதே நுண் பொருள். விதி விறையும் வினைவாழ்வை குருநாதன் தீண்டும் தீட்சையால் மாற்ற முடியும் என்பதே இதன் சாராம்சம்.

பிரமனைச் சிறையிலிட்டுப் படைப்புத் தொழிலை முருகனே செய்தார். சிவபெருமானிடம் செய்தி போனது. நந்திதேவர் நடந்தும் பயன் இல்லை. சிவ பெருமானே நேரில்வந்து மீட்புமனு கேட்க வேண்டியதாயிற்று. இப்போது முருகன் சொல்லும் விளக்கங்கள் அபூர்வமானவை.

"தந்தையே தங்களைத் தொழுவதற்கு முன் அகந்தையோடு இருந்தால் குற்றமில்லை. வழிபட்ட பின்னும் அகந்தை மாறவில்லை என்றால் பிரமன் வழிபாட்டைக் கொச்சைப்படுத்திவிடவில்லையா? அருமையான கேள்வி. குளிக்கப்போகும் முன் ஒருவர் அழுக்காக இருக்கலாம். குளித்து விட்டு வந்த பின்னும் அழுக்காகவே வந்தால், நதியை அவர் அவமானப் படுத்துகிறார். குற்றவாளிதானே!... இறைவனைத் தொழும் முன் அறியாமையால் அகந்தை இருக்கலாம், தொழுத பின்னரும் அகந்தை இருந்தால்... பிழையல்லவா? தொழுகை என்பதே ஆணவ நீக்கம் தானே! அது நிகழவில்லை என்றால் அவர் தண்டிக்கப்பட வேண்டியர். இது ஒரு நற்செய்தி.

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உயர் மட்டக் கல்விச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் முன்பாக எடுத்துக் கொண்ட படம். (ம–121)

# உயர் நோக்கோடு எடுக்கப்படும் முயற்சிகள் நல்ல பயனைத் தரும் என்பதில் ஐயமில்லை

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**

அச்சுவேலி, செப்.27

''நல்ல சிந்தனை உயர் நோக்கோடு எடுக்கப்படும் கருமங்கள் நல்ல பலனைத் தரும். சமூகத்தால் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்டும்.

இவ்வாறு கூறினார் பேராசியர் எஸ். சிவலிங்கராஜா.

ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் 8 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வி.ரி அறக்கொடை நிறுவனத்தின் அறக்கொடை வழங்கல் நிகழ்வும் வே.கந்தசாமி தலைமையில் மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேராசிரியர் தொடர்ந்தும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

பிள்ளைகளைப் பெற்றோர் வளர்க்கும் போது மற்றவர்களுக்கு பயன் கொடுக்க வேண்டும், ஊருக்கு உதவ வேண்டும் என்ற உயர் நோக்கோடு வளர்க்க வேண்டும்.

அத்துடன் அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்ளச் செய்ய வேண்டும். இந்த வகையில் வளரும் பிள்ளைகள் எதிர்காலத்தில் தாமும் உயர் நிலையில் வளர்வதுடன் சமூகத்துக்கும் உதவ முன்வருவார்கள்.

இந்த வகையில் வாழ்ந்தவர் தான் சிவசுந்தரம். அவரின் உயர் சித்தனையின் வெளிப்பாடு தான் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபம் மற்றும் வி.ரி. அறக்கொடை என்பன.

தனது பெற்றோர்கள் நினைவாக மணிமண்டபத்தை நிறுவி அதனால் வரும் முழு வருமானத்தையும் வி.ரி. அறக் கொடைக் கூடாக சமூகத்துக்கு, கல்விக்கு தமிழ் பண்பாட்டுக்கு செலவு செய்ய வகை செய்திருப்பது உயர்வான சிந்தனையாகும்.

ஒவ்வொருவரும் உழைக்கும் போது தன்னால் இயன்ற அளவு தனது சமூகத்துக்கு உதவுவதற்கு முன்வர வேண்டும். உழைக்கும் போது உதவ வேண்டும். அவ்வாறு உதவுவதன் மூலம் தன்னையும் தனது சமூகத்தையும் பெருமைப் படுத்திக் கொள்ளலாம். - எனக் கூறினார். (ம-11)

# மஹிந்த அரசு இருக்கும் வரை தமிழருக்கு விடிவு இல்லை

**இரா.சந்திரசேகரன்**

அடிப்படைப் பிரச்சினைகளுக்குக்கூட தீர்வைக் காண முடியாமல் தத்தளிக்கும் மஹிந்த அரசு, 60 வருடகாலமாக நில வும் இனப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வைக்காணப்போகின்றது?

குடும்ப ஆட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு இருக்கும் வரையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது என்பதையே அவர்களின் நடவடிக்கைகள் உணர்த்துகின்றன.

ஏனென்றால், தமிழ் மொழியில் தேசியகீதம் இசைக்கக் கூடாது எனக் கூறியவர்களே இந்த மஹிந்த அரசில் உள்ளனர். இவர்கள் எப்படி சுயநிர்ணய உரிமையை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிப்பர்? இதன் காரணமாகவே இந்த விடயத்தில் அரசுக்குள் இன்று முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

மஹிந்த அரசின் ஆட்சியை மக்கள் கவிழ்த்தால் மாத்திரமே தமது உரிமைகளை மக்கள் வென்றெடுக்க முடியும். இல்லையேல் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்காது. - என்றார் ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்படும் விடயத்தில் அரசுக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. கடும்போக்குடைய அமைச்சர்கள் சிலரே 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு வழங்குவதை எதிர்ப்பதாகத் தகவல். அரச தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் இனப்பிரச்சினைக்கு வழங்கப்படும் அரசியல் தீர்வு விவகாரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களில் சிலர் கூறிய கருத்துக்கள்

# ஜனாதிபதி செய்வதறியாது தவிப்பு

**ஜயலத் எம்.பி**

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்தார். அவர் அதைச் செய்தேயாகவேண்டும் என்ற நிலை தான் இன்றுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற முறையில் இலகுவில் அவர் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். ஆனால், கடும் போக்குடைய அமைச்சர்கள் சிலரின் அழுத்தங்களால் அவர் செய்வதறியாது தவிக்கின்றார். தலையாட்டி பொம்மையாக செயற்படுகின்றார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கும் விடயத்தில் அரசு காலத்தை இழுத்தடிப் பதற்கு அரசுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளும் பிரதான காரணமாகும். - என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன எம்.பி.

# ஜனாதிபதியின் கையிலேயே உள்ளது

**செல்வராசா எம்.பி**

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கும் விடயம் ஜனாதிபதியின் கையில் உள்ளது. ஜனாதிபதி சொல்வதை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களே அமைச்சர்களாகவும் உள்ளனர்.

13 ஆவது அரசமைப்புக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என நினைப்பவர்களும் அரச தரப்பில் உள்ளனர். அதே வேளை, தமிழர்களுக்கு எதையுமே வழங்கக்கூடாது என நினைப்பவர்களும் உள்ளனர்.

எது எப்படியிருப்பினும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் விடயம் ஜனாதிபதியின் கையிலேயே உள்ளது. ஏனென்றால், ஜனாதிபதி சொல்வதைக் கேட்டு அதற்கேற்ப கட்டுப்படக் கூடியவர்களே அமைச்சர்களாக உள்ளனர். எனவே, அரச தரப்பு முரண்பாடு அரசியல் தீர்வு வழங்கும் விடயத்தைப் பாதிக்காது என்றே கருதுகிறேன். - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உப தலைவர் பொன் செல்வராசா எம்.பி. தெரிவித் தார்.

# தமிழ்த் தலைமைக்குள்ளேதான் முரண்பாடு

**பியசேன எம்.பி**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்வுப்பொதி ஒன்றை வழங்குவதற்குத் தயாராகி விட்டார். ஆனால், தமிழ்த் தலைமைகள் அதனை ஏற்க மறுக்கின்றன.

ஏனெனில், தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைத்து விட்டால், எப்படி அரசியல் பிழைப்பு நடத்துவது என்ற அச்சமே இதற்குப் பிரதான காரணமாகும்.

தமிழ் தலைமைகளுக்கிடையே இன்று பிரச்சினைகள் முற்றிப்போயுள்ளன. அவர்களிடையேதான் முரண்பாடுகளும் அதிகரித்துள்ளன.

தமிழ் மக்களின் மீது அதிக பாசம் கொண்டவன் என்ற அடிப்படையில் தமிழ்த் தலைமைகளுக்கு நான் ஒரு கோரிக்கை விடுக்கின்றேன். அது யாதெனில், தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன் வைத்து அரசியல் பிழைப்பு நடத்தாமல் அவர்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முனையுங்கள் என்பது தான் என்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேன தெரிவித்துள்ளார்.

# '13+'ஐ எதிர்ப்பது சட்டத்தை மீறும் செயல்

**சிறிதுங்க ஜயசூரிய**

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் என்பது நாட்டிலுள்ள ஓர் சட்டம். எனவே, அதனை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதானது சட்டத்தை மீறும் செயலாகும்.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரி விக்கும் அமைச்சர்கள் கைது செய்யப் படவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு உடனடியாக வழங்கப்படவேண்டும் என்பதையே இன்றைய காலகட்டம் எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரசுக்குள் கருத்து முரண்பாடு இருந்தால் அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒருமித்த மனதில் தமிழ் மக்களுக்கு நிலையானதொரு அரசியல் தீர்வை அரசு வழங்க [illegible] நிலைப்பாடாகும். தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வானது 13 ஆவது அரசமைப்பில் போதியளவு இல்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.- என்று ஐக்கிய சோஷலிஸ கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய கூறுகிறார்.

# ஊர்காவற்றுறை கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

**கட்டுரைப் போட்டி**

**கனிஷ்ட பிரிவு:** செ.மதுரா -புனித மரியாள் றோ. க.ம.வி. ஊர்காவற்றுறை, வி.மிரோஜா -கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தி, வா.கிருஷாந்தினி- கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தி.

**சிரேஷ்ட பிரிவு:** யோ.துயித்திரா-கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தி,

**கவிதைப் போட்டி**

**கனிஷ்ட பிரிவு:** வ.மதுஷா- புனித மரியாள் றோ.க.ம.வி ஊர்காவற்றுறை, ச.கிருஸ்ண நிலோஜன்-புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்கா வற்றுறை, தே.இன்பென்ரா எலஸ்ற்-புனித மரியாள் றோ.க.ம.வி ஊர்காவற்றுறை.

**சிரேஷ்ட பிரிவு:** றெ.ஆன்டினோஜா-கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி, சு.நொயிலின்-புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை, யூ.மேரி றொயன்டா-கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தி.

**கனிஷ்டபிரிவு:** அ.டன்ஸ்ரன்- புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை, ஜெ.பிரதீகா-புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை.

**கவிதைபாடும் போட்டி**

**சிரேஷ்ட பிரிவு:** சு.நெயிலின்-புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை.

**சிறுவர் கதை ஆக்கம்**

**கனிஷ்ட பிரிவு:** அ.டன்ஸ்ரன்-புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை, அ.மெல்வினஸ் - புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை, வி.துளசிகரன்-புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை.

**கையெழுத்துப் போட்டி**

**கனிஷ்ட பிரிவு:** அ.அல்பிரட் நிமல்ஷன்-புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை, ச.நிவேதன்- புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை.

**பாடலாக்கம்**

**திறந்த பிரிவு:** கீ.கியோமார்-3ஆம் வட்டாரம் எழுவை தீவு.

**சிறுகதை**

**திறந்த பிரிவு:** நா.தயாளன் -காளி கோயிலடி, கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறை, ம.ஆனல்ட் சரண்ஷன்-கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறை.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் சில

**தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை ம.வி-** சா.தாருகா -162, கு.ரிஷிரேகா-161, ப.பவதனுஜன் -159, ப.மாதுஜா-158, ர.நக்சாளினி -154, ஸ்ரீ.லக்ஷாஜினி-152.

**தும்பளை சிவப்பிரகாச மகாவித்தி-** ர.சுகந்தன்-175, கோ.கிருஷாந்-180, ச.ஆரணியன்-173, யோ.புகழினி-171, ப.நதுஷிகா-168, சி.கஜிந்தன் -164, பீ.ஜோதினி-162, ரா.துலக்ஸ்சிகா-162, வே.கஜனிதன்-154, வி.சியாம்-152.

**சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை சுன்னாகம்-** பூ.நிலக்ஷன்-178, யோ.மதுஜனா-164, த.கம்ஷானி-153, சி.குபேந்தினி -151.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் விண்கல்!

விண்ணியலானது மிகவும் தொன்மை வாய்ந்த விஞ்ஞானத்துறைகளில் ஒன்றாகும். அண்மையில் மெக்ஸிக்கோவிலுள்ள விண்வெளி ஆரார்ய்ச்சி மையம் விண்கல் ஒன்று பூமியை நோக்கி வேகமாக வந்து கொண்டிருப்பதாக அறிவித்தது. இந்தச் செய்தியை உலகெங்கிலுமுள்ள வானிலை ஆய்வாளர்கள் உதாசீனம் செய்துவிட முடியாது.

எனவே விண்கல் என்றால் என்ன? அதன் தார்ப்பரியங்கள் எவை? என்பன தொடர்பான விளக்கங்களை மக்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் வழங்க வேண்டும்.

நாம் இரவு வேளையில் ஆகாயத்தை உற்று நோக்கும் போது சிலவேளைகளில் விண்மீன்களைப் போன்ற பொருள்கள் ஒரு திசையிலிருந்து இன்னொரு பக்கத்துக்கோ அல்லது வானிலிருந்து பூமியை நோக்கியோ ஓடி மறைவதைத் தற்செயலாகக் காணலாம்.

இதுவே விண்கல்லாகும். இது அநேகமாக சிறு பருபனாக இருக்கும். கோள்கள் சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருவதைப் போன்று விண்கல்லும் கதிரவனைச் சுற்றி வருகின்றது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

இதன் வேகம் செக்கனுக்கு நாற்பத்து இரண்டு கிலோமீற்றர் ஆகும். இவற்றுள் சில புவியின் பயண மண்டலத்தினுள் வந்துவிடுகின்றன. பவன மண்டலத்தினுள் இவை அதிவேகமாகப் பிரவேசிக்கும் போது காற்றுடன் தன்னிச்சையாகவே உராய்வு ஏற்படுகின்றது. உராய்வின் நிமித்தம் இது சூடாகி நெருப்புப் பிடித்துவிடுகின்றது. அப்போதுதான் பூமியில் உள்ள நமக்கு இவ்வாறு காட்சியளிக்கின்றது. இவற்றுள் சில பவனமண்டபத்திலேயே பூரணமாக எரிந்து சாம்பலாகி விடுகின்றன.

இதனால் பூமியில் வந்துவிழும் வாய்ப்பு அற்றுப் போய்விடுகின்றது. இதனால் பூமியில் வாழும் நாம் பயம் கொள்ளத் தேவையில்லை. ஆனால்



பிரமாண்டமான விண்கற்கள் முற்றாக எரிவதில்லை. இவை அதிக ஒளியுடனும் பேரிரைச்சலோடும் பூமியில் வந்து விழுகின்றன.

இப்படி விண் கல்லானது புவியில் வந்து விழுவது மிகவும் அபூர்வமானது தான். நாம் கிலி கொள்ளத் தேவையில்லை. பூமியில் வந்து விழுந்தாலும் மக்கள் அதிக அளவு சஞ்சாரம் இல்லாத பாலைவனங்கள் , காடுகள், சமுத்திரங்கள் என்பவற்றிலேயே முன்னர் விழுந்திருக்கின்றன என்று வரலாற்றின் மூலம் அறியலாம்.

புவியில் விழும் பட்சத்தில் நிலத்தில் பெரிய குழியொன்று தோன்றலாம். வனங்களில் வீழ்ந்தாலும் இதேநிலைமை தான். ஆனால் காட்டு மரங்கள் முற்றாக அழிவுற்று விடுகின்றன. இந்த நிகழ்வு சமுத்திரத்தில் உண்டானால் சுனாமி போன்ற அழிவுகள் ஏற்படலாம் என்று ஆய்வாளர் கூறுகின்றனர்.

அமெரிக்காவில் அரிசோனா பாலைவனத்திலும் சைபீரியக் காட்டிலும் விண்கற்கள் வீழ்ந்த சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பாலைவனத்தில் வீழ்ந்த விண்கல் ஏற்படுத்திய குழியின் விட்டம் ஆயிரத்து இருநூற்று அறுபது மீற்றராகவும் ஆழம் நூற்று எழுபது மீற்றராகவும் காணப்பட்டதாம். இந்தக் கல் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தான் அங்கு வீழ்ந்திருக்க வேண்டுமென்று விஞ்ஞானிகளின் கணிப்பீட்டிலிருந்து அறியலாம்.

அதேவேளை சைபீரியக் காட்டில் நிகழ்ந்த இந்தச் சம்பவமானது 1908 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முப்பதாம் திகதி உண்டானதாம். இதனைத் தரவுகள் பறைசாற்றுகின்றன.

இந்தக் கல்லானது பூமியை நெருங்கிய போது வெடித்துச் சிதறியிருக்க வேண்டுமென்றும் ஊகிக்கின்றனர்.

**அருணா தருமலிங்கம்,**
ஓய்வு பெற்ற தொழில்நுட்பவியலாளர்,
தேசிய கடதாசி கம்பனி, எம்பிலிப்பிட்டிய.

ஏனெனில் பெரிய குழி ஒன்றும் அதனைச் சுற்றி பல சிறிய குழிகளும் தென்படுகின்றனவாம்.

விண்கற்களுக்கும் வால் வெள்ளிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக விண்ணியலாளர் கருதுகின்றனர். வால்வெள்ளிகளின் தூள்களே இப்படி விண்கற்களாக பரிணமிக்கின்றன என்பது அவர்களது கூற்றாகும். ஆனால் எல்லா விண்கற்களும் உடைந்த வால்வெள்ளியிலிருந்து தோன்றின என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பது ஒருசாராரின் வாதமாகும்.

எது எப்படியோ தற்போது பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் விண்கல்லை மக்கள் குடியிருப்பு பகுதியில் விழாமல் செய்வது விஞ்ஞானிகளின் கட்டாயமாகும்.

சுமார் மூன்று தசாப்த காலங்களுக்கு முன்னர் 'நாஸாவால்' ஏவப்பட்ட 'ஸ்கைலைப்', அண்டவெளியில் தனது பணியை மேற்கொண்டிருந்த போது தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயலிழந்தது. அதன் இயக்கங்கள் சடுதியாகத் தடைப்பட்டதும் அது விண்கல்லைப்போன்று பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தது.

உலகுக்கு பேராபத்தொன்று நிகழப் போகின்றது என்பதை உணர்ந்து கொண்ட நவீன விஞ்ஞானத் துறையினர் துரிதமாகச் செயற்பட்டு அதனை ஆஸ்திரேலியாவில் உள்ள பாலைவனத்தில் விழச்செய்தனர்.

ஆகவே தற்பொழுது புவியை நோக்கி வந்து கொண்டிருக்கும் விண்கல்லையும் அதன் திசையை பாலைவனப் பகுதிக்கு மாற்றி உலக விஞ்ஞானிகள் சாதனை படைப்பார்கள் என நம்பலாம். உலகை அச்சுறுத்தும் விண்கல்லின் ஆபத்தைத் தடுக்கும் வல்லமை நவீன விஞ்ஞானிகளிடமே உள்ளது வெள்ளிடைமலை. *



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம
அன்னை காளியம்பாள் திருத்தாள் போற்றி
**யாழ்-திருவண்ணை-கன்னாதிட்டி**
**அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்**
## கேதார கௌரி விரதம்

விரதாரம்பம்: *06.10.2011 (வியாழக்கிழமை)*
விரத பூர்த்தி:*26.10.2011 (புதன்கிழமை)*

அம்பிகை அடியார்களே!

நிகழும் கரவருஷம் புரட்டாதித் திங்கள் 19 ஆம் நாள் (06.10.2011) வியாழக்கிழமை விஜயதசமியன்று கேதார கௌரி விரதம் ஆரம்பமாக விருப்பதால், விரதம் அனுஷ்டிக்கும் அடியார்கள் தங்கள் பெயர், நட்சத்திரங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சிவலிங்க பூஜை, ஆரம்பதினமாகிய 06.10.2011 வியாழக்கிழமை தொடக்கம், 11.10.2011 செவ்வாய்க்கிழமை (பூரணை) வரை மு.ப. 10 மணிக்கும் தொடர்ந்து வரும் தினங்களில் பி.ப. 3.30 மணிக்கும் நடைபெறும்.

அடியார்கள் வில்வம் சமர்ப்பிக்கலாம்.

*தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/ இராமநாதபுரம்
மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும்
**செல்வன் விஜயகுமார் மதுசனன்**

2011 தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று சித்தியெய்தியமையையிட்டு மதுசனனை மனதார வாழ்த்துவதுடன் இவருக்கு கல்வியறிவூட்டிய வகுப்பாசிரியர் மற்றும் அதிபர் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:அம்மா,அப்பா,சகோதரர்,
தாத்தா,பாட்டி, மாமா, அப்பப்பா,
அப்பம்மா,சித்தப்பா,பெரியப்பா

*யாழ்.நகரில் மீண்டும் புதுப்பொலிவுடன்...*



# குமார் ரெக்ஸ்

மொத்த புடைவை வியாபார நிலையம்

Kumar Tex



எதிர்வரும் 29.09.2011 வியாழக்கிழமை காலை 7.23 மணி தொடக்கம் 9.33 வரை உள்ள சுப நேரத்தில் மீண்டும் புதுப்பொலிவுடன் குமார் ரெக்ஸ் என்னும் மொத்த வியாபார ஸ்தாபனம் எம்மால் திறந்து வைக்கப்படுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மிக மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இல.127/14, யுபிலி பஜார்,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: ப.பத்மகுமாரன்
யோகாஸ் ரெக்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகராட்சி மன்றம் சாவகச்சேரி
## கேள்வி அறிவித்தல் திருத்தம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் 18.09.2011 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்படுகின்றன.

1. கேள்விகள் ஏற்றல்-03.10.2011(திங்கள்) மு.ப 10.00 மணிவரை
2. கேள்விகள் திறத்தல்-03.10.2011(திங்கள்) மு.ப 11.00 மணி
3. கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய இறுதித் திகதி-30.09.2011(வெள்ளி) நண்பகல் 12.00 மணி

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை
தலைவர்
நகராட்சி மன்றம்,சாவகச்சேரி.

# பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தியில் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் சம பங்கு உண்டு

## வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்

காரைநகர்,செப்.27

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் கணிசமான பங்கு உண்டு.இவர்களே பிள்ளைகளின் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக உருவாவதற்கு அத்திபாரம் இடுகின்றனர். இவர்களது நல்வழி காட்டுதல்களே எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக உருவாவதற்கு காரணமாக அமைகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாணக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன்

லண்டன் காரை நலன்புரி சங்கம், கனடா காரை கலாசார மன்றம் ஆகியவற்றின் அனுசரணையுடன் காரைநகர் அபிவிருத்திச் சபை நடத்திய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இந்த ஆண்டு சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே வட மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

பிள்ளைகளின் கல்வி மீது பெற்றோர் காட்டுகின்ற அக்கறையே பிள்ளைகளின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக அமைகின்றது. பிள்ளைகளின் பலவீனங்களை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும். அதன் ஊடாக அவர்களின் பெறுபேறுகளை உயர்த்த முடியும்.



காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார்.

பத்து வயதில் ஏற்படும் போட்டி உண்மையான போட்டி என்று எடுத்துக்கொள்ளமுடியாது. ஏனையவர்களும் முயன்றால் அடுத்து வரும் வகுப்புகளில் கற்று உயர் பெறுபேறுகளை அடைய முடியும். சிறந்த பாராட்டு நிகழ்வு நடத்தப்படுவது மற்றவர்களைப் புண்படுத்துவதற்காக அல்ல. அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு அவர்களும் சாதிக்க வேண்டும் என்பதற்காக புலமைப்பரிசில் பரீட்சையை சவாலாக எடுத்து மாணவர்கள் கற்கவேண்டிய தேவை உள்ளது. இந்தப் பரீட்சை திணிக்கப்பட்ட பரீட்சையாக இருந்தபோதிலும் இந்தப் பரீட்சையை மாணவர்கள் நல்ல முறையில் அணுகி வருகின்றனர்.

கல்விப் பெறுபேறுகளை உயர்த்துவதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்ய கல்வித்திணைக்களம் தயாராக உள்ளது - என்றார். இந்த நிகழ்வில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன், நல்லூர் உதவிப் பிரதேச செயலர் அ.சோதிநாதன், இலங்கை வங்கி யாழ் மாவட்ட முகாமையாளர் ப.மாணிக்கசிங்கி உள்ளிட்ட பலர் உரை நிகழ்த்தினர்.

காரைநகர் பாடசாலைகளில் பயின்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 16 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் கற்பித்தலில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கும் பரிசுப் பொருள்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ம-250)

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்
25 . 09 . 1963



ஆண்டவன் மடியில்
30 . 10 . 2005

## கிட்ணன் பரமேஸ்வரன்

(ஆசிரியர் - O.L.R)

சொல்லாமல் சென்ற இடம் தான் எங்கே
எல்லையில்லா அன்பைத் தந்து - விட்டு
எல்லை கடந்து சென்ற தெங்கே
உங்கள் பிரிவு என்னை வாட்டுகிறது
ஆறவில்லை எனக்கு உங்கள் பிரிவுத்துயருடன்
எட்டி நடக்கின்றேன் உன்பாதையில்
மிக விரைவில் சந்திப்பேன்

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய்.

பிரிவால் நித்தம் வாடும்:
மனைவி.

## சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
## பணிநிலை வெற்றிடம்

எமது சங்கத்தில் பணியாற்றுவதற்கு ஆண் பணியாளர்கள் தேவை. கூட்டுறவு கல்லூரியில் சாதாரணதரம் சித்தியடைந்தவர்கள் அல்லது க.பொ.த.உயர்தரத்தில் கணக்கியல் பாடத்தில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். அத்துடன் சங்க அலுவலகத்துக்கு அருகில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகைமையுடையோர் 'தலைவர், கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி'' என்னும் முகவரிக்கு எதிர்வரும் 01.10.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும்.

இராமலிங்கம் வீதி,
சாவகச்சேரி.

தலைவர்.

## 4 ஆம் ஆண்டு நினைவுகளின் நாயகன்

புண்ணியமூர்த்தி
பிரதீபன் [சுதன்]

மலர்வு
14.07.1981



உதிர்வு
27.09.2007

திதி: 12.10.2011

காலம் விரைந்து சென்று கவலைகள் மாற்றிவிடும்
என்றார்கள் முன்னோர்கள் - நாம் எப்படி மறப்போம் உனை
புதையலாய் கிடைத்த நம் வாழ்வில் - நீ
எப்போது வெகுமதியாய் கிடைப்பாய்...
நாலாண்டு என்ன? நானூறு ஆண்டு கடந்தாலும்
நீ விட்ட வெற்றிடமோ நிரப்பமுடியாதடா
எங்கள் நினைவுகளின் நாயகனே!

141, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

என்றும் உன் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்,
நினைவுகள் ஸ்ரூடியோ.

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் திருமதி சண்முகநாதன் தேவகி

(ஆனைக்கோட்டை)

மலர்வு 28.04.1957 — உதிர்வு 30.08.2011

திதி
29.09.2011

கரவருடம் கடந்த 30.08.2011 செவ்வாய்கிழமை அன்று காலமான எங்கள் அம்மாவின் மரணச் செய்தி கேட்டு அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமாகவும், கண்ணீர் அஞ்சல் மூலமும், வேறு பல வழிகளிலும் உதவியும், இறுதிக் கிரியையிலும் பங்கு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் எங்கள் மன நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எதிர்வரும் 27.09.2011 அன்று காலை 6.00 மணியளவில் கீரிமலைக்கடலில் அன்னாரது அந்தியேட்டி நடைபெற்று 29.09.2011 அன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பூசையிலும் மதியம் 12.00 மணிக்கு நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்கின்றோம்.

ஆனைக்கோட்டை

இங்ஙனம்
[illegible] (U.S.A)
[illegible] 112 361413
[illegible] 071 8246674
C. விஜயலக்சுமி (கனிஸ்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
28 ★ 03 ★ 1928



உதிர்வு
28 ★ 08 ★ 2011

## அமரர் ஆறுமுகம் மாணிக்கம்

கடந்த 28.08.2011 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.09.2011) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

5 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(8632)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்ப, துயரங்கள் நீக்கிடும் துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர்

ஈழத் திருநாட்டின் வடபாலிலே அமைந்திருக்கும் யாழ்ப்பாணத்தில் சகல வளங்களும் நிரம்பிய வடமராட்சிப் பிரதேசத்திலே அமைந்திருக்கின்ற முருகன் ஆலயங்களிலே துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம் முக்கியமான தொன்றாகும்.

இந்தப் பகுதி மக்கள் இந்த ஆலயம் அமைந்திருக்கும் இடத்திலே முன்னர் வீரபத்திரர் ஆலயத்தை எழுந்தருளச் செய்து மக்கள் தம் இறைபணியை மேற் கொண்டனர். பல அன்பர்களின் பேரு தருவியாலும் - பண உதவியாலும் சிறந்து விளங்கிய இந்தக் கோயிலின் முதற்பூசகராக மாணிக்கம் ஐயர் செயற்பட்டிருக்கின்றார்.

வீரபத்திரர் வழிபாடு தொடர்கையிலே வீரபத்திரர் ஆலயத்துக்கு உதவிகள் புரிந்த அன்பர்களில் ஒருவராகிய வயிரவப் புலவனுக்கு முருகப்பெருமான் சொப்பனத்தில் தோன்றி மயில் மீதமர்ந்து காட்சிகொடுத்து "தான் இங்கு அமர்வதாகவும் என்னை நீ ஆதரிக்க வேண்டும்" எனவும் கூறி மறைந்தார். காட்டுத் தீபோல இந்தத் தகவல் ஊர் மக்களிடத்தே விரைவாகப் பரவியது. இதனையடுத்து ஊர் மக்களின் அயரா முயற்சியினாலும் தளராத உழைப்பாலும் இறையருளோடு முருகப் பெருமானுக்கு பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்களால் 1927 ஆம் ஆண்டு முதற் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

இந்த ஆலயம் தொடர்பான பல அரிய தகவல்களை 'இலங்கைத் திருநாட்டில் 'இந்துக்கோயில்கள்' என்ற நூலில் காணலாம். அந்த நூலிலே இது பற்றிய பல விடயங்கள் காணப்படுகின்றன. "நாகர் பரம்பரையினர் இந்த ஆலயத்துக்குக் காணிகளை, தர்ம சாதனம் செய்திருக்கும் தோம்புகள் உண்டு. பல நூற்றாண்டுகளுக்கு முன் மகிழமர நிழலில் தோன்றிய இந்த ஆலயம் ஆரம்பத்தில் பெரிய தம் பிரான் கோயில் என வழிபடப்பட்டு வந்தது.

இங்கு கந்தபுராண விரிவுரைகள் இடம்பெறுகின்றன. 1919 ஆம் ஆண்டு கல் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகின. 1949 ஆம் ஆண்டில் மூன்றாவது மகாகும்பாபிஷேகத் தோடு மூன்று கால பூசைகள் ஆரம்பமாகின. சூரசம்ஹாரம், தைப்பூசம், திருவெம்பாவை ஆகிய உற்சவங்கள் விசேடமாக நடைபெற்றுவருகின்றன.

வைகாசி விசாகப் பெருநாளில் தேர்த் திருவிழா நடைபெறும் வண்ணம் பத்துத் தினங்களுக்கு மஹோற்சவம் இடம்பெறுகிறது. கந்தபுராண படனம், திருவாதவூரடிகள் புராண படனம் ஆலயத்தில் தொடர்ந்து நடைபெற்று வருவதாக இலங்கைத் திருநாட்டில் இந்துக் கோயில்கள் என்ற நூல் கூறுகிறது.

பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்களைத் தொடர்ந்து அவர் வழிவந்த மாப்பிளைக்குரு, கருணாகரக்குரு, சாமிக் குரு, சுப்பர் குரு, சின்னக்குரு போன்ற குருமார்கள் இறைபணியைத் திறம்படத் தொடர்ந்திருக்கின்றனர்.

இவ்வாறு இறை அருளோடு குருவருளும் தொடர்ந் திருக்க இந்த ஆலயம் மீண்டும் குட முழுக்குப் பெற்று பரிவாரத் தெய்வங்களான பத்திரகாளி, வைரவர், பிள்ளையார் போன்றனவும் நிறுவப்பட்டன. 1989 ஆம் ஆண்டு ஆலயத்தில் ஐந்தாவது மகாகும் பாபிஷேகம் பிரம்மஸ்ரீ ராம்கெங்காதரக் குருக் கள் (சாரதா பீடம்) தலைமையிலே இனிது நிறை வேறியது.

இவ்வாறு மிக இனிதாகப் பூசை அனுட்டானங்கள் நடைபெற்று வரும் நாளிலே மீண்டும் தேவஸ் தானம் புனர மைக்கப்பட்டு 2003 ஆம் ஆண்டு ஆடி 2 ஆம் நாள் மகாகும்பாபிஷேகம் இடம் பெற்றது.

கும்பாபிஷேகத்துக்கு பிரதம சிவாச்சாரியராக சிவப்பிரம்ம ஸ்ரீ ராம் செங்காதரக் குருக்கள் லண்டனிலிருந்து வருகை தந்த தனது உடன் பிறப்பு சபாநாதக் குருக்கள் போன்றோருடன் இணைந்து கும்பாபிஷேகத்தை இனிதே நடத்தி வைத்தார்.

அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானத்துக்கு தேர் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற பேரவாவினால் - ஆலய வளர்ச்சியில் அதீத ஈடுபாடு கொண்டவரான சுப்பர் வேலுப்பிள்ளை (சிலம்பனார்) கிராம மக்களின் உதவியுடன் மஞ்சம் ஒன்றினை உருவாக்கி 1953 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் செய்து வைகாசி விசாகத்திலும், தைப்பூசநாளிலும் வீதி வலம் வரச் செய்தார். 2008 ஆம் ஆண்டிலே 55 வருட காலப் பழைமை கொண்ட இந்தத் தேருக்கு பதிலீடாகப் புதிய சித்திரத்தேர் அழகிய சிற்ப வேலைப் பாடுகளுடன் அமைக்கப்பட்டது.

வைகாசி விசாக நாளைத் தேர்த்திருவிழாவாகக்கொண்டு நடைபெறும் பத்து நாள் திருவிழாவிலே ஈழத்தின் முன்னணித் தவில், நாதஸ்வர வித்துவான்களின் இசை மழையை இங்கு பல்லாண்டு காலமாகக் காணக்கூடியதாகவுள்ளது.

திருவிழாக்கள் மாதந்தோறும் கார்த்திகைத்திருவிழாக்கள் வெள்ளி விசேட உற்சவங்கள், கந்தசஷ்டி விரதம், நவராத்திரி விரதம், விநாயகர் விரதம், மகா சிவராத்திரி என்பன மிகச் சிறப்பாக ஆலயத்திலே கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றன.

பல சமயப் பணிகளை ஆற்றிவருகின்ற இந்த ஆலயம் தனக்கென உள்ள 186 பரப்பு விளை நிலங்களை விவசாயிகளுக்கு வழங்கி சமூகப் பணி புரிகின்றது. புலம் பெயர் நாடுகளில் வதியும் இந்த ஆலயப் பக்தர்கள் கோயிலின் விழாக்களைக் கண்டு களிப்பதற்கு வசதியாக - நவீன காலத்துக்கேற்ப இணைய வசதியையும் ஏற்படுத்தியுள்ளனர்.

முருகப்பெரு மானின் இறைகடாட்சமும் சுபீட்சமும் மலர ஆலயம் மிகப் பிரமாண்டமான வளர்ச்சியைக் கண்டு வருகின்ற தெனில் இது மிகையாகாது.

சரணா


## சீரடி சாயி பாபாவின் வீதி உலா



யாழ்ப்பாணம் நல்லூர், நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாயி மந்திரின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான இன்று (27.09.2011) மாலை 5 மணிக்கு அபிஷேகம், விசேட பூசைகளைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு பாபாவின் வீதி உலா ஆலயத்திலிருந்து ஆரம்பித்து நாவலர் வீதி, மருதடி வீதி, றக்கா வீதி, கோயில் வீதி ஊடாக மீண்டும் இரவு 8.30 மணியளவில் ஆலயத்தை வந்தடையும்.

அனைவரும் வருக பாபா அருள் பெறுக

314, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

பா.ராகவன்
சீரடி சாயி மந்திர்

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

22

SEPT. 2011 TO FEBRUARY 2012

*தமிழ் மொழி மூலம்*

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2011

## வேலைக்கு ஆள்கள் தேவை

* அச்சியந்திரம் இயக்குநர் (KORD)
* புத்தகம் கட்டுனர்
* பக்க வடிவமைப்பாளர் (DTP)

அனுபவம் உள்ளவர்கள் / பழக விரும்புபவர்கள் இருபாலாரும் (ஆண், பெண்) நேரில் வரவும்

*திருச்செல்வி அச்சகம்*
*இல.110, யாழ். வீதி,*
*மணிப்பாய்.* T.P 0773467499

## German Swiss மொழிகள்

German, Swiss மொழிகள் தமிழ் மொழிப்பெயர்புடன் Embassyஇல் கேட்கப்படும் Examக்கு ஏற்றவாறு நடைபெறுகிறது. CD, Book விளக்கத்துடன் நடைபெறுகிறது.
10, Palaly, Road, Jaffna. 0771604823.

## சிவபார்வதி ஜோதிட நிலையம்

பண்டித் மஞ்சுநாத சுவாமி
தொ.பே.இல: 0778949044

வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கப் போவது யாவையும் தெரிவிப்பதுடன் பரிகாரமும் செய்து கொடுப்பார்.

Skype Contect- PARAMASHIVAN 1
SANJAYA HOTEL 414, Hospital Road, Jaffna.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்: காலை 7 மணி முதல் மாலை 7.30 மணி வரை கட்டணம் 101/=

## சிமெந்து

விற்பனைக்கு உண்டு.
யாழ். சிமெந்து வணிகம்
021 320 2020

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)
### பரிசில் நாள் - 2011

நலமே

*காலம்:* 27.09.2011 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி
*இடம்:* கல்லூரி அருணாசலம் மண்டபம்
*தலைவர்:* திரு. அ.கயிலாயபிள்ளை, கல்லூரி முதல்வர்.
**முதன்மை விருந்தினர்:** உயர்திரு இ.இளங்கோவன்
*கௌரவ ஆளுநரின் செயலாளர், (ஆளுநர் செயலகம், வடமாகாணம்) பதில் செயலாளர் (கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு, வடமாகாணம்)*
**சிறப்பு விருந்தினர்:** உயர்திரு கு.பிறேமகாந்தன்
(கல்விப் பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம்)
**கௌரவ விருந்தினர்:** திருமதி வாணி கலாபன்
*(சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கம், ஐக்கிய இராச்சியக் கிளை)*

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

**குறிப்பு:** 2010 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களையும், புலமைப்பரிசில் பெறும் மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## மூன்றாம் ஆண்டு நினைவு



அமரர் ஜீவானந்தன் பிரகாஷ்

தோற்றம்
28 ★ 04 ★ 1988

மறைவு
29 ★ 09 ★ 2008

திதி: அமாவாசை

*ஆண்டு மூன்று சென்றதையா மனமோ தவிக்குதையா*
*எம் வாழ்வு ஒளி இழந்ததேனோ*
*அரக்கன் செய்த விளையாட்டால் தவிக்கின்றோம் நாம் இன்று*
*எத்தனை ஜென்மம் எடுத்தாலும் - உம்மை*
*மறப்போமா செல்வமே - உமது*
*ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

20 ஏ, (54), செட்டித்தெரு லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(8593)

பிரிவால் வாடும்:
அம்மம்மா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
27 செப்ரெம்பர் 2011 செவ்வாய்க்கிழமை

# கிழக்குப் பாடசாலைகளுக்கு இந்தியாவால் 1,200 கணினிகள்



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு 1,200 கணினிகளை இந்தியா வழங்கியுள்ளது என்று இந்திய தூதர் அசோக் கே. காந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்று கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

கணினிகள் வழங்கும் நிகழ்ச்சி திருகோண மலையில் நடைபெற்றது. இதன்போது 1200 கணினிகளும், 160 லேசர் பிரிண்டர்களும் வழங்கி வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் திறனை அதிகரிக்க உதவும் வகையில் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை - மட்டக்களப்பு பகுதிகளுக்கு இடையே ரயில், வீதிவசதிகளை மேம்படுத்த இந்தியா உதவி செய்துள்ளது. இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 20 பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சம்பூர் பகுதியில் அனல்மின் நிலையம் அமைக்க 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# மறுவாழ்வளித்தலுக்கு இலங்கை உதாரணமாம்

## - பிரான்ஸ் தூதர்

சிறுவர் போராளிகளுக்கு மறுவாழ் வளித்து மீண்டும் அவர்களை சமூகத்துடன் இணைப்பதில் அண்மைக் காலத்தில் இலங்கை வெற்றி கொண்டுள்ளது என்று மனித உரிமைகளுக்கான பிரான்ஸ் தூதர் பிரான்சுவா ஜிமேரி தெரிவித்துள்ளார்.

மேலும், மியன்மார், கொலம்பியா, இலங்கை மற்றும் கொங்கோ போன்ற நாடுகள் பல்வேறு பட்ட அணுகுமுறைகளை சிறுவர் போராளிகள் தொடர்பில் மேற்கொண்ட தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையைப் போன்று உகண் டாவும் சிறந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த நிலையில் ஐ.நா சபையின் அறிக்கையின் படி உலகளாவிய ரீதியில் 2 லட்சத்து 50 ஆயிரம் சிறுவர் போராளிகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# ரமேஷின் மனைவிக்கு தென்ஆபிரிக்கா அடைக்கலம்

மேஜர் ஜெனரல் சவேந்திரா சில்வாவிற்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ள வத்சலாவுக்கு தென்ஆபிரிக்கா அடைக்கலம் வழங்கியுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண ராணுவத் தளபதியாகச் செயற்பட்ட கேணல் ரமேஸின் மனைவியான வத்சலா என்பவர், சவேந்திராவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். மேகலா, கலைச்சுடர் மற்றும் பிரபாகரன் ஆகிய அவரது பிள்ளைகளுக்கும், அவருக்கும் தென் ஆபிரிக்கா அடைக்கலம் வழங்கியுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து கப்பல் மூலம் வத்தசலாவும் அவரது பிள்ளைகளும் தென் ஆபிரிக்காவுக்குச் சென்றுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# இலங்கையர் இந்தியாவில் கைது

தமிழகம், கீழ்கரைப் பிரதேசத்தில் சிம் கார்ட் வாங்குவதற்காக போலி ஆவணங்களை சமர்ப்பித்த இலங்கையரை கியூப் பிரிவுப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் மடவக்குளத்தைச் சேர்ந்த மொஹ மட்ஹசினி (27 வயது) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஆவார்.

ஹசினி, இரண்டு வருடங்களின் முன்பு இலங்கையில் உள்ள இக்பால் என்பவரிடம் 10லட்சம்கடன் வாங்கி அதனை திருப்பிச் செலுத்தாது தமிழ் நாடு கீழ்கரைக்கு தப்பிச் சென்றுள்ளார்.

இக்பால் இவரை இலங்கையில் பல இடங்களிலும் தேடித் திரிந்த நிலையில் கடந்த மாதம் ஹசினி இந்தியாவுக்குச் சென்று கீழ்கரையிலுள்ள விடுதியில் தங்கி வந்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த விடுதியில் இருந்த ஒரு கூலித் தொழிலாளியுடன் நட்புக்கொண்டுள்ளார் ஹசினி. அதனைத் தொடர்ந்து சட்ட ரீதியான ஆவணங்கள் இன்றி சிம்கார்ட் எடுக்க முடியாது சிரமப்பட்ட ஹசினிக்கு குறித்த கூலித் தொழிலாளி தனது வாக்காளர் அடையாள அட்டையை கொடுத்துள்ளார்.

ஹசினி குறித்த வாக்காளர் அட்டையில் கூலித் தொழிலாளியின் படத்தை அகற்றிவிட்டு தனது படத்தை ஒட்டி பிரதியொன்றை எடுத்து அதனைசிம்கார்ட் கொள்வனவு செய்ய சமர்பித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பம் தொடர்பில் தகவல் கிடைத்ததும் கியூப் பிரிவு பொலிஸார் விடுதியில் திடீர் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டு ஹசினியை கைது செய்துள்ளனர்.

# கட்சியில் இருந்து விலகியவர்கள் மீண்டும் இணையலாம்

## -அனுரகுமார

கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்கள் மீளவும் கட்சியில் இணைந்து கொள்ள முடியும் என்று ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியை விட்டு விலகிச் சென்றவர்கள் மீண்டும் இணைந்து கொள்ள கதவுகள் திறந்தே இருக்கும்.

சிலரின் ஏமாற்று வார்த்தைகளினால் கட்சியை விட்டு விலகிச் சென்றனர். இவர்களில் பலர் எம்மோடு மீள இணைந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் சட்ட மீறல்கள்: இதுவரை 75 பேர் கைது

கொழும்பு, செப் 27

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் இதுவரை 75 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 38 பேர் சட்ட விரோதமாக சுவரொட்டிகளை ஒட்டியமை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் எனவும், இதுவரை தேர்தல் சட்டங்களை மீறிய 64 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் தேர்தல் பாதுகாப்புக் கடமைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை இதுவரையான காலப்பகுதியினுள் தமது அமைப்பிற்கு தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான 59 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேர்தலுடன் தொடர்புடைய 38 முறைப்பாடுகள் தமக்குப் பதிவாகியுள்ளன என்று தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி ரசாங்க ஹரிஸ்சந்திர கூறியுள்ளார்.

(வ)

## மரண அறிவித்தல்

### திருமதி இம்மனுவல் புஸ்பராணி குரூஸ்



வேம்பாரைச் சேர்ந்த காலஞ்சென்ற இம்மனுவல் தர்மக்கொடி குரூஸ் (P.I. Fernando. Dentel & Optical) ஸ்தாபகர் அவர்களின் அன்பு மனைவி இம்மனுவல் புஸ்பராணி குரூஸ் 25.09.2011 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அபூர்வசீலி (P.J.Fernando Hospital Road.Jaffna), ஜான்சி (P.I. Fernando.Bus Stand Jaffna), செல்டன், நியூட்டன் (P.J.Fernando. Optical.Lions Club.Waters Meet), மோகன், சுவேந்திரன் (P.I. Fernando.மானிப்பாய்), காலஞ்சென்றவர்களான யேசுராஜன், செல்வேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயக்குமாரன் கேரமஸ், ராஜன், காந்தி, ஆனந்தி, ரெட்ணமலர் ஆகியோரின் பாசமிகு மாமியும் ப்ரியா, அசோக்ராஜ்குமார், தீபா, செல்வக்குமார், சங்கீதா, அருண்குமார், அஜித்குமார், செந்தூரன், செந்தாளன், சாளினி, பவித்ரன், ப்ரியங்கா, டினேஸ், சித்திரா, கரோலின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும். ஸ்ரெபான், லூட்ஸ் செலன், பிரிட்டோ, அஸ்மி, கெவின், ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.09.2011) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மருமகன் - ஜெயக்குமாரன் கோமஸ்
(P.J.Fernando)

*131, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(8627)

## தேவை

பான்சி ஹவுஸூக்கு ஆண், பெண் இரு பாலாரும் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது.

ராஜா பான்ஷி,
இல.153, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.

## SPOKEN ENGLISH

*19 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு*

Batch II ஆரம்பம். A/L எடுத்த மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம் இலகுவான முறையில் குறைந்த கட்டணத்தில் அடிப்படையிலிருந்து 3 மாதத்துக்குள் எழுத வாசிக்க கதைக்கும் நிலைக்குச் சிறப்பாக கற்பித்து Diploma சான்றிதழ் வழங்கப்படும். 3ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யவும் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை.

*யமுனா வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்*
தொ.பே:0773027375

## விற்பனைக்கு



நல்ல நிலையிலுள்ள உழவு இயந்திரம் விற்பனைக்கு தொடர்பு கொள்ள வேண்டிய
T.P.No-0725071457,0772520030

## வேலைக்கு ஆள்தேவை

Computer Repairing தெரிந்த அனுபவமுள்ள ஆள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
0772622373

## வாடகைக்கு

யாழ். கோயில் வீதியில் மாடி வீடு நிறுவனம் அல்லது அலுவலக பாவனைக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0773649454
021 222 3806

## நெஞ்சம் மறவாத நினைவுகளுடன் ஒன்பது ஆண்டுகள்

திருமதி.நகுலேஸ்வரி குலசிங்கம் (லீலா)
*திதி:-அமாவாசை (27.09.2011)*



ஆண்டுகள் ஒன்பது ஓடி
மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எங்கள்
இதயங்களில் நிழலாகத்
தொடரும்

கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

*குடும்பத்தினர்.*

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

TheOnly Official French Language Centre In Jaffna

Learn French The French Way

சர்வதேச மொழியான French மொழியை எவரும் இலகுவாக கற்றுக் கொள்ளலாம்...
6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்குத் தோற்றலாம்.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61,Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 0212228093
E-mail:alliancejaffna@yahoo.com
(நக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவரின் தூக்கை ரத்துச் செய்யக் கோரும் அறப்போர் கண்டிப்பாக வெற்றிபெறும்

## உண்ணாவிரத மேடையில் வைகோ



சென்னை, செப். 27

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய 3 பேரின் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்ய வலியுறுத்தி நடைபெறும் அறப் போராட்டங்கள் கண்டிப்பாக வெற்றிபெறும் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய 3 பேரின் மரண தண்டனையை ரத்துச் செய்ய வலியுறுத்தி மரண தண்டனை எதிர்ப்பு கூட்டமைப்பின் சார்பில் சென்னையில் கடந்த 22 ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரதப்போர் நடந்து வருகிறது.

4 ஆவது நாளான நேற்று முன்தினம் போராட்டத்தில் வைகோ கலந்துகொண்டு உண்ணாவிரதம் இருந்தார். அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில் -

அற வழியிலான இந்த உண்ணாவிரதப் போராட்டம் எந்த நோக்கத்துக்காக நடத்தப்படுகிறது என்று இதற்கு முன்பு பேசியவர்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் மூலம் சரியாக உணர்த்தி விட்டனர்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ம.தி.மு.க. பங்கேற்கவில்லை என்று அறிவித்ததை தமிழகம் ஏற்றுக்கொண்டது. இப்போது தமிழக அரசியலில் மிகுந்த பரபரப்பான சூழ்நிலை உருவாகியுள்ளது. ஒவ்வொரு குதிரையும் தனித்தனியாக ஓடுகின்றன.

ஒரு கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் எனக்கும் கட்சிப் பணிகள் அதிகம் உள்ளன. ஆனால் நான் இப்போது, 3 தமிழர்களுக்காக இங்கு நடைபெற்றுவரும் போராட்டத்தில் பங்கேற்றுள்ளேன்.

இந்த அறப்போராட்டத்தின் நோக்கம் கண்டிப்பாக வெற்றி பெறும். பல போராட்டங்களுக்கு மத்தியில் தமிழகம் உள்ளூராட்சித் தேர்தலைச் சந்திக்கிறது. மரண தண்டனைக்கு எதிராக தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அலை அணையாமல் காக்க ஏராள மானவர்கள் அணிவகுத்து வருகிறார்கள்.

போராட்டத்தில் வலியுறுத்தப்படும் கோரிக்கைகள் நிறைவேறும்போதுதான் போராட்டம் வெற்றி பெற்றதாக குறிப்பிட முடியும். அந்த வகையில், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் மரண தண்டனையை ரத்துச் செய்ய வலியுறுத்தி நடைபெறும் அறப் போராட்டங்கள் கண்டிப்பாக வெற்றி பெறும்- என்றார் வைகோ.

# ரயில் கூரை மீது பயணித்த 5 மாணவர்கள் உயிரிழப்பு

பில்வாரா,செப்.27

ராஜஸ்தானில் ரயில் கூரையில் பயணித்த மாணவர்கள் மேம்பாலத்தில் மோதி 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 4 பேர் காயமடைந்தனர்.

மத்தியப்பிரதேசம் குவாலியரிலிருந்து சனிக்கிழமை மாலை ராஜஸ்தான் உதயப்பூருக்கு எக்ஸ்பிரஸ் ரயில் ஒன்று புறப்பட்டு வந்தது.

நள்ளிரவு 1.30 மணிக்கு ராஜஸ்தான் அஜ்மீர் ரயில் நிலையத்துக்கு வந்த இந்த ரயிலில் சுமார் 20 பேர் அடங்கிய மாணவர் குழு ஒன்று ஏறியது. அவர்கள் பில்வாரா நகரில் நேற்று முன்தினம் நடக்கவிருந்த அரசுத் தேர்வில் பங்கேற்பதாக இருந்தனர்.

ரயிலில் கூட்டம் அதிகமாக இருக்க மாணவர்களில் பலர் கூரையில் ஏறி அமர்ந்தனர்.

அப்போது பில்வாரா நகர் அருகே இருந்த மேம்பாலத்தில் மோதி படுகாயம் அடைந்தனர். இதில் 5பேர் உயிரிழந்தனர். 4 பேர் படுகாயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

# சென்னை விமான நிலையத்தில் துப்பாக்கியுடன் இளம் பெண் கைது

சென்னை, செப். 27

சென்னை விமான நிலையத்தில் துப்பாக்கியுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து ஐதராபாத்திற்கு நேற்றுமுன் தினம் மாலை தனியார் விமானம் செல்ல இருந்தது. இந்த விமானத்தில் ஏற வந்த பயணிகளை விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது ஐதராபாத்தை சேர்ந்த கணினிப் பொறியியலாளர் ஹக்னா ஷா தவாக் (வயது - 26) என்பவர் தனது நண்பருடன் வந்தார்.

அப்போது தவாக்கின் கைப்பையை பாதுகாப்பு அதிகாரிகள் சோதனை போட்டபோது அதில் பறவ்வகளை சுடும் துப்பாக்கியின் குண்டு ஒன்று இருந்ததைக் கண்டுபிடித்தனர்.


# தன்னைக் கொல்ல மவோயிஸ்டுகள் சதி - என்கிறார் மம்தா

மாவோயிஸ்டுகளால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அவர்கள் என்னை கொல்லச் சதித்திட்டம் தீட்டி வருகின்றனர் என்று மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி கூறினார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் மம்தா கூறுகையில், நக்ஸலைட்டுகளுடனான பிரச்சினைக்குத் தீர்வு காண அமைதிப் பேச்சு நடத்த அரசு விரும்புகிறது. ஜங்கிள்மஹால் என்ற பெயரில் மாவோயிஸ்ட் பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் சிறப்புத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

மேலும் நக்ஸலைட்டுகளுடன் பேச்சுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம். ஆனால் அதில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. இதனால் என்னையும், எனது கட்சியின் மூத்த தலைவரான மத்திய அமைச்சர் தினேஷ்திவேதி உள்ளிட்டோரை கொலை செய்ய அவர்கள் திட்டமிட்டுள்ளனர் - என்றார் அவர்.

# மன்மோகன் சிங்குக்கு வயது 79



பிரதமர் மன்மோகன் சிங்கின் 79 ஆவது பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, பஞ்சாப், அமிர்தசரஸை சேர்ந்த கில் என்ற கலைஞர், முட்டையின் மேல் பகுதியில் மன்மோகனின் உருவத்தை வரைந்து அசத்தினார்.

# இந்திய அறிவியல் ஆராய்ச்சி கழக விருது தமிழருக்கு

டில்லி, செப். 27

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் 2007, 2008 ஆம் ஆண்டுகளுக்கான விருதுகள் சனிக்கிழமை அறிவிக்கப்பட்டன. உயிரணுவியல் துறையில் சிறந்த ஆராய்ச்சிக்கான விருதை டாக்டர் கே.சோமசுந்தரம் என்னும் தமிழர் பெறுகிறார்.

இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு விருது அளித்து வருகிறது. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம். 2007, 2008 ஆண்டுகளுக்கான 34 விருது களில் 2007 ஆம் ஆண்டுக்கான டாக்டர் பிரேம்நாத் வாஹி விருதைப் பெறுபவர் டாக் டர் கே. சோமசுந்தரம். இவர் பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தில் நுண்ணுயிரியல் துறையில் துணைப் பேராசி ரியராக உள்ளார்.

இந்த விருது, விருதுப் பத்திரமும் ரூபா ஒரு இலட்சம் ரொக்கப் பரிசும் கொண்டதாகும்.

# வளரும் நாடுகளுக்கு உலக வங்கி கூடுதல் நிதி அளிக்க வேண்டும்

## பிரணாப் வலியுறுத்து

வளரும் நாடுகளுக்கு உலக வங்கி அளிக்கும் நிதி போதவில்லை. இதனால் கூடுதலான நிதியை அளித்து உதவ முன்வர வேண்டும் - என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி வலியுறுத்தினார்.

வாஷிங்டனில் சனிக்கிழமை ஜி-20 நாடுகளின் வளர்ச்சித் திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகையில் அவர் இதை வலியுறுத்தினார். மேலும் அவர் கூறியதாவது -

அமெரிக்கக் கடன் சுமை, யூரோ பிராந்திய நிதி நெருக்கடி, உலக நாடுகளின் சரிநிகரற்ற வளர்ச்சி, வளரும் நாடுகளை அழுத்தும் அதிகமான பணவீக்கம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை உலக நாடுகள் சந்தித்து வரும் இக்கட்டான தருணத்தில் இங்கு கூடியுள்ளோம்.

இப்பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வைக் காண்பது என்பதை ஆலோசிக்கக் கிடைத்த வாய்ப்பாக இதைக் கருத வேண்டும். உலக நாடுகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை எந்த ஒரு நாடும் தனியாக நின்று சமாளித்திட முடியாது. அனைத்து நாடுகளுக்கு இடையே பரஸ்பர ஒத்துழைப்பும், ஒருங்கிணைப்பும் அவசியம்.

வளரும் நாடுகளில் நிலையான நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யவும், உலக நாடுகளிடையேயான தேவைகளை சமநிலைப்படுத்தவும் வளரும் நாடுகளுக்கு உலக வங்கி கூடுதல் நிதியை அளிக்க வேண்டும் - என்றார்.

# குஜராத்தில் போட்டி அரசியல் நடத்த காங்கிரஸ் முயற்சி; மோடி ஆவேசம்

அகமதாபாத், செப். 27

குஜராத்தில் ஆளுநர் டாக்டர் கமலா மூலம், போட்டி அரசை நடத்த காங்கிரஸ் கட்சி முயற்சிக்கிறது - என்று குற்றஞ்சாட்டினார் அந்த மாநில முதலமைச்சர் நரேந்திர மோடி.

குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் உள்ள வஸ்த்ரால் என்ற இடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்தக் குற்றச்சாட்டை மோடி பகிரங்கமாகத் தெரிவித்தார்.

முன்னதாக, மாநில ஆளுநர் கமலாவை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்ற தீர்மானத்தை மாநில பாரதிய ஜனதாக் கட்சி நிறைவேற்றியது.

அரசமைப்புச் சட்டப்படி ஆளுநர் பதவி வகிக்கும் வரை, மாநிலத்தில் காங்கிரஸார் கட்டளைக்கேற்ப நடந்து கொண்டு தனது பதவிக்குரிய கண்ணியத்தைச் சீர்குலைப்பதால் அவரைத் திரும்பப் பெற வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை கட்சி நிறைவேற்றியது.

2004 மக்களவை பொதுத் தேர்தலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி வெற்றி பெற்று காங்கிரஸ் தலைமையிலான அரசு மத்தியில் மீண்டும் பதவிக்கு வந்தவுடனேயே குஜராத் மாநில காங்கிரஸார் என்னை எச்சரித்தனர். இன்னும் 24 மணி நேரத்தில் முதலமைச்சர் நரேந்திர மோடி பெட்டி, படுக்கையுடன் மூட்டை கட்டிக்கொண்டு வெளியேற வேண்டியிருக்கும், மாநிலத்தில் அரசமைப்புச் சட்டத்தின் 356 ஆவது பிரிவின் கீழ் ஆட்சி கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்படும் என்று அவர்கள் கூறினர்.

அப்படிச் செய்ய முடியாவிட்டாலும் ஆட்சியிலிருந்து என்னை அகற்றுவதற்காக ஓய்வில்லாமல் காங்கிரஸார் உழைத்து வருகின்றனர்.

பாரதிய ஜனதா கட்சி ஆட்சி செய்கிறது என்ற ஒரே காரணத்துக்காக குஜராத் மாநிலத்தை எதிரிகளின் மாநிலமாகவே மத்திய அரசு கருதுகிறது. குஜராத்தின் வளர்ச்சி திட்டங்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் முட்டுக் கட்டை போடுகிறது. நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டுகிறது.

குஜராத் மாநிலத்தைக் கொல்லைப்புற வழியாக ஆள காங்கிரஸ் துடிக்கிறது. ராஜ்பவன் அதற்குப் பயன்படுத்தப்படுகிறது- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிமெந்து இறக்குமதியில் குறைபாடு 2 கோடி 34 லட்சம் ரூபா நட்டம்

கொழும்பு, செப்.27

சிமெந்துக் கூட்டுத்தாபனம் சிமெந்து இறக்குமதியை உரிய வகையில் கையாளாததன் காரணமாக 2009 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம், துறைமுக அதிகார சபைக்கும் கப்பல் நிறுவனங்களுக்கும் 2 கோடி 34 லட்சம் ரூபா தாமதக் கட்டணமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் 2009 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் குழுவின் அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிமெந்து இறக்குமதி, களஞ்சியப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் உரிய வகையில் கையாளப்படவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நிதியாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட சிமெந்துப் பைகளில் 777 சிமெந்துப் பைகள் குறைவடைந்திருந்ததால் கூட்டுத்தாபனத்துக்கு நாலரை லட்சத்துக்கு மேற்பட்ட பண நஷ்டம் ஏற்பட்டதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நிதியாண்டில் சிமெந்து கையாளல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக கூட்டுத்தாபனத்துக்கு 8 கோடி 40 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் 1990 ஆம் ஆண்டு முதல் இடம்பெறாத போதிலும் அங்கு தொழிலாற்றி வந்த 72 ஊழியர்களுக்கான சம்பளமாக ஒரு கோடி 73 லட்சம் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ம)

அபிவிருத்திக்கு....



ஆரம்பம்: பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் விடுதி அமைப்பதற்கான அடிக்கல்லை முன்னாள் கல்லூரியின் விடுதி மேற்பார்வையாள ரும் 25 வருடங்கள் ஆசிரியராகப் பணி புரிந்தவரும் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய டி.ஆர். அருமைநாயகம் நட்டு வைக்கின்றார்.

# சிறையிலிருந்து தப்பி ஓடிய கைதி தாமாகத் திரும்பி வந்து சரணடைவு

கொழும்பு,செப்.7

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஓராண்டு கால சிறைத்தண்டனை அனுபவித்து வந்த கைதியொருவர் சிறையிலிருந்து தப்பி ஓடி இரு நாள்களின் பின்னர் தாமாகவே திரும்பி வந்து சிறைச்சாலை அதிகாரிகளிடம் சரணடைந்த சுவாரஸ்யமான சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வந்துள்ளதாவது

சிறந்ததொரு சித்திரக்காரனெனக் கூறப்படும் ஏச்.எஸ்.சிரந்த றொட்றிகோ என்ற நபர் கடந்த மாதம் 20 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலை தலைமையகத்தில் ஏனைய கைதிகளுடன் வேலையில் ஈடுபட்டிருந்த சமயம் ஓட்டோ ஒன்றில் ஏறித்தப்பிச் சென்றுள்ளார்.

இரண்டு நாள்களின் பின்னர் தாமாகவே திரும்பி வந்து சிறைச்சாலை அதிகாரிகளிடம் சரணடைந்துள்ளார்.

வயதான தமது தாயார் சுகவீனமுற்றிருப்பதாக அறிந்து அவரைப் பார்ப்பதற்காகவே தாம் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றதாக அவர் சிறைச்சாலை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட கைதியின் சிறைத்தண்டனை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் முடிவடையவுள்ள நிலையில் தற்போது அவர் இவ்விதம் தப்பிச் சென்ற குற்றத்துக்காக சிறைச்சாலை ஒழுங்காற்று நடவடிக்கைக்குழு அவரது சிறைத்தண்டனைக் காலத்தை மேலும் நீடிக்கக்கூடுமென சிறைச்சாலைகள் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ம)

# திறமைக்கு ஊனம் தடையல்ல தரம் 5 இல் மாணவன் சாதனை

கொழும்பு,செப்.27

திறமைக்கு ஊனம் ஒரு தடையல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் பிறப்பிலேயே வலது கையிலும் வலது காலிலும் விரல்கள் எதுவுமின்றிப் பிறந்த ஒரு சிறுவன் அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் 186 புள்ளிகள் பெற்றுச் சித்தியெய்திய சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வந்துள்ளதாவது;

மாத்தளை மாவட்டம் கினிகம பிரதேசத்தைச் சேர்ந்த சுபுன் சாமிந்த ஜயசிங்க என்ற சிறுவன் பிறப்பிலேயே தனது வலது பக்க கையிலும் காலிலும் விரல்கள் எதுவுமின்றிப் பிறந்தவன். இதனால் தனது இடது கைகளாலேயே தனது சகல வேலைகளையும் செய்யத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டிருந்தான்.

பள்ளேதெனிய மஹிந்த ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்று வந்த இந்த மாணவன் கடைசியாக இடம் பெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 186 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்.

அத்துடன் மாத்தளை மாவட்டத்தில் குறிப்பிட்ட பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்கள் வரிசையில் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளதும். குறிப்பிடத்தக்கது. (ம)

# அபிலிம்பிக் போட்டி வெற்றியாளர்களான மாற்றுத் திறனாளிகள்

மாற்று வலுவுடையோருக்கான அபிலிம்பிக் போட்டிகள் கடந்த பல ஆண்டுகளாக எமது நாட்டில் நடைபெற்று வந்துள்ள போதும் யுத்த சூழ்நிலை காரணமாக யாழ்.மாவட்டத்தில் உள்ளவர்களுக்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெறவில்லை.

மாற்று வலுவுடையோருக்கான 2011 ஆம் ஆண்டுக்கான அபிலிம்பிக் போட்டிகளுக்கு இந்த வருடம் யாழ். மாவட்டத்திலுள்ள மாற்று வலுவுடையோருக்கும் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினூடாகச் சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளமையையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். அத்துடன் அபிலிம்பிக் போட்டிகளாக 16 வகையான போட்டிகளும் இந்த வருடம் நடைபெற்றுள்ளது.

மேற்படி அபிலிம்பிக் போட்டிக்கான மாகாணமட்டப் போட்டிகள் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டிகளுக்கு எமது வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்திலிருந்து 39 பேர்கள் பங்குபற்றியுள்ளார்கள். இவர்களில் 14 பேர் மாவட்ட மட்டப் போட்டிகளில் முதல் மூன்று நிலைகளிலும் வெற்றி பெற்றுள்ளனர்.



திருமதி கே கார்த்திகேஸ்வரி- அழகியல் கலை - முதலாம் இடம், செல்வி என் சுவர்ணலதா- அழகியல் கலை இரண்டாம் இடம், செல்வி ப. கிருஷாந்தி- அழகியல் கலை, மூன்றாம் இடம், திரு எஸ். தட்சனாமூர்த்தி- கதிரை பின்னுதல் இரண்டாம் இடம், திரு எ. பொன்னுத்துரை - கதிரை பின்னுதல் மூன்றாம் இடம், செல்வி என். ஜெயகுமாரி- ஆடைதைத்தல் - உயர் முதலாம் இடம், திருமதி எஸ். சுந்தரேஸ்வரி- ஆடைதைத்தல் - உயர் இரண்டாம் இடம், செல்வி என் சுசிகலா ஆடைதைத்தல் - உயர் மூன்றாம் இடம், செல்வி எஸ். பாலகுமாரி ஆடைதைத்தல் - அடிப்படை இரண்டாம் இடம், செல்வி வீ. தீபா ஆங்கில கணினி வெளீயீடு- முதலாம் இடம், செல்வி ரி. ஞானம்மா ஆங்கில கணினி வெளீயீடு இரண்டா இடம், எஸ். சிவராஜா - அடிப்படை கணினி வெளியீடு முதலா இடம், திரு எஸ். நிருத்திபரன்- கணினியின் உதவியுடன் போஸ்ரர் தயாரித்தல் முதலாம் இடம், திருமதி எஸ். சுதா - பூக்கள் அலங்கரிப்பு இரண்டாம் இடம்.

மாவட்ட மட்ட போட்டிகளில் முதலாம் இடத்தில் வெற்றி பெற்ற 5 பேர் தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளனர்.

தேசிய மட்டப் போட்டிகளில் என். ஜெயக்குமாரி ஆடை தயாரித்தல் - உயர் பாடநெறியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவர் தனது 3 வயதில் போலியோ நோயால் இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டவர்.

தனது இயலாமையை பொருட்படுத்தாது தானும் சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக வாழ வேண்டும் என்று எமது நிலையம் ஆரம்பிக்கும் பொழுதே நிறுவனத்தில் சுயதொழில் பயிற்சிக்காக இணைந்து கொண்டார்.

இவர் தையல், கேக் ஐசிங் தயாரித்தல், கைப்பணி வேலைகள், மணப்பெண் அலங்காரம், போன்ற சுய தொழில் பயிற்சிகளைத் திறமையாகப் பெற்றுக் கொண்டார்.

பின் இவர் எமது நிலையத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே தையல் வேலைகளையும், மற்றும் சுயதொழில் வேலைகளையும் செய்து வருகின்றார். இவற்றுக்கு மேலாக 2000 ஆம் ஆண்டு முதல் 'அரோட்' நிலையத்தின் தையல் ஆசிரியராகவும் செயற்பட்டு வருகின்றார்.

மாகாண மட்டத்தில் நடைபெற்ற இவ் அபிலிம்பிக் போட்டியில் தையல் உயர்தரப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று பின் தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்திலும் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு அனைத்து மாற்று வலுவுடையோர்களும் தமது திறமைகளை வளர்த்துக் கொள்வதே சமூகக் கடமையாகும்.

வைத்திய கலாநிதி
என். சிவராஜா தலைவர் 'அரோட்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேணல் கடாபியின் சொந்த ஊர் மீதான தாக்குதல்கள் தற்காலிகமாக நிறுத்தம்

## புதிய அரசு அமைவதிலும் கருத்து வேறுபாடு

திரிபோலி,செப்.27

லிபிய அதிபர் மும்மர் கடாபியின் சொந்த ஊரான சிர்தேவின் மீதான தாக்குதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் மாற்று அரசு அமைக்கும் விஷயத்தில் கவுன்சில் உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றமையால் இதனால் புதிய அரசு அமைப் பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கடாபியின் சொந்த ஊரான சிர்தே அரசு எதிர்ப்புப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. கடாபியின் படைகளுக்கும், அரசு எதிர்ப்புப் படைகளுக்கும் இடையே வெள்ளிக்கிழமையிலிருந்து கடுமையான சண்டை நடந்து வந்தது. இந்த நிலையில் நேட்டோவின் உத்தரவின் பேரில் அரசு எதிர்ப்புப் படையினர் தங்கள் தாக்குதல்களை நிறுத்தியுள்ளனர். நேட்டோ படையினர் தாக்குதல்களை மேற்கொள்ள உள்ளதாலேயே அரச எதிர்ப்புப் படையினரின் தாக்குதல் திங்கள் கிழமை வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நகரைக் கைப்பற்றும் நோக்கில் வலுவான முற்றுகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. கவச வாகனங்களும், பீரங்கிகளும், ரொக்கெட் ஏவு வாகனங்களும் நகரைக் குறிவைத்து நிறுத்தப்பட்டுள்ளன.

தாக்குதல் தொடங்கப்பட்டால் நகரினுள் கடுமையான சண்டை மூளும் என்றும், வீதிகளில் தான் அதிகளவில் துப்பாக்கிப் பிரயோகம் நடை பெறும் என்றும் அரசு எதிர்ப்புப் படையைச் சேர்ந்த வீரர்கள் கூறினர்.

இந்தநிலையில் கவுன்சில் தலைவர் முஸ்தபா அப்துல் ஜலீல் கூறியதாவது; லிபியாவின் சில பகுதிகள் கடாபி ராணுவத்தினரின் ஆதிக்கத்தில் உள்ளன. சகல பகுதிகளையும் கடாபி ஆதரவாளர்களிடம் இருந்து விடுவித்து பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டும். இதற்கிடையில் மாற்று அரசு அமைக்கும் விஷயத்தில் கவுன்சில் உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுவதால் புதிய அரசு அமைப் பதில் தாமதம் ஏற்பட் டுள்ளது. எனினும் புதிய அரசில் மலை வாழ் மக்கள் உட்பட அனைத்துப் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இடம் பெறுவார்கள் என்றார்.

# மேற்கத்திய நாடுகளை சாடிய ஈரான் அதிபர் அஹமதி நிஜாத்

ஐ.நா பொதுச் சபையில் வெள்ளிக்கிழமை பங்கேற்றுப் பேசிய ஈரான் அதிபர் முகமது அஹமதி நிஜாத் மேற்கத்திய நாடுகளைக் கடுமையாகச் சாடினார்.

இதைத் தொடர்ந்து அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் பொதுச் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

ஹிட்லர் செய்த கொடுமைகளை காரணமாக வைத்துக் கொண்டு இஸ்ரேலுக்கு மேற்கு நாடுகள் அசைக்க முடியாத ஆதரவு தந்து வருகின்றன. அதே நேரத்தில் அவை பலஸ்தீன மக்களின் மீதான ஒடுக்கு முறைக்குத் துணை போகின்றன என்று முகமது அஹமதி நிஜாத் கூறினார்.

தன்னுடைய உரையில் ஒசாமா பின்லேடனை நீதியின் முன் நிறுத்தாமல் அவரைக் கொன்று கடலில் தூக்கி எறிந்தது ஏன் என்றும் அஹமதி நிஜாத் கேள்வி எழுப்பினார்.

தங்கள் ஆதாயம், ஏகாதிபத்தியம் ஆகிய இலக்குகளை நிலைநாட்ட மேற்கு நாடுகள் ராணுவத் தலையீடுகள் மூலம் பல்வேறு நாடுகளின் அடிப்படைக் கட்டுமானத்தை சீர்குலைப்பதுடன் அந்த நாடுகளைப் பலவீனப்படுத்துகின்றன. தங்களையே சார்ந்திருக்க வைப்பதன்மூலம் அந்நாடுகளின் வளங்களை கொள்ளையடித்து வருகின்றன என நிஜாத் கண்டித்தார்.



அவரது உரை குறித்துக் கருத்துத் தெரிவித்த அமெரிக்கப் பிரதிநிதி மார்க் கோர்ன்பளெப் தன்னுடைய மக்கள் பற்றிப் பேசுவதற்குக் கிடைத்த அருமையான வாய்ப்பை நிஜாத் கோட்டை விட்டு விட்டார் என்று கூறினார்.



ஐ.நா., பொதுச் சபையில் உரையாற்றிவிட்டு நாடு திரும்பிய பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸை தலைநகர் ரமல்லாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி வரவேற்றனர்.

# அமெரிக்கக் குற்றச்சாட்டின் எதிரொலி தளபதிகளைச் சந்தித்தார் கயானி

இஸ்லாமாபாத், செப்.27

பாகிஸ்தான் ராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் அஷ்ஃபாக் பர்வேஸ் கயானி, கடந்த ஞாயிற்றுக் கிழமை ராணுவத் தளபதிகளுடனான சிறப்புக் கூட்டத்தைக் கூட்டினார்.

ஆப்கன் தலைநகர் காபூலில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது செப்ரெம்பர் 13ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ அமைப்புக்குத் தொடர்பு உள்ளதாக, அமெரிக்க ராணுவத் தலைமைத் தளபதி மைக் முல்லன் குற்றம் சாட்டியதை அடுத்தே இந்த உயர்நிலைக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ராணுவத்தின் உயர்நிலை அதிகாரிகள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில், தீவிரவாத அமைப்புகளுடன் பாகிஸ்தான் தொடர்பு கொண்டிருப்பதாக அமெரிக்கா தெரிவித்த கருத்து குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் இத்தகைய பின்னடைவான சூழலில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மைக் முல்லனின் இந்தக் குற்றச்சாட்டை பாகிஸ்தான் கடுமையாக மறுத்துள்ளது. பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹீனா ரப்பானியும், இதுபோன்ற குற்றச்சாட்டுகள் தொடர்ந்தால் அமெரிக்காவுடனான உறவை முறித்துக் கொள்ள நேரிடும் என்று எச்சரித்துள்ளார்.

# ஆஸ்திரேலிய அரசின் புதிய வீசா நடைமுறைகள்

ஆஸ்திரேலிய அரசு புதிய வீசா நடைமுறைகளை அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில், ஏராளமான வெளிநாட்டு மாணவர்கள் படிக்கின்றனர். இந்த மாணவர்கள் மீது நடத்தப்படும் இனவெறித் தாக்குதலாலும், ஆஸ்திரேலிய அரசின் விசா கெடுபிடிகளாலும், இந்த ஆண்டு பல்கலைக்கழகங்களில், வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்தது.

ஆஸ்திரேலியாவில் படிக்க வரும் மாணவர்களின் வங்கிச் சேமிப்பில், 18 லட்ச ரூபாய் இருப்பதாக நிரூபித்தால்தான், அவர்களுக்கு வீசா வழங்கப்படும் என்ற விதிமுறை உள்ளது. ஆனால், இந்த நடைமுறையால், வசதி குறைந்த மாணவர்கள் ஆஸ்திரேலியா செல்வது தடுக்கப்பட்டுவிட்டது. எனவே, வீசா கெடுபிடிகளைத் தளர்த்தும் படி, பல்கலைக்கழகங்கள் அந்தநாட்டு அரசைக் கேட்டுக் கொண்டன. இதையடுத்து, அரசு வீசா நடைமுறையில், சில மாற்றங்களைச் செய்துள்ளது.

இது குறித்து, நியூ சவுத் வேல்ஸ் முன்னாள் அமைச்சர் மைக்கேல் நைட் குறிப்பிடுகையில்:

'' மாணவர்களின் வங்கிக் கையிருப்பு, கணிசமான அளவில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட் டுள்ளது. ஆனால், ஆஸ்திரே லியா வரும் மாணவர்கள் படிப்பதற்காக மட்டுமே வருகிறோம். வேலை செய்வதற்கு அல்ல என்பதை நிரூபிக்க வேண்டும்'' என்றார்.

# லிபியாவில் சிறைச்சாலை அருகில் 1, 300 மனித எலும்புக் கூடுகள் மீட்பு

திரிபோலி,செப்.27

லிபியாவில் உள்ள அபு சலிம் சிறைச்சாலையின் அருகில் உள்ள புதைகுழியிலிருந்து 1300 சடலங்களின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

லிபியாவின் தலைநகர் திரிப்போலிக்குத் தெற்கே இந்தச் சிறைச்சாலை இருந்துள்ளது. இந்தச் சிறைச்சாலைப் படுகொலைகள் 1996ஆம் ஆண்டு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. அரசியல் எதிரிகளைக் கைது செய்து விசாரித்த பின்னர் படுகொலைகள் நடைபெற்றுள்ளதாகவும் சுமார் 2000 பேர்வரை



கொல்லப்பட்டதாகவும் மனித உரிமைகள் கழகம் தெரிவிக்கிறது. எடுக்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகள் சுமார் 15 வருடங்கள் பழையவை என்றும் தெரிவிக்கப்படுகிறது. லிபியப் புரட்சிக்கான ஆர்பாட்டங்கள் நடைபெற்ற போதும் பலர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் பலரே இவ்வாறு கொல்லப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## சோமாலிய ஐ.நா.அலுவலக வளாகத்தில் குண்டுவெடிப்பு

சோமாலியாவின் தலைநகர் மொகாதிசு நகரில் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சொந்தமான சுரங்க நடவடிக்கை அலுவலகம் அருகே குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவி வருகிறது. இதில் ஒருவர் பலியானார். பலர் படுகாயமடைந்தனர்.

நியூயோர்க் நகரில் ஐ.நா சபை பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்று வரும் வேளையில் சோமாலியாவில் ஐ.நா வளாகத்தில் குண்டுவெடிப்பு நிகழ்ந்திருப்பது சர்வதேச அளவில் கவனிப்புப் பெற்றுள்ளது.

# ஆபிரிக்க மக்களுக்கான உதவித் தொகை; உலக வங்கியால் நான்கு மடங்காக அதிகரிப்பு

ஆபிரிக்காவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை உலக வங்கி அதிகரித்துள்ளது.

மில்லியன் கணக்கான மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக கடந்த ஜூலை மாதம் உறுதியளிக்கப்பட்டதை விட நான்கு மடங்கு அதிகமான தொகையை உலக வங்கி வழங்கவுள்ளது.

அரைநூற்றாண்டுக்குப் பின்னர் குறித்த பிராந்தியத்திலுள்ள நாடுகள் கடுமையான வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் கென்யா, எதியோப்பியா, எரித்தியா, மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளில் வரட்சியால் பாதிக்கப்பட்ட சுமார் 13 மில்லியன் மக்களுக்கு உதவிகளை வழங்க ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை பற்றாக்குறை காணப்படுவதாகச் சுட்டுக்காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
27 செப்ரெம்பர் 2011 செவ்வாய்க்கிழமை

# பங்குசனின் அபார சதம் கைகொடுக்க இறுதியாட்டத்துக்குக் கொக்குவில் மத்தி



யாழ்ப்பாணம்,செப்.27

பங்குசனின் ஆட்டம் இழப்பின்றிப் பெறப்பட்ட சதம் கைகொடுக்க இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழக அணி.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் லீக் ஆட்டத்தின் இறுதிப் போட்டியில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக்கழக அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது.

பங்குசன் ஆட்டம் இழக்காமல் 104 ஓட்டங்களையும், கிரிபாலன் 30 ஓட்டங்களையும் உத்தமகுமரன் 19 ஓட்டங்களையும் உமாநாத் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்ரல் விளையாட்டுக்கழக அணி சார்பாக ஜெயபாலன் 10 ஓவர்கள் பந்து வீசி 43 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் றஜீவ்குமார் 10 ஓவர்கள் பந்துவீசி 40 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மயூரன் 10 ஓவர்கள் பந்துவீசி 54 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சலிஸ்ரன் 10ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

252ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்ரல் விளையாட்டுக்கழக அணி 41.2ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் றொகான் ஆட்டம் இழக்காமல் 55 ஓட்டங்களையும் றஜீவ்குமார் 38 ஓட்டங்களையும் கலிஸ்ரன் 28 ஓட்டங்களையும் சலிஸ்ரன் 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி சார்பாக சுலோசன் 10 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் பிரதீஸ் 6 ஓவர்கள் பந்து வீசி 17ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் சாம்பவன் 8 ஓவர்கள் பந்துவீசி 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். 73 ஓட்டங்களால் கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# வேலணை ஐயனார் அணி சம்பியன்




வேலணை,செப்.27

வேலணை துறையூர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் ஐயனார் சனசமூக நிலையம், ஐயனார் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் 63 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஐயனார் சனசமூக நிலையம்-ஐயனார் விளையாட்டுக்கழகம் ஆகியவை இணைந்து நடத்திய தீவக அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புங்குடுதீவு சென். சேவியர்ஸ் 'ஏ' பிரிவு அணியை எதிர்த்து வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக அணி 3-0 என்ற கோல் கணக்கில் புங்குடுதீவு சென். சேவியர் 'ஏ' பிரிவு அணியை வெற்றிகொண்டது.

சகல துறை ஆட்ட நாயகனாக வ.கோகுலன் தெரிவு செய்யப்பட்டார்.

பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், நாடாளுமன்ற குழுத் தலைவர் சந்திரகுமார், வேலணைப் பிரதேசசபைத் தலைவர் சிவராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-23)

# வைரவிழாக் கொண்டாட்டக் கிரிக்கெட்; மூன்றாமிடத்துக்கான ஆட்டம் இன்று



வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்

யாழ்ப்பாணம், செப்.27

வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு மைதானத்தில் வைர விழாவை முன்னிட்டு நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகத்தினரால் வடமராட்சி பாடசாலைகளுக்கு இடையிலான 20-20 கிரிக்கெட் போட்டியின் மூன்றாமிடத்துக்கான ஆட்டம் இன்று மதியம் 1.30 மணிக்கு வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி அணி மோதவுள்ளது.

கழுகுகள் விளையாட்டுக் கழகத் தலைவர் க.சதீஸ் தலைமையில் இடம் பெறும் மேற்படி போட்டிக்குப் பிரதம விருந்தினராக சட்டத்தரணி திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.கே.டி.டபிள்யூ.பி. குமாரசிங்க, முன்னாள் உதைபந்தாட்ட வீரரும் நெற்கொழு விளையாட்டு மைதானத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவருமான க. இராமச்சந்திரனும், கௌரவ விருந்தினராக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் க. தர்மலிங்கம், வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரியின் அதிபர் கி.இராசதுரை ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர். (த-23)

# ஹொக்கிச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கி சங்கத்தின் ஏற்பாட்டில் 15 வயதுப் பிரிவினருக்கான ஹொக்கிச் சுற்றுப்போட்டி ஆண், பெண் இருபாலாருக்கும் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் இன்றாகும். ஹொக்கிச் சங்கச் செயலாளர் ப.தர்மகுமாரனிடம் வரவை உறுதிப்படுத்துமாறு கூறப்பட்டுள்ளது. (ம-302)

# காலிறுதி வரை முன்னேறியது உடுவில் மகளிர்

யாழ்ப்பாணம்,செப்.27

தேசிய மட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டி கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பெண்கள் கல்லூரி மைதானத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. யாழ். மாவட்டத்தில் இருந்து சென்ற உடுவில் மகளிர் கல்லூரி காலிறுதி வரை சென்று போராடித் தோற்றது. இதில் முதல் சுற்றில் ரத்தினபுர சுமனா பெண்கள் பாடசாலை சமுகம் தராமையினால் உடுவில் மகளிர் கல்லூரி காலிறுதிக்கு நேரடியாகத் தேர்வானது.

இதில் கொழும்பு சென். லோறன்ஸ் பெண்கள் கல்லூரியை எதிர்த்தாடிய உடுவில் மகளிர் கல்லூரி தோல்வியடைந்தது. உடுவில் மகளிர் கல்லூரி 10:08, 8:8, 10:8, 10:15 முன்னிலை பெற்றபோதும் இறு தியில் 38:39 என்ற புள்ளிகளை பெற்று ஒரு புள்ளி வித்தியாசத்தினால் அரை இறுதி வாய்ப்பை இழந்தது. பாடசாலைகள் கூடைப் பந்தாட்டச் சம்மேளனத்தின் செயலாளர் நோயல் கூரே உடுவில் மகளீர் கல்லூரியின் சிறந்த ஆட்டத்தை பாராட்டினார்.இந்தப் பாடசாலை 2010இல் தேசிய மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றது. (த-302)

# 30ஆவது நிமிடத்தில் அடித்த கோலால் பருத்தித்துறை லீக் அணி வெற்றி

யாழ்ப்பாணம், செப்.27

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இன்ரலீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றது.

வவுனியா உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது. முதல்பாதி ஆட்டம் ஆரம்பமாகி 10 நிமிடத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட அணி வீரன் காண்டீபன் தனது அணிகான முதலாவது கோலினை அடித்தார். இதனால் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

வவுனியா உதைபந்தாட்ட லீக் அணியினர் தமது அணிக்காக கோலினை அடிப்பதற்கான பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் கோல்களைப் பெறமுடியவில்லை. இதனால் முதலாம் பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட ஆட்டம் இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக ஆரம்பமான போது இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களை அடிக்க வேண்டும் என்ற நோக்கோடு களம் இறங்கினர். இதனால் இரண்டாம் பாதி ஆட்டம் மிக விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகி 15 நிமிடத்தில் வவுனியா உதைபந்தாட்ட லீக் அணியினர் தமது அணிக்கான முதலாவது கோலினை அடித்தனர்.

[illegible] ஒரு கோலினை அடித்ததால் ஆட்டம் சமநிலையை அடைந்தது. இரண்டு அணியினரும் மேலும் கோல்களைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு எதிர் அணியினரின் கோல் பரப்பினை மாறிமாறி ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

இதன் பயனாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வீரன் கீயூட் 30 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான இரண்டாவது கோலினை அடித்து தனது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர். ஆட்ட முடிவில் பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் அணி 2:1 என்ற கோல்கணக்கில் வவுனியா உதை பந்தாட்ட லீக் அணியை வெற்றி கொண்டது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பை இந்தியன்ஸ் மயிரிழையில் வெற்றி



இலக்கை சரித்த மகிழ்சியில் மலிங்க

மும்பைக்கும், ரினிடாட் ரொபாகோவுக்கும் இடையிலான நேற்றைய ஆட்டத்தில் மும்பை ஒரு இலக்கு வித்தியாசத்தில் வெற்றி கொண்டது. இறுதிப் பந்து வரை

யாருக்கு வெற்றி என்று தீர்மானிக்க முடியாத பரபரப்பான ஆட்டத்திலேயே மும்பை வெற்றி பெற்றது. 99 ஓட்டங்களை வெற்றியிலக்கா விரட்டிய மும்பை அணி

ராயுடு மற்றும் இறுதிக்கட்டத்தில் மலிங்கவின் அதிரடியுடன் இந்த வெற்றியை பதிவு செய்தது.

சம்பியன் லீக் தொடரின் குழு 'ஏ' ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும் மேற்கிந்தியத் தீவுகளின் ரினிடாட் ரொபாகோ அணியும் பெங்களூரில் மோதின.

சச்சின் நேற்றைய ஆட்டத்திலும் பங்குபற்றவில்லை. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ரினிடாட் ரொபாகோ அணித் தலைவர் டரன் கங்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக லென்டல் சிம்மன்ஸ், அட்ரியன் பரத் களமிறங்கினர். ஆரம்பத்தில் இவர்கள் அதிரடியாக ஆடினர். மலிங்க வீசிய முதலாவது பந்துபரிமாற்றத்திலேயே பரத் இரண்டு நான்கு ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். அடுத்த பந்து பரிமாற்றத்தை நெச்சிம் வீச முதலாவது பந்திலேயே சிம்மன்ஸ் நான்கு ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். மூன்றாவது பந்து பரிமாற்றத்தை மீண்டும் மலிங்க வீச இறுதிப் பந்தில் இலக்கு நேரடியாகத் தாக்கப்பட்டு பரத் 11 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்த பந்து பரிமாற்றத்தை சஹாலா வீச முதலாவது பந்தில் மீண்டும் சிம்மன்ஸ் 4 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். அதே பந்து பரிமாற்றத்தில் டரன் பிராவோ அதிரடியாக 6 ஓட்டங்களை விளாசினார். நெச்சிம் வீசிய 5 ஆவது பந்து பரிமாற்றத்தில் சிம்மன்ஸ் 6 ஓட்டங்களை விளாசிய போதும் இறுதியில் அவரது பந்து பரிமாற்றத்திலேயே ஆட்டமிழந்தார். மிகவும் நுட்பமான முறையில் 'ரன் அவுட்டில்' ஆட்டமிழந்தார். சிம்மன்ஸ் 18 பந்துகளில் 21 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

முதலாவது 50 ஓட்டங்களை எட்டுவதற்கு அணி 33 பந்துகளை சந்திக்க வேண்டியிருந்தது. அணி 57 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இலக்குகளின் சரிவு ஆரம்பித்தது. அணித் தலைவர் டரன் கங்கா 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்த பந்து பரிமாற்றத்தை ஹர்பஜன் வீச முதலாவது பந்திலேயே டினேஸ் ராம்டீன் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். மறுமுனையில் அதிரடியாக விளையாடிய டரன் பிராவோ 15 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ச்சியாக சீரான இடைவெளியில் இலக்குகள் வீழ்த்தப்பட்டது. அணி 78 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சேர்வின் கங்கா, ஹர்பஜனின் பந்து வீச்சில் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கெவன் கூப்பர் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் மலிங்கவின் பந்து வீச்சிலும் அடுத்து நுழைந்த



ஆட்ட நாயகன் ராம்போல்

ராம்போல் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் 'ரன் அவுட்'டிலும் ஆட்டமிழந்து வெளியேறினர். இருப்பினும் ஒரு முனையில் தனித்து நின்று போராடிய மத்திய வரிசை வீரர் மொஹமட் 23 ஓட்டங்களை அணியில் அதிக பட்ச ஓட்ட எண்ணிக்கையை பெற்றார்.

இறுதியில் 16.2 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் ரினிடாட் ரொபாகோ 98 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் ஹர்பஜன் 4 பந்து பரிமாற்றங்கள் வீசி 22 ஓட்டங்கள் கொடுத்து 3 இலக்குகளையும், மலிங்காவும் 4 பந்து பரிமாற்றங்கள் வீசி 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு இலகுவான இலக்கை மும்பை விரட்டியது. சுமன், பிளிசாட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். ஆரம்பத்திலிருந்தே ஓட்டங்களை பெறுவதற்கு இந்த ஜோடி சிரமப்பட்டது. 2.3 பந்து பரிமாற்றங்களில் 11 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பத்ர' வீசிய பந்து வீச்சில் பிளிசாட் 2 ஓட்டங்களுடன் வெளியேறினார். அணி மேலதிகமாக 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சுமன் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய பிராங்லின், சைமன்ஸ் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ராம்போலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினர். தொடர் ஆட்டமிழப்புகளால் மும்பை 5.1 பந்து வீச்சுக்களில் 16 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் இணைந்த ராயுடு, பொலாட் ஜோடி சிறிது நேரம் இலக்கு சரிவை சமாளித்து ஆடியது. இருப்பினும் பொலாட் 9 ஓட்டங்களுடன் நர்னியின் பந்து வீச்சில் துரதிஷ்டவசமாக ஆட்டமிழந்தார். 8.3 பந்து பரிமாற்றங்களில் 33 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை மும்பை இழந்திருந்தது. தொடர்ந்து இணைந்த ராயுடு, சதிஷ் ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களை சேர்த்தது. இடையிடையே நான்கு ஓட்டங்களையும் விளாசியது. 6 ஆவது இலக்குக்காக 32 ஓட்டங்கள் இணைப்பாட்டமா பெறப்பட்ட நிலையில் சதிஷ் 14 ஓட்டங்களுடன் நர்னியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். மும்பை அணி 15.4 பந்து பரிமாற்றங்களில் 65 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது. அடுத்து களம் புகுந்த ஹர்பஜன் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். 17 ஆவது பந்து பரிமாற்றத்தில் ஹர்பஜன் ஆறு ஓட்டங்களை விளாசி மும்பையின் ஓட்டவேகத்தை அதிகரிக்க முயன்றார். இருப்பினும் அடுத்த பந்து பரிமாற்றத்திலேயே ஹர்பஜன், ராயுடுவினால் 'ரன் அவுட்'டாக்கப்பட்டார்.

ஹர்பஜன் 7 பந்துகளில் 9 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து மலிங்க களம் புகுந்தார். இருப்பினும் மறுமுனையில் ராயுடு சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி மும்பையின் வெற்றி வாய்ப்புக்காய் போராடினார்.

மலிங்க களம் புகுந்த வேகத்திலேயே நான்கு ஓட்டத்தை விளாசி கணக்கை ஆரம்பித்தார். இறுதி இரண்டு பந்து பரிமாற்றங்களில் 15 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் 19 ஆவது பந்து பரிமாற்றத்தை ராம்போல் வீசினார். அந்த பந்து பரிமாற்றத்தில் 4 ஓட்டங்கள் மட்டுமே பெறப்பட இறுதிப் பந்து பரிமாற்றத்தில், 11 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலைக்கு மும்பை தள்ளப்பட்டது. சேர்வின் கங்கா இறுதிப் பந்து பரிமாற்றத்தை வீசினார்.

இறுதிப் பந்து பரிமாற்றத்தின் இரண்டாவது பந்தில் மலிங்க ஆறு ஓட்டங்களுக்கு விளாச மும்பையின் வெற்றி ஓரளவு உறுதியானது. 4 பந்து வீச்சுக்களில் 4 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் மலிங்க அடுத்த பந்தில் ஓர் ஓட்டத்தை பெற்று ராயுடுவுக்கு வாய்ப்பு வழங்கினார். இருப்பினும் நான்காவது பந்து வீச்சில் மலிங்க 'ரன் அவுட்டில்' வெளியேற்றப்பட்டார். மலிங்க 8 பந்துகளில் ஒரு 4 ஓட்டம், ஒரு ஓட்டம் அடங்கலாக 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்த பந்தில் ராயுடு இரண்டு ஓட்டங்கள் பெறுவதற்கு முயன்று ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். ராயுடு 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். ராயுடுவின் ஆட்டமிழப்புடன் மும்பை 97 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை இழந்தது. இறுதிப் பந்தில் இரண்டு ஓட்டங்கள் வெற்றிக்கு தேவை என்ற நிலையில் சஹாலா களமிறங்கினார். சந்திந்த பந்தை 'லெக்' திசையில் தட்டிவிட்டு முதலாவது ஓட்டத்தை ஓடி முடித்து வெற்றிக்கு தேவையான இரண்டாவது ஓட்டத்துக்கு முனைந்தார். சஹாலா மற்றைய ஓட்டத்தை முடிப்பதற்குள் இலக்குக் காப்பாளர் டினேஸ் ராம்டின் கைக்கு சென்ற போதும் அவரால் உரிய முறையில் இலக்கை தகர்க்க முடியவில்லை. பரபரப்பான இறுதி நிமிடத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி ஒரு இலக்கினால் வெற்றி கொண்டது.

பந்து வீச்சில் ராம்போல் 4 பந்து பரிமாற்றங்கள் வீசி 17 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை கைப்பற்றினார். நர்னி 4 பந்து பரிமாற்றங்கள் வீசி 10 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை வீழ்த்தினார். ராம்போல் ஆட்ட நாயகனாக தெரிவானார். (15)

## மன்னிப்பு கேட்க வேண்டும்

இந்திய வீரர்கள் டெண்டுல்கர், டிராவிட் இருவருக்கும் ஆட்டத்தை வெற்றிகரமாக முடிக்க தெரியாது என்று தனது புத்தகத்தில் விமர்சித்த அக்தர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபை அதிகாரியும், ஐ.பி.எல். புதிய தலைவருமான ராஜீவ் சுக்லா கூறியுள்ளார்.

டெண்டுல்கர் போன்ற வீரர்கள் அக்தரிடம் இருந்து எந்த ஒரு நற்சான்றிதழும் பெற வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவரது திறமையை ஆஸ்திரேலிய ஜாம்பவான் டொன் பிரட்மனே புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்.

அக்தருக்கு அவர் எதையும் நிரூபித்து காட்ட வேண்டியதில்லை என்றும் சுக்லா கூறினார். இதற்கிடையே, அக்தரின் சுயசரிதை புத்தக வெளியீட்டு விழா மும்பையில் நேற்று முன்தினம் நடப்பதாக இருந்தது. திடீரென எந்த காரணமும் கூறப்படாமல் புத்தகம் வெளியீட்டு விழா ரத்து செய்யப்பட்டுள்ளது. (15)

## இங்கிலாந்துக்கு அதிர்ச்சியளித்த தீவுகள்

இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான இரண்டாவது 'ர'-20' ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 25 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் இரண்டு ஆட்டங்கள் கொண்ட தொடர் 1 - 1 என்று சமநிலையில் முடிவடைந்துள்ளது.

இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது 'ரி-20' ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 113

ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. சாமுவேல்ஸ் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், சாள்ஸ் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சமிட்பட்டேல் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு இலகுவான ஓட்ட இலக்கை விரட்டத் தொடங்கிய இங்கிலாந்து அணி மேற்கிந்தியத் தீவுகளின் சிறப்பான களத்தடுப்பு மற்றும் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது 16.4 பந்து பரிமாற்றங்களில் 88 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து சுருண்டது. பென் ஸ்ரோக்ஸ் மட்டும் 31 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் மாதுரின் 4 பந்து பரிமாற்றங்களில் 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளைச சரித்தார். அத்துடன்



ஜொனி பெயாஸ்ரோ ஆட்டமிழக்கையில்

இங்கிலாந்தின் 4 வீரர்கள் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினர். ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் மாதுரின் தெரிவு செய்யப்பட்டார். இதேவேளை முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 10 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர்கழக உறுப்பினர் திருமதி குமுதினி விஸ்வநாதன் அவர்களின் அன்புத் தந்தை

**சண்முகம் கந்தையா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர், நலன்புரிகழகம், யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| ராஜரட்ணம் | அம்பிகா தேவி |
|---|---|
| தோற்றம்: 10.08.1940 | 19.06.1948 |
| மறைவு: 21. 06. 2008 | 08 .10.2010 |

*திதி: அமாவாசை*

ஓராண்டு ஆனதுவோ எமைவிட்டு சென்று
ஈரவிழிகள் இன்னும் காயவில்லை
சலனமின்றி இறைவனிடம் சென்றதன் மாயமென்ன
பாசத்தின் உறைவிடமே பண்பின் இலக்கணமே
நித்தம் துடிக்கும் இதயம் உமை நினைக்கத் தவறவில்லை
சீர்பெற்ற உங்கள் வாழ்வு இனி சொர்க்கத்திலும் சிறக்கட்டும்.

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி குமாரவேலு சறோஜினி



கந்தரோடை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு சறோஜினி நேற்று(26.09.2011) திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-மங்களம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குமாரவேலுவின்(இளைப்பாறிய ஆசிரியர்)அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பத்மலோஜினி, மீனலோஜினி , சோதிலிங்கம், மற்றும் ஜெயேந்திரன் (PHFO) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஞானகுமாரன், குமரகுருபரன், பொன்னம்பலம், ரதிதேவி யசோதரன் (ஆசிரியர், கிளிநொச்சி இந்துக்கல்லூரி) யசோதாதேவி, ரமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திராணி(யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி),பத்மினி, வரதராசா, கலையரசி(வலிகாமம் தெற்கு பிரதேச சபை)இராசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் சுதர்சன்,அபிராமி, அபிநயன், அபிலாஷ், றோமான்,தர்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 26.09.2011 திங்கட்கிழமை கந்தரோடை இந்து மயானத்தில் நடைபெற்றன

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை
## ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்
### கேள்வி அறிவித்தல்

*யாழ்ப்பாணம்,ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, 84 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினது ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் இருக்கும் 63 KVA மின்பிறப்பாக்கியிலிருந்து மேற்படி நிலையத்துக்கு மின்சாரம் வழங்குவதற்குத் தேவையான ஆலோசனையையும், மின்சாரம் வழங்குவதற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவினையும் வழங்குவதற்கு, ஆகக் குறைந்தது மேற்படி சேவையில் மூன்று வருட கால அனுபவமுள்ள நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*இது சம்பந்தமாக மேலதிக தகவல்களுக்கும், பார்வையிடுவதற்கும் அலுவலக நாள்களில் பணிப்பாளர்/ ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் அவர்களை மேற்படி நிலையத்தில் 0212229873 என்னும் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொள்ள முடியும். தங்களது விண்ணப்பங்களை 2011.10.07 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.*

**பதிவாளர்
26.09.2011**

## காணி, பொலிஸ் அதிகாரம் வேண்டாம் மாகாண முதலமைச்சர்கள் தீர்மானம்

கொழும்பு, செப். 27

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தேவையில்லை என்று மாகாண முதலமைச்சர்களின் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டியவில் முதலமைச்சர்கள் மாநாடு நடந்தது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து தகவலை மத்திய மாகாண முதல்வர் சரத் எக்கநாயக்க வெளியிட்டார். காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேவையில்லை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றார் அவர்.

அதற்காக ஒதுக்க வேண்டிய நிதியை அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்தலாம் என்றும் அவர் காரணம் கூறினார். மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று அண்மைக் காலமாக வலியுறுத்தி வந்த கிழக்கு முதல்வர் சந்திரகாந்தன் (பிள்ளையான்) இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்குக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ள நிலையிலேயே அதற்கு முட்டுக்கட்டை போடும் வகையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்ற முதலமைச்சர்கள் அனைவரும் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்தவர்கள். (உ)

## உடையார் மிடுக்கு நாடகம் கைலாசபதி கலையரங்கில்

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறை நடத்தும் கண்காட்சியை முன்னிட்டு ''உடையார் மிடுக்கு'' நாடக ஆற்றுகை கைலாசபதி கலை அரங்கில் நேற்று இடம்பெற்றது.

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் எழுத்தில் உருவான ''உடையார் மிடுக்கு'' க.ரதிதரனின் நெறியாள்கையில் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமானது.

1940 ஆம் ஆண்டு கால வாழ்வியலை மையப்படுத்திய தாகவும் யாழ்ப்பாண பேச்சு வழக்கினை உள்ளடக்கியதாகவும் நாடகம் காட்சிப்படுத்தப்பட்டது.யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை நாடகமும் அரங்க கலை மாணவர்களின் உணர்வுபூர்வமான நடிப்பாற்றலினால் கலையரங்கு அமைதி கலந்த நிலையில் பார்வையாளரால் நிரம்பிக் காணப்பட்டது. (எ-323)

## இன்று கொடியேற்றம்

வலி- வடக்கு, செப்.27

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுர நாதர் ஆலய வருடாந்த கொடியேற்றம் இன்று பகல் 10 மணிக்கு நடைபெற்றுள்ளது.

தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும் உட்சவத்தில் 5 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 6 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஒ-86)

**சேவை**

தரமான முறையில் றிச் கேக் ஓடருக்கு செய்து தரப்படும். விலை-35/=
தொடர்பு-
0755629308, 0214900836

**கார் விற்பனைக்கு**

Mitsubishi Lancer Good Condi-tion13-xxxx,Alloy wheel, Manual, Brand New,AC, Rs-465000/=
தொடர்பு:-0777585920

**தவறிவிட்டது**

முருகன் கோயிலடி சங்கரத்தை வட்டுக்கோட்டை துணவி எனும் முகவரியைச் சேர்ந்த இராசு செல்வராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (740673661V) கல்வியங்காட்டுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொடர்பு: [illegible]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



**யோகரத்தினம் மீனலோஜினி
(ஆசிரியை)**

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 03.10.1964 | 28.08.2011 |

திதி: அமாவாசை

இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உன்பாச நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில்
அணையாத தீபமாய் ஒளிரும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

*கடந்த 28.08.2011 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விள்க்கு யோகரத்தினம் மீனலோஜினி [ஆசிரியை] அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று [27.09.2011] செவ்வாய்க்கிழமை கெனடிவீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.*

*கெனடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு.*

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை கந்தவனம் ஆசாரியார்



அல்வாயைப் பிறப்பிட'மாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தவனம் ஆசாரியார் நேற்று (26.09.2011) திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கணபதிப்பிள்ளை ஆசாரியார்-இலட்சுமி தம்பதியரின் புதல்வனும். காலஞ்சென்றவர்களான சிதம்பரம் செல்லையா ஆசாரியார், முருகுப்பிள்ளை ஆசாரியார், கதிர்காமு ஆசாரியார் ஆகியோரின் உடன் பிறப்பும் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும் தேவவிக்னேஸ்வரனின் (டென்மார்க்) அருமைத் தந்தையும் கலைவாணியின் மாமனும் சுந்தரேசன் நிவேதிகா (லண்டன்), தயான் ஜனனிதா (டென்மார்க்), நிரோஜிதா (டென்மார்க்) ஆகியோரின் பேரனும் ஹரிணியின் பூட்டனும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் சின்னாலடி அல்வாயிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (28.09.2011) புதன்கிழமை நடைபெற்று காலை 9 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மையானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள்,அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'கலையகம்'
சின்னாலடி
அல்வாய்.*

*தகவல்:*
க.புலேந்திரன்
(கலைமகன்-பேறாமகன்)

### திருமதி இராசையா திரேசம்மா



ஊற்காவற்றுறை, கரம்பனைப் பிறப்பிடமாகவும் 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதிஇராசையா திரேசம்மா நேற்று (26.09.2011) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மரியம்மா மற்றும் விறிசிற் அம்மா, யோசேப், குணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரிமளத்தின் அன்பு மைத்துனியும் இராசேஸ்வரி, பற்றிமா, சதாநாயகி, ஜெசிந்தா (சுவிஸ்), கெனடி(சுவிஸ்), றெஜினா (நியூசிலாந்து), யூடிற்றா ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற செல்வரெட்ணம் மற்றும் அந்தோனிப்பிள்ளை ரெட்ணசிங்கம் (பாரின்), இராசநாயகம்(சுவிஸ்), ராஜேஸ்(சுவிஸ்), றிச்சேட் (நியூசிலாந்து), ரவிச்சந்திரன் (செயலாளர், இல.செஞ்சிலுவைச் சங்கம்-சண்டிலிப்பாய் பகுதி) ஆகியோரின் அன்பு மாமியும், அன்ரனிதாஸ் (கண்ணன்), சந்திரன் (கொலண்ட்), அனிஸ்ரன், றொபின்சன், றொபினா, அனிற்றா, சகாயராஜ் (லண்டன்), ஷாம், சுவிஸ்ரன் (சுவிஸ்), ஜெனிஸ்ரன் (சுவிஸ்), றெபேக்கா (சுவிஸ்), செபஸ்ரியன் (சுவிஸ்), கிறிஸ்ரீனா (நியூசிலாந்து), டோமினிக் (நியூசிலாந்து), மதுஷா, சயானா, கமில்டன் ஆகியோரின் பேர்த்தியும், நிரோஜிகா, தனு, தர்மிலன், றிதன் ஆகியோரின் பூட்டியும் அருட்சகோதரி அமிர்தாவின் (தி.க.ச) பெரிய தாயும் ஆவார்.

ஆன்னாரின் நல்லடக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
ரவிச்சந்திரன் (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. செயலர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளித்த ஜனாதிபதி, அவசரகாலச் சட்டத்தை முற்றாக நீக்கிவிட்டதாகவும், ஆனால் மீண்டும் பயங்கரவாதம் தலையெடுப்பதைத் தடுக்க பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளதாகவும் கூறினார்.

போர் முடிவுக்கு வந்த பின்னரும் வடக்கில் படையினரை அதிகளவில் நிலைநிறுத்தி வைத்திருப்பது எதற்கு என்று பான் கீ-மூன் எழுப்பிய கேள்விக்கு, ''வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மட்டுமே படையினர் நிலைப்படுத்தப்பட்டுள்ளனர். அதுவும் அங்கு போதிய சிவில் தொழிலாளர்கள் இல்லாததன் காரணமாகக் கட்டுமானப் பணிகளில் படையினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்'' என்று அரசு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக் கூறுதல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக இருதரப்புக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளன. பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வுகள் தொடர்பிலும் இரு தரப்பினருக்கும் இடையில் பெரும் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு பான் கீ-மூனைச் சந்தித்தபோது, வெளியிடப்பட்ட அறிக்கையில், ஐ.நா. தலைமையிலான நிபுணர் குழு தனக்கு ஆலோசனை வழங்கவே நியமிக்கப்பட்டதாக கூறப்பட்டிருந்ததாகவும், அந்த வாக்குறுதியை ஐ.நா. காப்பாற்றவில்லை என்றும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் மீள்குடியமர்வு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள், தமிழ்க் கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சு என்பன தொடர்பாகவும் பான் கீ-மூனிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இலங்கைக்குத் தெரியாமல் நிபுணர்குழு அறிக்கையை ஜெனிவாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது தொடர்பாகவும் மகிந்த ராஜபக்ஷ, ஐ.நா பொதுச்செயலரிடம் தனது விசனத்தை வெளிப்படுத்தினார் என்று அரசின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐ.நாவின் வழிமுறைகள் மீறப்பட்டுள்ளதால் ஐ.நா மீதான நம்பகத்தன்மையை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார்.

இந்த விடயத்தில் ஐ.நாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தொடர்பாடல் குறைபாடுகள் இருந்ததை பான் கீ-மூன் ஒப்புக் கொண்டார். இலங்கை ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் பந்துல ஜெயசேகர வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு இறுக்கமானதாகவும் வாதப்பிரதிவாதங்கள் கொண்டதாகவும் இருக்கும் என்று எதிர்பார்த்து ஜனாதிபதி தன்னுடன் ஆறு பேரை அழைத்துச் சென்றிருந்தார் என்று கருதப்படுகிறது. அதேவேளை ஐ.நா பொதுச்செயலரும் அதற்குத் தயாராகத் தனது ஆலோசகர்கள், அதிகாரிகளுடன் சந்திப்பில் பங்கேற்றிருந்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் பந்துல ஜெயசேகர வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜனாதிபதியுடன் ஜி.எல்.பீரிஸ், பாலித கொஹன்ன, ஜாலிய விக்கிரமசூரிய, லலித் வீரதுங்க, காமினி சேனாரத், சஜின் வாஸ் குணவர்த்தன ஆகியோர் சந்திப்பில் பங்கேற்றனர் என்ற கூறப்பட்டுள்ளது.

ஐ.நாவுக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியும் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி இருப்பவருமான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளாதமை முக்கியமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஐ.நா பொதுச்செயலருடன் அவரது அரசியல் விவகாரச் செயலர் லைன் பாஸ்கோவும், பிரதம அதிகாரி விஜய் நம்பியாரும் சந்திப்பில் கலந்து கொண்டனர் என்று அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவி பிள்ளையின் நியூயோர்க் பிரதிநிதி ஐவன் சிமோனோவிக், பாலியல் வன்முறைகள் மற்றும் மோதல் குறித்த ஐ.நா. சிறப்பு ஆலோசகர் மாகொற் வோல்ஸ்ரோம் ஆகியோரும் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதும் அதுபற்றிய தகவல் இந்தச் செய்திக்குறிப்பில் மறைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில்
168 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
யா/ மத்திய கல்லூரி மாணவன்
செல்வன் **ஜெயசீலன் வேணுசாந்**
அவர்களை
மேலும் கல்வியில் சிறந்து விளங்க மனமாரப் பாராட்டுவதுடன் அவரின் கல்விக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்தி, அவர் மேலும் கல்வியில் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:- 'வேணு அபிசான் தையலகம்'
அப்பா, அம்மா, தம்பி அபிசான். அன்ரிமார் - றஜீதா சங்கீதா,
மாமாமார் - ஶ்ரீதரன், பகீரதன், அத்தை - நான்சி, மஞ்சு,
மச்சாள்(ன்) - என்சி, எனோ, எனோசன். அப்பப்பா, அம்மம்மா,
இல.19 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்

## வாழ்த்துகிறோம்

எமது நண்பனும்,
யாழ். மாவட்டச் செயலக மனிதவள
அபிவிருத்தி இணைப்பாளருமான

**திரு. க.கருணாகரன்**
(B.BA (F.M Special)
M.A. (Pub.Ad)



மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றமையையிட்டு மகிழ்வடைவதுடன் அவர் மேன்மேலும் பட்டங்கள் பெற்று உயர்வடைய மனதார வாழ்த்துகின்றோம்.

நல்லூர் நண்பர்கள்.

## சட்டத்தரணிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் முற்படுத்த உள்ளார்.

சட்டத்தரணி ஒருவரால் மன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்த சந்தேகநபரை நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து இந்தப் பொலிஸார் கைது செய்த விதம் தொடர்பில் அதிருப்தி அடைந்த சட்டத்தரணிகள் கடந்த ஒரு வாரகாலமாக நீதிமன்ற அமர்வுகளைப் புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து கடந்த 24ஆம் திகதி இந்த 7 பொலிஸாரும் இடைநிறுத்தப்பட்டனர். அவர்களைப் பணி இடைநிறுத்தம் செய்தால் மட்டும் போதாது, நீதிமன்றில் முற்படுத்தவேண்டும் என்று சட்டத்தரணிகள் வலியுறுத்தி இருந்தனர்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் இடைநிறுத்தப்பட்ட பொலிஸார் தமது தரப்பு விளக்கத்தை நேற்று உதயனுக்குத் தெரிவித்தனர். அவர்கள் கூறியதாவது:-

கடந்த மார்ச் மாதம் கோண்டாவிலில் கொலை ஒன்று தொடர்பாக விசாரணை நடத்தியதில் கிளிநொச்சியில் வசித்து வரும் கோப்பாயைச் சேர்ந்த பாபு (வயது 29) என்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவர்கள் கொடுத்த தகவல்களின் பேரில் 3ஆவது சந்தேகநபரான அன்ரன் நித்தியராஜா (சுஜி) என்ற நபரைத் தேடிவந்தோம்.

நீண்ட நாள்களாக அவர் எங்களிடம் மாட்டாமல் பதுங்கித் திரிந்து வந்தார். இந்த நிலையில் கடந்த 19ஆம் திகதி குறித்த சந்தேகநபர் யாழ். நீதிவான் நீதிமன்றத்தினுள் காணப்பட்டார். எங்களைக் கண்டதும் அவர் மெல்ல நழுவி அங்கிருந்து தப்ப முயற்சித்தார். எனவே அவரை நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே அழைத்து வருவதற்கு முயன்றோம்.

அதனைக் கண்ட அவரது மனைவி, தனது கணவனைப் பிடித்துச் செல்கிறார்கள் என்று பெருங்குரலெடுத்துக் கத்த ஆரம்பித்தார். உடனே சந்தேகநபரும் எம்முடன் வராது முரண்டு பிடிக்க ஆரம்பித்தார். அதனால் நாங்கள் அவரை பலவந்தமாக இழுத்து வரவேண்டியதாகி விட்டது - என்றனர்.

கோண்டாவில் கொலைச் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக கோப்பாய் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சிதம்பரநாதன் தலைமையில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டிருந்தது. அவர்கள் 7 பேருமே இப்போது பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

(உ-14)

## ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சதி முயற்சி நீண்ட காலமாகவே இடம்பெற்று வந்தது. சதி குறித்து ஏற்கனவே எமது கட்சியில் இருந்து வெளியேறி தற்போது அமைச்சர் பதவியை வகித்து வரும் விமல் வீரவன்ஸகூட பலதடவை சுட்டிக்காட்டியிருந்தார். அது இப்போது உண்மையாகி இருக்கிறது. இப்போதும் அதிருப்தியாளர்களின் பின்னணியில் இந்தியாவின் உளவுத்துறையான 'றோ' இருப்பதாக நாம் அறிகிறோம். இலங்கையில் உள்ள முற்போக்கான கட்சிகளை இரண்டாகப் பிரிப்பதில் இந்த உளவுத்துறை பெரும் பங்கை ஆற்றி வருகிறது. ஜே.வி.பியை இரண்டாக உடைக்கலாம். ஆனால், கட்சியை இல்லாமலாக்க எவராலும் முடியாது''- என்றார் அவர்.

(உ-சி)

## ஆற்றமு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.நாட்டிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினை மஹிந்த பெற்றுக் கொடுக்காததன் காரணமாக அவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாடுகளை நோக்கி செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்பட்டுள்ளதாக அவர் கவலை தெரிவித்தார்.

''அதனை மறைக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் மற்றும் ஏனைய தரப்பினர் மீது ஆளுங்கட்சியினர் பொய்யான குற்றச்சாட்டுகளை அள்ளித் தெளித்து வருகின்றனர். இலங்கையின் எந்தவொரு பிரச்சினைக்கும் இன்னும் உரிய வகையிலான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க மஹிந்த அரசினால் முடியவில்லை'' - என்றார் ரணில்.

## கோஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற குடும்பஸ்தரே சம்பவத்தில் உயிரிழந்தார். ஓயார்சின்னக்குளம் பகுதியில் இடம்பெற்ற பூப்புனித நீராட்டுவிழா ஒன்றில் கலந்துகொண்ட சிலருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே மோதலாக உருவெடுத்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர். பின்னர் அவர்கள் தங்களுக்குள் பயங்கரமாக அடித்துக்கொண்டார்கள்.

சம்பவத்தில் பலத்த அடிகாயங்களுக்கு உள்ளான ஓயார் சின்னக்குளம் இரும்பு வர்த்தகரான கமல்ராஜ், சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மோதலுடன் தொடர்புடையதான 6 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசிறி பண்டார தெரிவித்தார். (உ-சி)

## ஈழத் தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்திருந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். வாடகை வீடு ஒன்றில் தங்கி இருந்த சமயம் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ''பிடிபட்டவர்கள் வைத்திருந்த ஆவணங்களை ஆய்வுசெய்து வருகிறோம். இவர்களிடம் விசாரணை நடத்த உளவுத்துறை அதிகாரிகள் வந்துள்ளனர்'' என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்வதற்குக் கேரளாவை இலங்கைத் தமிழர்கள் ஒரு மையமாகப் பயன்படுத்த முயற்சித்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளில் இலங்கைத் தமிழர்கள் கேரளாவிலிருந்து ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 2 முயற்சிகளைக் கேரள பொலிஸார் முறியடித்திருந்தனர். (சி)

## தலைமையை..


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரங்கள் போன்றவை மாற்றுக்குழுவின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன என்று அந்தப் பேச்சாளர் கூறினார்.

கட்சியை முற்றாகக் கைப்பற்றும் நடவடிக்கைகளில் ஒன்றாக மாவட்ட மட்டங்களில் கூட்டங்களை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் ஜே.வி.பி. மாற்றுக்குழு தெரிவித்தது. இதேவேளை, ஜே.வி.பியின் உட்கட்சிப் பூசல் ஒரு முடிவுக்கு வந்துகொண்டிருக்கின்றது என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் கூறினார்.

## மரண அறிவித்தல்கள்

### பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி



(தேவி அச்சக ஸ்தாபகர்)

சிதம்பரத்தைப் பிறப்பிடமாகவும் 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி நேற்று (26.09.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

114/19, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பாலசிங்கம் செல்லம்மா

மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் செல்லம்மா நேற்று (26.09.2011) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் செல்வி புஸ்பராணி (ஓய்வு பெற்ற ஆசிரியை),தர்ம குணரத்தினம் (கனடா), உதயகுமார் (ஆசிரியர், யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் சகுந்தரராணி,மதினி ஆகியோரின் அன்பு மாமியும் சங்கித், கரிஸ் (கனடா)ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2011) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சந்திரபுரம்
மட்டுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்நாட்டில் வகுக்கப்பட வேண்டும்; கொழும்பில் 'இந்து' பத்திரிகை ஆசிரியர் ராம்

கொழும்பு, செப்.27

இனப்பிரச்சினை தொடர்பான கேள்விக்குப் பரிகாரம் காண வேண்டிய பெரும் பொறுப்பு இலங்கைக்கு உண்டு. இது உள்நாட்டிலேயே வகுக்கப்பட்ட பரிகாரத் திட்டமாகவும் இருக்க வேண்டும் என இந்து பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்.ராம் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்துப் பத்திரிகை, தமிழகத்தில் இருந்த வெளியாகும் போதும் தமிழர் விரோதப் போக்குடன் செயற்படுகின்றது என்று குற்றச் சாட்டு உண்டு. அதன் பிரதம ஆசிரியரான 'ராம்' எண்பதுகளில் தமிழ் இயக்கங்களின் ஆதரவாளராகக் காட்டிக் கொண்டவர். பின்னர் தமிழ் இயக்கங்கள் இந்தியா 'றோ' வின் கட்டுப்பாடுகளை மீறிய போது அவற்றைக் கடுமையாக எதிர்த்தவர். வன்னயில் இறுதிப்போரில் மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டபோது, தமிழ்மக்களின் இழப்புக்களை இருட்டடித்து மகிந்த அரசுக்கு முழு ஆதரவு தெரிவித்துவந்தவர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

என ராம் தெரிவித்துள்ளமை வருமாறு தமிழ் பேசும் மக்களின் தேவைகள், அபிலாஷைகள் ஆகியவற்றை உள்ளடக்கி இலங்கையின் ஐக்கியம், ஆட்புல ஒருமைப்பாடு ஆகியவற்றின் கட்டுக்கோப்புக்கு இசைவாகவே இப்பரிகாரத் திட்டம் வகுக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 'இந்தியாவும், இலங்கையும் பிரவேசிக்கும் எதிர்காலம்' என்ற தலைப்பில் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு அவர் பேசினார். இலங்கை - இந்திய சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.



இலங்கை - இந்திய சங்கத்தின் விரிவுரை கொழும்பில் இடம் பெற்றபோது இந்து பத்திரிகையின் தலைமை ஆசிரியர் என்.ராம், தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் காந்தா ஆகியோர் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

வெளியிலிருந்து திணிக்கப்படும் ஒரு தீர்வுத் திட்டம் தேவையில்லை. ஆனால், ஒரு பரிகாரம் தேவை. அது உள்நாட்டிலேயே உருவானதாகவும் இருக்கலாம். அல்லது வெளியிலிருந்து உங்களால் ஜீரணிக்கப்பட்ட கருத்துகளின் மூலம் வடிக்கப்பட்டதாகவும் இருக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது ஒரு நீண்டகால பிரச்சினையாகும். ஆதலால், உங்களுக்கு அவசியம் ஒரு பரிகாரம் தேவை. இலங்கையில் தற்போதைய நிலைப்பாட்டில் நாங்கள் இதையே வெகு ஆவலோடும், ஆர்வத்தோடும் எதிர்பார்க்கின்றோம் என்றும் ராம் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வை அழுத்தமாக வலியுறுத்தியுள்ள அவர், சீனத் தலைவர் டெங்கியா பிங் கையாண்ட ஒரு பழமொழியை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்.

அதுதான்: "சுண்டெலிகளைக் கௌவிப் பிடிக்கும்வரை அந்தப் பூனை வெள்ளையா? கறுப்பா? என்ற வாதம் பயனற்றது."

"இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சிங்கள அரசியல்களுக்கு ஒரு புதிய வாய்ப்பு உருவாகியுள்ளது. இரு பெரும் கட்சிகளான ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியும், ஐ.தே.கவும் ஒருங்கிணைந்து பொதுவான திட்டமொன்றை வகுக்கலாம். தமிழ்ப் பிரதேசங்களான வடக்கு, கிழக்கின் அதிகாரப்பகிர்வை நோக்காகக்கொண்டே இது உருவாக்கப்படவேண்டும். அப்படியானால், இது ஒரு நியாயபூர்வமான தீர்வாக அமையக்கூடும். இந்த இலக்கை, இலங்கை எட்டிவிடும் என்பது தனது தனிப்பட்ட நம்பிக்கையாகும் என்றும் அவர் விவரித்தார்.

இந்தியாவில் பல்லினங்கள் வாழ்கின்றன. அந்த இனங்களின் நம்பிக்கைகள், அபிலாஷைகள், அவற்றைப் பேணும் நடைமுறைகள், அனுபவங்கள் ஆகியவை குறித்தும் அவர் தமதுரையில் விளக்கினார். "இலங்கையில் சமீபத்தில் நிகழ்ந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நம்பகத்தன்மை படைத்த ஒரு சக்தியாக உருவெடுத்துள்ளது. அதே வேளை, முன்னணி சக்தியாக மாறியுள்ளது. இது பேச்சுகள் நடத்துவதற்கான உரித்துடைய ஓர் அமைப்பாகத் திகழ்கிறது" என்றும் ராம் சுட்டிக்காட்டினார்.

இலங்கை ஜனாதிபதியும், மற்றவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அணுகியுள்ளார்கள். இது ஒரு மகத்தான செயல்பாடு. அதன் நம்பகத்தன்மையை இதன் மூலம் அங்கீகரிக்கிறார்கள். அவர்கள் பேச்சுகளில் ஈடுபடும்போது, எதிர்பார்ப்புகள் பெரிய அளவில் இருக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 1987 ஆம் வருட ஜூலையில் கைச்சாத்தான இந்தியா - இலங்கை உடன்படிக்கை குறித்தும் அவர் பிரஸ்தாபித்தார். "இலங்கையின் அதி முக்கியமான இத்தேசிய பிரச்சினைக்கான தீர்வு, இந்நாட்டின் ஐக்கியம், இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு இசைவாகவே அமைய வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது என்றும் ராம் சுட்டிக்காட்டினார். (உ-சி)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



25.09.2011 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட வலுதூக்கும் போட்டியில் (Power Liftting) 62kg எடைப்பிரிவில் முதலாம் இடம் பெற்ற எமது கழக பயிற்றுநர்
**ஜீவானந்தன் ஜீவகன்**
அவர்கள் மேலும் பல வெற்றிகள் பெற வாழ்த்துகின்றோம்.

அங்கத்தவர்கள், நிர்வாகம்,
JAFFNA GYM
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் நுழைவு மாணவர்களுக்கான இலவச ஆங்கில இரண்டுநாள் வகுப்பு
அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்
பிரிவு 1 : 28.09.2011 காலை 11-1 மற்றும் 29.09.2011 காலை 11-1
பிரிவு 2 : 01.10.2011--12.30-2 மற்றும் 02.10.2011--12.30-2
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

விசேட சலுகையுடனான பதிவுகள் நடைபெறுகிறது NIBM
அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள்
சிங்கள மொழிக்கற்கைநெறி
கணினிக்கற்கைநெறி (வார/வாரஇறுதி)
ஆங்கிலக்கற்கைநெறி (வார/வாரஇறுதி)
மற்றும்
வியாபாரக்கற்கை நெறி
077 071 6974 , 021 222 0360
No-40 College Road , Jaffna

பணிநிலை வேண்டும்
1. இலத்திரனியல் உபகரண விற்பனையாளர்.
2. இணைய உதவியாளர் (Net)
மேற்படி பதவிகளுக்கு உடனடியாக ஊழியர்கள் தேவைப்படுகின்றார்கள்.
சுயவிவரக் கோவையுடன் 30.09.2011 இற்கு முன்னர் நேரில் வரவும்.
பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்,
பஸ் நிலையம், பருத்தித்துறை.
தொ.பே: 021 2263652

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
25% கட்டணக் கழிவு
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months
Spoken English With Grammar - Quick Learning Course (1 ½ Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◈ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◈ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◈ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◈ 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தாரதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
◈ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◈ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
அனைத்து பிரிவுகளும் ஆரம்பமாகின்றன
Batch I 29.09.2011 2.00 - 4.00
Batch II 30.09.2011 8.00 - 9.00
Batch III 03.10.2011 2.00 - 4.00
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, W.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 13A, Annai Teresa Lane, (Near Rambaikulam Girls Convent) Rambaikulam, Vavuniya.

DCM
A/L 2012, 2013 & PAPER
பொருளியல் S. வரதராஜன்
கணக்கீடு AP.பகீரதன்
வணிகக்கல்வி V.முரளி
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்.நகர்

Eliza Agnew BPO Services Centre Pvt Ltd
Vacancies exist for Trainees to be trained for a Business Process Outsourcing (BPO) unit to be setup in association with a Sri Lankan Multi National Company from Colombo with the operation based at the Uduvil Girls' College.
Position : Data entry Trainees
Age : Preferred age group below 30 years.
Minimum Qualification : G.C.E O/Levels – Credit Mathematics and English; G.C.E A/L Minimum of 3 passes.
Other required competencies:
❖ Knowledge of English
❖ IT skills – ability to operate a Computer, access the internet and knowledge of Microsoft windows, preferably Excel
❖ Ability to adapt to change quickly
❖ Willingness to learn and good in working with numbers
❖ Team player, able to work under pressure
❖ Good time management skills
❖ Willingness and ability to work extended hours when required.
*Send your CV'S before 3rd Oct., 2011 to following address.*
Short listed Candidates will be Called.
Those who had previously applied need not do so again.
Principal, J/Uduvil Girls' College
Uduvil, Chunnakam

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள்

# உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்

**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம். இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

### "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
  1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
  2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:



1. **திட்டத்தின் இயல்பு** - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. **வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை** - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. **உயர் நுழைவுக் கட்டணம்** - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. **இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும்** - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. **நிதி வருமானங்கள்** - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. **மீண்டும் வாங்கும் கொள்கை** - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. **பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல்** - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.
8. **திட்டத்தைப் பற்றிய தகவல்கள்** - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. **நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள்** - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. **இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல்** - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. **பயிற்சிகளும் விற்பனை உதவிகளும்** - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. **திட்டத்தின் எதிர்காலம்** - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. **செயற்பாட்டுப் பிரதேசங்கள்** - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடுழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு
தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA
60 growth& stability
1950 - 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழிப்பாயிருங்கள் !

பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்கள்
(31.08.2011 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
4. இந்தியன் பாங்க்
5. இலங்கை வங்கி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
8. கபீப் பாங்க் லிமிடெட்
9. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
10. சம்பத் பாங்க் பிஎல்சி
11. சிற்றி பாங்க் என்ஏ
12. செலான் பாங்க் பிஎல்சி
13. டீஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட்
14. டொயிச் பாங்க் ஏஜி
15. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
16. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
17. கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. பப்ளிக் பாங்க் பேர்காட்
19. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
20. மக்கள் வங்கி
21. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
22. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
23. ஸ்ராண்டட் சார்ட்டட் பாங்க்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சனச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சன்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் லிமிடெட்
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்ரட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட் (*)
6. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
7. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
8. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
9. ஏசியா கொமர்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் லிமிடெட்
11. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
12. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
13. கிராமின் மைக்ரோ கிறடிற் கம்பனி லிமிடெட்
14. கொமர்சல் கிறடிட் பிஎல்சி
15. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
16. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
17. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
18. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
19. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
20. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
21. செங்கடகல பினான்ஸ் கம்பனி பிஎல்சி
22. சொவ்றிலொயிக் பினான்ஸ் பிஎல்சி
23. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
24. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
25. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. த மல்டி பினான்ஸ் கம்பனி லிமிடெட்
27. த ஸ்ராண்டட் கிறடிற் லங்கா லிமிடெட் (*)
28. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
29. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட்
30. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் லிமிடெட்
31. பீப்பிள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி
32. பீப்பிள்ஸ் மேச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்
33. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
34. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
35. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
36. லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
37. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
38. ஸ்வர்ணமகால் பினான்சஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்

(*) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவர்களால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற் கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.
- ஒழுங்குபடுத்தப்படாத மற்றும்/ அல்லது மேற்பார்வை செய்யப்படாத நிறுவனங்களில் வைப்புக்களை மேற்கொள்வதன்மூலம் அவற்றிற்கு இரையாகாமல் உங்களுடைய கடின உழைப்பால் பெற்ற பணத்தை பாதுகாக்கும்படி பொதுமக்கள் வலிமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA
60 growth & stability
தொ.பேசி: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk
தொ.பேசி: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk


# அற்புதமானது வாழைப் பூ



இயற்கையின் படைப்புகளில் பூக்கள் மிகவும் அற்புதமானவை. ஒவ்வொரு பூவும் ஒவ்வொரு விதமான அழகையும் மருத்துவக் குணங்களையும் கொண்டுள்ளன. அந்த வாழைப்பூ பற்றி தெரிந்து கொள்வோம்.

நம் முன்னோர்கள் வாழையைப் பெண் தெய்வமாக வழிபட்டனர். மணவிழா, மங்கள விழாக்களில் வாழை முக்கிய இடம் பெற்றிருக்கும். வாழையின் அனைத்து பாகங்களும் மருத்துவக் குணம் கொண்டுள் என. வாழையிலையில் சாப்பிடும் போது ஆரோக்கியத்தைத் தருவதுடன் ஆயுளையும் அதிகரிக்கச் செய்கிறது.

குலை வாழையை தலைமகனோடு ஒப்பிடுகின்றனர். வாழைப்பூ எந்த அளவுக்கு நமக்குப் பயன்படுகிறது என்பதற்கு இதுவே மிகச் சிறந்த சான்று.

வாழைப்பூ துவர்ப்புச் சுவையுடையது. நீழிரிவு நோயாளிகளுக்கு இது சிறந்தது.

தற்போது நாம் உண்ணும் உணவில் உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துகள் கிடைப்பதில்லை. இரசாயனம் கலந்த உணவையே உண்ண நேரிடுகிறது. போதிய உடற்பயிற்சியின்மை, சில நேரங்களில் அதிக வேலைப்பளு, சரியான நேரத்துக்கு உணவு உண்ணாமை போன்றவையால் உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டு செயலிழந்து நீரிழிவு நோயை உண்டாக்குகின்றன. நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழைப்பூவை சுத்தம் செய்து சிறிது சிறிதாக நறுக்கி அதனுடன் சின்ன வெங்காயம், பூண்டு, மிளகு சேர்த்து பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் கணையம் வலுப் பெற்று உடலுக்குத் தேவையான இன்சுலினைச் சுரக்கச் செய்யும். இதனால் நீரிழிவு நோய் கட்டுப்படும்.

- உடல் சூடு உள்ளவர்கள் வாழைப் பூவுடன் பாசிப்பருப்பு சேர்த்து கடைந்து நெய் சேர்த்து வாரம் இருமுறை உண்டு வந்தால் உடல் சூடு குறையும்.

சிலருக்கு அஜீரணக் கோளாறு ஏற்பட்டு அதனால் வயிற்றுக்கடுப்பு உண்டாகும். இதனால் சீதக் கழிச்சல் ஏற்படும். இவர்கள் வாழைப்பூவை நீரில் கலந்து அதனுடன் சீரகம் , மிளகுத்தூள் சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டி அந்த நீரை இளஞ்சூடாக அருந்தி வந்தால் வயிற்றுக்கடுப்பு நீங்கும்.

பெண்களுக்கு வாழைப்பூ வரப்பிரசாதம் என்று சொல்லலாம். மாதவிலக்குக் காலங்களில் பெண்களுக்கு அதிக உதிரப்போக்கு உண்டாகும். அவர்கள் வாழைப்பூவின் உள்ளே இருக்கும் வெண்மையான பாகத்தை பாதியளவு எடுத்து நசுக்கி சாறு பிழிந்து சிறிது மிளகுத்தூள் சேர்த்து கொதிக்க வைத்து அதனுடன் பனங்கற் கண்டு கலந்து அருந்தி வந்தால் உதிரப் போக்கு கட்டுப்படும். உடல் அசதி, வயிற்று வலி குறையும்.

கை கால் எரிச்சலால் அவதிப்படுபவர்கள் வாழைப்பூவை இடித்து அதனுடன் சிற்றாமணக்கு எண்ணெய் சேர்த்து வதக்கி கை கால் எரிச்சல் உள்ள பகுதிகளில் ஒற்றடம் கொடுத்து வந்தால் கை கால் எரிச்சல் குணமாகும். வறட்டு இருமல் உள்ளவர்கள் வாழைப்பூ இரசம் செய்து அருந்தி வந்தால் இருமல் நீங்கும்.

# கண்களை பாதுகாக்க

உடல் உறுப்பில் மிக முக்கியமானது கண். சாதாரணமாக நாம் பார்ப்பதால் கண்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை. ஆனால், கண்களுக்கு மிக அருகில் அதிக ஒளியுடன் கூடிய கணினியைத் தொடர்ந்து பல மணி நேரங்கள் பதர்த்துக் கொண்டிருப்பதால் கண் பாதிக்கப்படுகிறது.

கண்களுக்கு ஓய்வு என்றால் கண்களுக்கு இருளைக் கொடுக்க வேண்டும். கண்களுக்கு இருளைக் கொடுப்பது மட்டுமல்லாமல், மனதின் சிந்தனையை

கண்களுக்கு ஓய்வளிக்க பல ஆசனங்கள் உள்ளன. கண்களுக்கு அதிக இரத்த ஓட்டம் அளிக்க தலைகீழ் ஆசனம் உள்ளது. சிரசாசனம் செய்வதால் கண்களின் பார்வை அதிகரிக்கும்.

மேலும், கண்களுக்கு திராடகம் என்ற ஒரு பயிற்சி உள்ளது. அதாவது, ஒரு இருளான அறையில் மெழுகுவர்த்தி ஏற்றி வைத்து அதைப் பார்த்துக் கொண்டே இருந்தால் கண்களுக்கு அதிகமான சக்திக் கிடைக்கும்.

சூரிய நமஸ்காரம் செய்வதாலும் கண் பார்வை அதிகரிக்கும். அதற்குத்தான் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா என்று கேட்பார்கள். எனவே சூரிய நமஸ்காரம் செய்வதால் கண் பார்வை அதிகரிக்கும்.

பொதுவாகச் சூரிய நமஸ்காரத்தை அதிகாலையில் சூரிய உதயத்துக்கு முன்பாக செய்ய வேண்டும். சூரிய நமஸ்காரத்தை வெவ்வேறு வேளைகளில் செய்வதால் வெவ்வேறு பலன்கள் கிட்டும்.

முக்கியமான விஷயம் என்னவென்றால், தினமும் 8 மணிநேரம் நிம்மதியாகத் தூங்க வேண்டும். அதுவும் மிகவும் இருளான ஒரு அறையில் தூங்குவதே கண்களுக்கு ஒரு நல்ல ஓய்வாக அமையும்.

பின் தூங்கி முன் எழுதல் மிகவும் நல்லது. அதாவது சீக்கிரமாகத் தூங்கி அதிகாலையில் எழுவது உடலுக்கும் புத்துணர்ச்சி கிட்டும்.

அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது இடையே உங்கள் கண்களுக்கு ஓய்வு தேவைப்படும்போது, உள்ளங்கைகள் இரண்டையும், நமது கண்களில் அழுத்தி சிறிது நேரம் வைத்திருந்து மூச்சை உள்ளிழுத்து வெளிவிட்டால் நல்ல பலன் கிடைக்கும்.

புருவம் கண்களுக்குத் தேவையான வெப்பத்தை சீராக வைத்திருக்க அமைக்கப்பட்ட ஒரு இயற்கை கொடையாகும். புருவங்களின் சூட்டால்தான் கண்களின் குவியங்கள் எளிதாக சுருங்கி விரிகின்றன.

ஆனால், அதை விட அதிகமான வெப்பத்தை நம் கண்கள் கணினியில் இருந்து பெற்று வருகின்றன. எனவே அந்த வெப்பத்தைக் குறைக்க புருவங்களில் எண்ணெய் வைப்பது கண்களுக்கு குளிர்ச்சியை அளிக்கும்.

பொதுவாக கண்களுக்கு ஓய்வு என்றால், எதையும் உற்று அல்லது கூர்ந்து பார்க்காமல் இருந்தாலே போதும். அதாவது சாதாரணமாக கண்களால் எந்தப் பொருளையும் பார்ப்பதால் கண்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

எதையாவது உற்றுப் பார்க்கும் போதுதான் அதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. சிறிது நேரம் எந்தப் பொருளையும் உற்றுப் பார்க்காமல், எதைப் பற்றியும் சிந்திக்காமல் இருப்பதும் நல்ல பயிற்சிதான்.

மதியம் சாப்பிட்ட பின்னர் தளர்வாக 15 நிமிடம் அமர்ந்திருந்தாலும் கூட நல்லது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org